KALKI
6.9.87
ரூ. 2.

கல்கி



ஆகாய அரசி

— முதல் பெண் பைலட்டின் வெற்றிக் கதை

என்றும் மிளிரும் நட்சத்திரங்கள்.



மறக்கத்தான் முடியுமா 'உம்ராவ் ஜான்' படத்திலே ரேகா நடிப்பின் சிகரத்தை எட்டியதை! காவியச் சிறப்புகள் நிறைந்த இந்த திரைப்படம் காலமெல்லாம் நிலைக்கும், இதயத்தை உருக்கும், இன்பத்தை பெருக்கும்.

ரேகா திறமையாக நடித்துள்ள பல படங்களில் இதுவும் ஒன்று.

அதே வகையில் என்றும் பிரகாசிக்கும் மற்றொரு நட்சத்திரம் பற்றி உங்களுக்கு தெரிவிக்கிறோம்.

அதுதான் கிராம்ப்டன் கிரீவ்ஸ் கலர் டிவி.

இது மிக நவீன தொழில்நுட்பங்கள் பொருந்திய டெலிவிஷன் —உங்கள் உடமை


பார்க்கக் கூடிய இந்த விசேஷ டிவி, பல சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

இதைவிட பரிபூரண 12-மாத உத்தரவாதம் தருகிறது. மிக விலையுயர்ந்த பகுதியான பிக்சர் ட்யூபுக்குக்கூட இதன் காப்புறுதி உள்ளது.

இணையில்லா ஸர்வீஸ் பின்பலம் உள்ளது.

நிலைவிருக்கட்டும் காலமெல்லாம் உங்கள் நம்பிக்கைக்கு உரியது கிராம்ப்டன் கிரீவ்ஸ்.

ஆம், காத்துக்கொள்ள வேண்டிய எங்கள் பெயரும் புகழும் மிகப் பெரியது அன்றோ.



Crompton Greaves

கிராம்ப்டன் கிரீவ்ஸ் டிவி

ஏனெனில், பல்லாண்டு இன்பமூட்டும் சாதனங்கள் சில உண்டு.

கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக்ஸ் & ஹவுஸ்ஹோல்டு அப்ளையன்ஸஸ்.* கிளை: நம். 3ஏ கோடம்பாக்கம் ஹை ரோடு, த.பெ.எண். 3316, நுங்கம்பாக்கம், சென்னை 600 034. உம்ராவ் ஜானின் இந்தப் படம் அளிப்புதவி: முஸாஃபர் அலி.

Enterprise/CGL/24 Tn

ஜெயலலிதாவுக்கு மந்திரி பதவி?

வம்பு மார்க்கெட்:

ராஜீவ் மயமான நோட்டீஸ் போர்டு!

நாற்பது கோடி மக்களுக்குச் சுதந்திரம் வந்தாலும், சுதந்திரம் அடையாத ஒன்று, நம் டீ. வி. தான்.

இதுவரை செய்திகளிலும், செய்தி மலர்களிலும் ஆதிக்கம் செலுத்தி வந்த ராஜீவ், இப்போது டீ. வி. அலுவலக நோட்டீஸ் போர்டுகளிலும் விளம்பரமாகிக் கொண்டிருக்கிறார்.

சுதந்திர தினத்துக்கு மறுநாள் டீ. வி. அலுவலகம் பக்கம் சென்றவர்களை நோட்டீஸ் போர்ட் திகைக்க வைத்தது. 'ராஜீவ் புகழ் வாழ்க' 'ராஜீவ் ஜிந்தாபாத்' என்று கோஷங்கள் எழுதி நோட்டீஸ் போர்டில், வைத்திருந்தார்கள். ஓர் அரசாங்க அலுவலகத்தில் இப்படி ஒரு கட்சி கோஷமா? விசாரித்ததில், இது அங்குள்ள காங்கிரஸ் சார்பு யூனியன் பிரமுகர் ஒருவரின் அடாவடிச் செயல் என்று தெரிய வந்தது.

இதை ஏன் ஸ்டேஷன் டைரக்டரோ, மற்றவர்களோ தடுக்கவில்லை?

பயம்தான்! அந்த யூனியன் பேர்வழி காங்கிரஸ் தலைவர்களுக்கு வேண்டியவராம். அவரை அடக்குவதற்காக ஒரு முறை டிரான்ஸ்ஃபர் செய்தார்களாம். அதை உடைத்துக் கொண்டு வந்துவிட்டாராம். ஆக, அவர் மீது நடவடிக்கை எடுக்கவோ, கூப்பிட்டுக் கண்டிக்கவோ, மேல் அதிகாரிகளுக்குத் தைரியம் இல்லையாம்!

இனி டீ. வி. அலுவலகத்தின் வாசலில் காங்கிரஸ் கொடியை அந்த ஆசாமி நிறுத்தி வைத்தாலும், யாரும் கேட்க மாட்டார்களாம்!

ஜெயலலிதா மந்திரியாவாரா?



மந்திரி பதவி என்பது ஜெயலலிதாவைப் பொறுத்தவரை கிட்டத் தட்ட ஒரு மாயமான் சமாசாரம் மாதிரி இருந்து வந்திருக்கிறது, இதுவரை.

அவர் அ. தி. மு. க. வில் நுழைந்த காலம் முதல் இதோ அதோ என்று இழுத்துக் கொண்டிருக்கிற விவகாரம் அது.

'இந்த விஷயத்தில் எம். ஜி. ஆர். படு சூரர். ஓடுகிற குதிரைக்குப் புல்லைக் காட்டிக் கொண்டே விரட்டுவது போல், இந்த மந்திரி ஆசையைக் காட்டிக் கொண்டே ஜெயலலிதாவைக் கட்சியில் மடக்கி வைத்து, வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்' என்கிறார்கள். அது முழுக்க முழுக்க உண்மை அல்ல. உண்மையில் ஜெயலலிதாவை மந்திரியாக்க எம். ஜி. ஆர் விரும்பவே செய்கிறார். பல முறை அப்படியொரு முடிவுக்கு வந்தும் விட்டார். ஆனால் அதை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது, கட்சிக்குள்ளிருக்கும் ஜெ. எதிர் கோஷ்டியின் சாமர்த்தியந்தான். அவருக்கு மந்திரி பதவி கொடுக்கலாம் என்று எம். ஜி. ஆர் முடிவுக்கு வரும்போதெல்லாம் 'ஜெ'யின் எதிரான சில செயல்களை ஆதார பூர்வமாக எம். ஜி. ஆருக்கு ஞாபகப்படுத்தி விடுவார்கள். அவ்வளவுதான். விஷயம் ஒத்திவைக்கப்படும்.

எம். ஜி. ஆர். அமெரிக்காவுக்குப் போகும் முன்னரே மந்திரி சபையில் மாற்றம் செய்ய விரும்பினார். அதாவது ஆர். எம். வீ.யையும் மீண்டும் மந்திரியாக்கி, கூடவே ஜெயலலிதாவையும் புதிதாகச் சேர்ப்பது என்று விரும்பினார். ஜெயலலிதாவுக்குப் பதவி கொடுப்பதற்காகத் தன்னையும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்கிறார் என்பதை ஆர். எம். வீ. புரிந்து கொண்டதும், தமக்கு மந்திரி பதவியே வேண்டாம் என்று சுழற்றிக்கொண்டார். 'வந்து பார்த்துக் கொள்ளலாம்' என்று எம். ஜி. ஆர். போயிருக்கிறார்.

வந்ததும் நடக்கப் போகும் மந்திரிசபை மாறுதலில் தாம் நினைத்ததை எம். ஜி. ஆர். அமுல்படுத்தியே தீருவார் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இதைத் தடுக்க, ஆர். எம். வீ. யும் தயாராகி வருகிறார்!

ராசியில்லாத ராஜீவ்



நம் பாரதப் பிரதமரை— 'ஒப்பற்ற பிரதமர்' என்று வர்ணித்துப் புல்லரித்துப் போவதில் இ. காங்கிரஸ் காரர்களுக்கு ஒரு பெருமை.

அவர் 'ஒப்பற்ற பிரதமரோ,' இல்லையோ, ஆனால் ஈடு இணையற்ற ஒப்பந்தம் பிரதமர் என்பது மட்டும் உண்மை.

தலைவலியா, வயிற்று வலியா எதற்கும் சர்வரோக நிவாரணி லேகியம் என்று ஒன்றை விநியோகிப்பார்களே, சில நாட்டு வைத்தியர்கள்,

— அப்படி எந்தப் பிரச்னையானாலும், அதற்கு ஒரு சர்வ நிவாரண ஒப்பந்தத்தைச் செய்து அந்தப் பிரச்னையையே மூட்டை கட்டிப் போட்டுவிடுவதில் சூராதி சூரர் நம்

ராஜீவ்ஜி. உலகில் வேறு எந்தப் பிரதம ரேனும் இவர் அளவுக்கு ஒப்பந்த மன்ன ஞகக் கொடி நாட்டியிரு''பார்களா என்பது சந்தேகம்தான்.

அவர் ஒப்பந்தங்களைச் செய்வதே ஒரு தனிப் பாணி. ஆங்கிலத்தில் பாக்கேஜ் **(Package)** என்கிருர்களே, அப்படி ஒட்டு மொத்தமாகப் பிரச்சினைகளைக் குண்டுக் கட்டாகக் கட்டி, ஒப்பந்தம் என்ற பெயரால் வாரிச் சுருட்டி அதை ஒரு மூலையில் போட்டு விடுவது. அதைத் தொடர்ந்து நாலைந்து வெற்றி விழா(?) கொண்டாடி டி. வி. யிலும், நாளிதழ்களிலும் தலைப்புச் செய்திகளாக்கி விளம்பரம் தேடிக் கொள்வது... அப்புறம் அதை அப்படியே அமுக்கி விடுவது.

நம் பாரத மாண்புமிகு செய்த பல ஒப்பந்தங்களின் தலைவிதி அதுதான். அஸ்ஸாம் ஒப்பந்தம், குஜராத் ஒப்பந்தம், படுகொலைகள் புகழ் பஞ்சாப் ஒப்பந்தம்...

— இந்த வரிசையில் கடைசியில் நடந்திருப்பது இலங்கை — இந்திய ஒப்பந்தம். இதுவும் மற்ற ஒப்பந்தங்கள் மாதிரி ஏட்டளவோடு நிற்காமலிருந்தால் சரி.

எம். ஜி. ஆரின் வாரிசு?



'எம். ஜி. ஆரை எதிர்க்காமல் — அதே சமயம் எம். ஜி. ஆருக்குத் தெரியாமலே அவருக்கு வாரிசாகிவிடுவது' என்றநோக்கில் செயல்பட்டு வருகிருர் ஒருவர்.

ஜெயலலிதாவா? — இல்லை. அந்த அளவு ராஜதந்திரம் ஜெயலலிதாவுக்குக் கிடையாது. அவர் படபடப்பானவர். எம். ஜி. ஆராகப் பார்த்து ஏதாவது செய்தால் தான் அவர் பலன் பெற முடியும்!

அப்படியாளுல் ஆர். எம். வீ. யா? ஊஹூம்... ஆர். எம். வீக்குத் தம்முடைய எல்லைகள் தெரியும். எம். ஜி. ஆரைத் தாண்டி எதுவும் செய்யத் துணிய மாட்டார். எம். ஜி. ஆரின் நிழலில்தான் வாரிசுப் போராட்டம் நடத்துவார்.

அப்படியாளுல் வேறு யார்?

அதிகம் பேசாதவர். ஆளுலும் 'அடுத்த இடத்தை' மிகக் கண்காணிப்புடன் பார்த்துக் கொண்டேயிருப்பவர். 'இவர்தான் எம். ஜி. ஆரின் கருத்துக்குச் சொல் வடிவம் தருபவர்'என்று காங்கிரஸ் மேலிடமேஒப்புக் கொள்ளும் அளவு தன்னைத் தயார் செய்து கொண்டிருப்பவர்.

அட, இன்னுமா புரியவில்லை, உங்களுக்கு?

பலாப்பழத்தை அரிந்து சுளையை விண்டு வைக்கிற மாதிரி சொன்ளுல்தான் உங்களுக்குப் புரியுமா?

— ஒட்டக்கூத்தன் ஜி

டேக் இட் ஈஸி, ப்ளீஸ்!



- ஒருவர்: ''இது என்ன! ஜானவாசம் வரும்போது மாப்பிள்ளை எழுந்து நின்று, இரண்டு பக்கமும் பார்த்துக் கையசைத்துக்கும்பிட்டுக்கொண்டே வருகிறார்?

  மற்றவர்: அட, உனக்குத் தெரியாதா? அவர் ஒரு அரசியல்வாதி!

  — எஸ். விஜயகுமார், தஞ்சாவூர் — 6

- எதிர்க்கட்சி எம். எல். ஏ. ஆளும் கட்சி அமைச்சரிடம்:

  அண்ணே! ஏதோ என்னால ஆனது 4 பேருக்குப் பாலிடெக்னிக்கில் அட்மிஷன் வாங்கிக் கொடுத்ததிலே ரெண்டு லட்சம் கெடச்சது... அதை நீங்க வச்சுக்கிட்டு எம் பையனுக்கு எம். பி. பி. எஸ். ஸீட் வாங்கிக் கொடுங்கண்ணே!

  — கணேசன், கோவை.

- முதல்வர்: உங்கள் வாரியத் தலைவர் பதவிக் கால நீடிப்புக் கேட்கிறீர்களே, இன்னும் முடியாத பணி ஏதாவது பாக்கியிருக்கிறதா?

  வாரியத் தலைவர்: ஆமாங்க என் பங்களா பாதியிலேயே நிக்குதுங்க!

  — ஆர். சம்பத், திருச்சி — 14

- நிருபர்: நீங்க ஆட்சிக்கு வந்தால் 'தண்ணீர் வராத குழாயே இருக்காதுன்னு வாக்குறுதி கொடுத்தீங்களே! அதை நிறைவேற்றி விட்டீர்களா?

  அரசியல்வாதி: ஓ! தண்ணீர் வராத குழாய்கள் எல்லாவற்றையும் எடுத்து விட்டேனே!

  — ஜே. பி. சந்திரா, நீடாமங்கலம்.

- ''வாக்காளப் பெருமக்களே! எனக்கு இல்லாத வியாதியே கிடையாது. ஆஸ்துமா, ரத்த அழுத்தம், டயாபடீஸ், அல்சர், கிட்னி கோளாறு போன்ற எல்லாமே என் உடம்பில் கூட்டணி ஆட்சி நடத்துகின்றன. மாரடைப்பு கூட வந்திருக்கிறது! எனவே எனக்கு வாக்களித்து எம். எல். ஏ. ஆக்கினால், இத்தொகுதியில் விரைவில் இடைத் தேர்தல் ஏற்பட்டு உங்களுக்கு ராஜோபசாரம் நடைபெறும்; நிறைய வசதிகள் பெருகும் என்பதை மிகவும், மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.''

  — எஸ். ராஜேந்திரன், மன்னார்குடி.

- உதவியாளர்: சார், இன்னைக்கு நம்ம தொகுதிக்கு விசிட் செய்யலாமா?

  அரசியல்வாதி: அட, அதுக்குள்ள ஐந்து வருஷம் முடிஞ்சிருச்சா?

  — அப்துல் காதர், கோவை.

(ரூ. 200 பரிசு சமமாக அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.)

- மந்திரி: நாட்டுப் பற்று மிக்கவன் நான், ஸ்விட்ஸில் கோடி ரூபாய் மதிப்புள்ள வீடு வாங்கினேனு என்ன? ஏதோ பெங்களூரில் வெறும் இருபது லட்ச ரூபாய்க்கு எளிமையாக ஒரு வீடு வாங்கினது கூடத் தப்பா...?!

  — சரீபா ஃபிர்தௌஸ், கோவை — 23

- மந்திரி: ''கடந்த ஏப்ரல் 15, 16 தேதிகளில் நான் பம்பாய் சிவப்பு விளக்கு ஏரியாவில் தங்கி இருந்தேன் என்று அண்டப் புளுகு புளுகும் எதிர்க்கட்சியினருக்கு நான் முக்கியமாக ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். அது ஏப்ரல் 15, 16 அல்ல. மே 15, 16!''

  — மதிஅசோக் அ. செந்தில், ஈரோடு — 2.

- ''மனுக்களை எல்லாம் உரிய இடத்துல சேர்த்துடறேன்னு தலைவர் சொன்னதற்கு அர்த்தம் என்னன்னு இப்பத்தான் புரியுது!''

  ''என்னன்னு?''

  ''பழைய பேப்பர் கடையில போட்டுக் காசாக்கிட்டாரு!''

  —எஸ். கே. பாபு, பம்பாய் — 78

- முதலமைச்சரிடம் செயலர்: நீங்கள் நான்கு மந்திரிகளை திடீர் டிஸ்மிஸ் செய்ததில் ஒரு தவறு நடந்துவிட்டது, சார்......

  முதலமைச்சர்: என்ன?

  செயலர்: அதில் ஒருவர் மத்திய மந்திரி!

  — எஸ். பிரியதர்சினி, மதுரை — 1.

- மந்திரி மனைவி: ''எல்லா விழாவிலும் ரிப்பன் கட் பண்ணி, பண்ணி, யார் தலையில ரிப்பனைப் பார்த்தாலும் 'டபால்'னு பாய்ஞ்சு கட் பண்ணிடறாரு, டாக்டர்!''


  — பி. சி. பாலாஜி, சென்னை — 21.

- நண்பர்: எம். எல். ஏ. பதவியை ராஜினாமாப் பண்ணப் போறீங்களாமே, ஏன்...?

  எம். எல். ஏ.: தலைவர்தான் எனக்கு மந்திரி பதவி தர்றேன்னுட்டாரே. அப்புறம் எம். எல். ஏ. பதவி வேற எதுக்கு?

  — கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா
  திருத்துறைப்பூண்டி.

கி.பி.



ஆண்டில் எங்கள் சேமிப்புத் திட்டங்கள் உங்களுக்கு எப்படியெல்லாம் கைகொடுக்கப் போகின்றன...

அந்த நாளும் வெகு தொலைவில் இல்லை!

காலம்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது...
நீங்கள் தோளிலும் கரத்திலும் தூக்கி வளர்த்த குழந்தை. இன்று பள்ளி செல்கிறாள். கால ஓட்டத்தில் கண்கவரும் கன்னியாக அவள் உங்கள்முன் நிற்பாள். 'அட! ஓய்வு பெறும் நாளும் நெருங்கி விட்டதே!' என்று நீங்கள் திகைக்கக் கூடும்...... இந்த எதிர்காலக் காட்சி உங்களைப் பயமுறுத்துகிறதா? கவலை வேண்டாம். இப்போதே புத்திசாலித்தனமாகத் திட்டமிடுவதன் மூலம் வருங் காலத்தை மகிழ்ச்சியுடன் எதிர் கொள்ளலாம். கத்தோலிக் சிரியன் பேங்க் வகுத்துள்ள சேமிப்புத் திட்டங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அவை உங்கள் நலனுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.
'ஜூபிலி வெல்த் பேர் டெபாசிட்' திட்டத்தைக் கவனியுங்கள். நீங்கள் சொந்தமாக வீடு அல்லது கார் வாங்குவதற்கோ அல்லது மற்ற பெரிய செலவுகளுக்கோ இது பெரிதும் உதவும்.
முதலீடு செய்யக்கூடிய அளவில் சிறுதொகை ஏதேனும் கைவசம் உள்ளதா? அதற்கு டயமண்ட் ஜூபிலி சர்ட்டிபிகேட் ஒன்று வாங்குங்கள். உங்களது சிறுதொகை நாளடைவில் பெருந்தொகையாக உருவெடுக்கும்.

ஓய்வு பெற்ற பிறகு தொடர்ந்து கூடுதல் வருமானம் பெற வேண்டுமானால் 'ஸ்வரக்ஷா' திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்.

எதிர்காலம் பற்றிக் கவலைப் படாமல் செல்வாளிகளாக வாழ்க்கை நடத்துவார்கள் சிலர். ஆனால் அவர்கள் வருந்தப்போவது உறுதி. எனவே, விவேகத்துடன் செயல் படுங்கள். கத்தோலிக் சிரியன் பேங்கிற்கு வருகை தாருங்கள். இதற்காக எதிர்காலத்தில் நிச்சயம் மகிழ்ச்சியடைவீர்கள்.

கத்தோலிக் சிரியன் பேங்க்
தி கத்தோலிக் சிரியன் பேங்க் லிமிடெட்
தலைமை அலுவலகம் : செயின்ட் மேரீஸ் காலேஜ் ரோடு
திருச்சூர் 680 020.

OBM 9626 TM



ஆகாய அரசி

—முதல் பெண் பைலட்டின் வெற்றிக் கதை.

தரை மட்டத்திலிருந்து பறவை போல் 'ஜிவ்' வென்று மேலெழும்பி ஒயிலாக உயர்த்திய மூக்குடன் வானின் உயரத்தை அனாயாசமாக அளக்க முற்படும் ஆகாய விமானத்தைக் காண்கையில், மனித ஆற்றலை எண்ணிப் பெருமிதம் பொங்குகிறது. கூடவே, 'ஆகா! நாமும் ஒருநாள் விமானப் பயணம் மேற்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்ற ஆசையும் முளை விடுகிறது. ஆனால் எத்தனை பேருக்கு ஒரு விமானத்தைப் பார்க்கையில், அதைச் செலுத்த வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது? அப்படியே ஓர் ஆர்வம் ஏற்படுவதாக வைத்துக் கொண்டாலும் அவர்களில் எத்தனை பேர் பெண்களாக இருப்பார்கள்?

இந்த வகையில் துர்பா பானர்ஜி வித்தியாசமான பெண்மணி. அவருக்குத் தமது குழந்தைப் பருவம் தொட்டே வித்தியாசமாக ஏதேனும் செய்ய வேண்டும் என்று எண்ணம். அவர் பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது இந்த எண்ணம் ஒரு திட உருவம் பெற்றது. இளைஞர்களை விமானம் செலுத்துவதில் பயிற்சி பெற அழைத்த பிஹார் ஃப்ளையிங் கிளப்பின் விளம்பரம் அவர் கருத்தைக் கவர்ந்தது. உடனே விண்ணப்பித்தார். அவர் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் உடனடியாக வந்து சேரும்படியும் பதில் கடிதம் வந்த போது ஆச்சரியப்பட்டார். உள்ளூர சிறிது கவலையும் பயமும் வேறு உறுத்தின — ஏனென்றால் தமது பெற்றோருக்குத் தெரியாமலேயே விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார் துர்பா!

நல்லவேளையாக, துர்பாவின் தந்தை முற்போக்குக் கருத்துக்களை உடையவர். நமது நாட்டுப் பெண்கள் பலவிதமான தொழில்களை மேற்கொள்ளத் துணிந்து முன்வர வேண்டும் என்ற அபிப்பிராயம் உள்ளவர். எனவே, துர்பா அவரை அணுகிய போது உடனடியாகச் சம்மதம் தெரிவித்தார். அதே சமயத்தில் மிகுந்த முன் எச்சரிக்கையுடனும், மன உறுதியுடனும் இத்துறைக்குள் நுழைய வேண்டும் என்பதையும் விளக்கிச் சொன்னார்.

துர்பா பானர்ஜியின் வெற்றிப் பாதையில் இந்த முதல் கட்டம் மட்டுமே சுலபமாகக் கடக்கக் கூடியதாக இருந்தது. அதைத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டம்தான் — ஆண்களுக்கு மட்டுமே

உரித்தெனக் கருதப்படும் ஒரு துறையில் நுழையும் முதல் பெண்மணி சந்திக்க வேண்டிய எதிர்ப்புகள், போட்டி — பொறாமைகள், குருட்டு நம்பிக்கைகள்... துர்பா பானர்ஜி இவை அனைத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று, மாணவ விமானிக்குரிய லைசென்ஸைப் பெற்றதும் துர்பாவுக்கு கமர்ஷியல் பைலட் பயிற்சிக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. அவரது திறமைக்குக் கிடைத்த மதிப்பைப் பாராட்டியவர்கள் நெருங்கிய உறவினர்களும் ஓரிரு நண்பர்களும்தான். மற்றவர்கள் எல்லோருமே விமானம் ஓட்டும் பயிற்சியில் அவர் காலத்தை விரயமாக்குவதாகவும் அந்தப் பயிற்சிக்குப் பிறகு அவருக்கு ஒரு நாளும் வேலை கிடைக்காது என்றும் அச்சுறுத்திக் கொண்டே இருந்தனர். இந்தக் கட்டத்தில் சிறிது மனம் தளர்ந்துதான் போனார் துர்பா. அப்போது அவருக்கு உற்சாகம் அளித்து ஊக்குவித்தவர் அவர் தந்தைதான். 'உன் குறிக்கோளில் நீ உறுதியாக இருந்தால் பலன்களைப் பற்றிக் கவலைப்படாமல் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்' என்று அவரது தந்தை கூறிய அறிவுரைதான் அவருக்குக் கடைசிவரை கைகொடுத்தது.

படிப்படியாகப் பயிற்சிகளில் தேறி டகோடா விமானங்களைச் செலுத்தும் தகுதிச் சான்றிதழும் பெற்றுவிட்டார்



துர்பா. வேலைக்கும் விண்ணப்பித்தார். ஆனால், 'ஆண்களின் பிரத்தியேக உலகத்தில் ஒரு பெண்ணை எப்படி அனுமதிக்கலாம்?' என்ற மனப்பான்மையையே அவர் எங்கும் சந்தித்தார்! கண் மருத்துவ நிபுணர் ஒருவர் துர்பாவுக்குக் கண் பார்வையில் கோளாறு உள்ளது என்று பொய்யான சான்றிதழ் வழங்கக் கூடத் துணிந்தார்! தில்லிக்குச் சென்று அங்குள்ள இந்திய விமானப் படையின் மருத்துவப் பிரிவில் கண் பரிசோதனை செய்து கொண்டு உண்மையான சான்றிதழுடன் திரும்பினார் துர்பா.

ஆயினும் பயணிகள் விமானம் ஓட்டும் வேலை சுலபத்தில் கிடைப்பதாய் இல்லை. ஒரு நண்பரின் உதவியுடன் விமானப் போக்குவரத்து அமைச்சக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார் துர்பா. அத்துறையின் அமைச்சரைக் கூடச் சந்தித்துத் தமக்கு வேலை பெற எல்லா விதத்திலும் தகுதி இருப்பதை எடுத்துச் சொன்னார். ஆனால் யாருமே அசைவதாக இல்லை. பயணிகள் விமானங்களை ஓட்டப் பெண்களை அனுமதிப்பது என்பது உலகளவிலேயே நடைமுறையில் இல்லை என்ற காரணம்தான் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டது. ஒரு புதிய நடைமுறையை ஏற்படுத்த யாருக்குமே துணிவில்லை. விமானம் ஓட்டுதல் தொடர்பான வேறு பல வேலைகளைத் துர்பாவுக்குத் தர முன்வந்தனர். பயிற்சியாளராகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டனர். இதற்கு ஒரே சமயத்தில் நான்கு சம்பள உயர்வுகளைத் தருவதாக ஆசை காட்டினர்! துர்பா பானர்ஜி உறுதியாக இருந்தார். பயிற்சியாளர் பணியில் சேர மறுத்து விட்டார்.

தனியார் விமானக் கம்பெனிக்கு விண்ணப்பித்தார் துர்பா. அங்கும் பாரபட்ச



நோக்கில் அவரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இரண்டாவது முறையாக விண்ணப்பித்தபோது தமது பெயரை 'டி. பானர்ஜி' என்று 'மிஸ்' அடைமொழி இல்லாமல் குறிப்பிட்டார். இம்முறை நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்தது! ஆனால் கடைசி நிமிஷத்தில் அவர் பெண் என்பதை எப்படியோ தெரிந்து கொண்ட நிர்வாகத்தினர் நேர்முகத் தேர்வுக்கான அழைப்பை ரத்து செய்து விட்டனர்!

இதற்கிடையில் தாம் பெற்ற லைசென்ஸைப் புதுப்பித்து வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை துர்பாவுக்கு ஏற்

பட்டது. லைசென்ஸைப் புதுப்பித்துக் கொள்ளக் குறைந்தபட்சம் இத்தனை மணி நேரம் விமானத்தைச் செலுத்தியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. இந்த நிர்ப்பந்தம் காரணமாகச் சம்பளமின்றியே விமானியாகப் பணியாற்றவும் முன்வந்தார் துர்பா. ஆனால் நல்லவேளையாக அதற்கு அவசியமில்லாமல் போயிற்று. ஒரு நண்பரின் உதவியால் 'ஏர் சர்வே ஆஃப் இந்தியா'



என்ற தனியார் நிறுவனத்தில் விமானி வேலை கிடைத்தது — சுவாரசியமில்லாத, கடுமையான வேலை! இதைத் தொடர்ந்து, 'ஏர்வேஸ் இந்தியா' என்ற மற்றொரு தனியார் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். இங்கு காலை 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வாரத்தில் ஏழு நாட்களும் கடுமையான வேலை. அதேசமயம் துர்பாவுக்குத் தரப்பட்ட சம்பளமோ சக ஆண்களின் சம்பளத்தை விடக் கணிசமாகக் குறைவு! அவர்கள் பெற்ற பல சலுகைகளும் வசதிகளும் இவருக்குத் தரப்படவில்லை. உள்ளுக்குள் குமுறினாலும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் தொடர்ந்து பணியாற்றினார் துர்பா. ஒரு நாட்டின் அரசாங்க விமான நிறுவனத்தில் பெண்களை விமானிகளாக அமர்த்துவதில்லை என்ற நடைமுறையை உடைத்தெறிந்து சாதனை புரிய வேண்டுமானால் தான் மிகுந்த பொறுமையுடன் இருந்து போராட வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

நார்காபூரில் காங்கிரஸ் மாநாடு கூடிய போது மேற்கு வங்க அரசாங்க விமானம் ஒன்றில் சில வி. ஐ. பிக்களை ஏற்றிச் செல்லும் வாய்ப்பு துர்பா பானர்ஜிக்குக் கிடைத்தது. அந்தப் பயணத்தின் போது அப்போதைய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்தார் துர்பா. ஒரு திருப்பம் ஏற்பட்டது. இந்திரா காந்தியின் சிபாரிசின் பேரில் இந்தியன் ஏர் லைன்ஸில் உலகளாவிய நடைமுறையை மீறி, விமானியாகப் பணியில் அமர்த்தப்பட்டார் துர்பா.

1966 இல் இந்தியன் ஏர்லைன்ஸில் சேர்ந்த பிறகு வெகுவேகமாக முன்னேறினார் துர்பா. டகோடா ஓட்டும் லைசென்ஸ் மட்டுமே பெற்றிருந்தவர், சீக்கிரமே ஆவ்ரோ, டர்போஜெட், ஃபாக்கர் ஃப்ரெண்ட்ஷிப் ஆகிய விமானங்களைச் செலுத்தும் லைசென்ஸுகளைப் பெற்றார். பல்லாயிரக்கணக்கான பயணிகளை ஏற்றிச் சென்ற அனுபவத்தின் அடிப்படையில் போயிங் — 737 விமானத்தைச் செலுத்தும் அங்கீகாரமும் அளிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி முதல் ஏர் பஸ் விமானங்களையும் செலுத்தி வருகிறார் கேப்டன் துர்பா பானர்ஜி.

பங்களாதேஷைச் சேர்ந்த இரு பெண்கள், துர்பா பானர்ஜியின் உலக சாதனையைச் சுட்டிக் காட்டி வாதாடியதன் பேரில் இப்போது விமானிகளாக அந்நாட்டு அரசாங்க விமான நிறுவனத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர். காப்டன் துர்பா செலுத்திய விமானத்தில் பயணம் செய்த ஜப்பானிய ஜெனரல் ஒருவர் இந்தியப் பெண் பைலட்டுகள் பற்றிய ஒரு டீ. வி. திரைப்படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்து அதன் மூலம் ஜப்பானியப் பெண்களை அந்நாட்டில் இப்பணியில் சேர ஊக்குவித்தார். யுனெஸ்கோவின் 'பத்து பிரபலமான இந்திய வீராங்கனைகள்' என்ற தயாரிப்பிலும் காப்டன் துர்பா பானர்ஜி இடம் பெற்றுள்ளார். பாரபட்சக் கண்ணோட்டத்துடன் தாய்நாட்டிலேயே ஓரங்கட்டப்பட்ட பெண்மணி இப்போது உலக அரங்கில் பிற பெண்மணிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து தமது நாட்டுக்குப் பெருமையும் புகழும் பெற்றுத் தந்து வருகிறார்.

1979 வரை இந்தியன் ஏர்லைன்ஸின் ஒரே பெண் பைலட்டாக இருந்தார் காப்டன் துர்பா. பதின்மூன்று வருடத் தனிமைக்குப் பிறகு சௌதாமினி தேஷ்முக் என்ற இரண்டாவது பெண் பைலட் இந்தியன் ஏர்லைன்ஸில் சேர்ந்தார். தற்போது மேலும் நான்கு பெண்கள் சேர்ந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார் துர்பா.

விமானம் ஓட்டும் பணியில் உள்ள ஆபத்துக்கள் அதிகம் என்ற பொதுவான அபிப்பிராயத்தைக் காப்டன் துர்பா பானர்ஜி ஒப்புக் கொள்வதில்லை. 'எல்லாப் பணிகளிலுமே ஆபத்து இருக்கிறது. நாம் பிறக்கும் போதே நமது மரணமும் நிச்சயிக்கப்படுகிறது. அதற்காக ஏன் பயப்பட வேண்டும்? மனசாட்சிக்கு விரோதமின்றி கடமைகளைச் செய்து வந்தால் எதற்குமே பயப்பட வேண்டியதில்லை' என்கிறார்.

ஒருமுறை வடகிழக்கு இந்தியாவில் மிஸா என்ற சிற்றூரில் விமானத்தை இறக்கும் போது, சக்கரங்கள் பூமியைத் தொட்ட கணத்தி



இவர்: உடற்கட்டோடு இருக்கும் ஆண்கள் உடனே தேவைன்னு போர்டு போட்டது தப்பாப் போச்சு!

அவர்: என்ன ஆச்சு?

இவர்: அடிபட்டுக் கட்டுப் போட்டுக்கிட்டவங்க எல்லாரும் ஆஸ்பத்திரியிலேருந்து வண்டியிலே வந்து இறங்க ஆரம்பிச்சுட்டாங்க!

— சீர்காழி சாமா

லேயே பிரேக்குகளின் இயக்கம் நின்று விட்டது! சற்று தூரத்தில் குடிசைகள் மிகுந்த ஒரு குடியிருப்பு! மண் தரையில் கண்மூடித்தனமாக விரைந்த விமானத்தை எப்படியோ கட்டுப்படுத்தி அது உயிர்களைப் பலி வாங்காமல் தடுத்தார் காப்டன் துர்பா. மறு நாள் மண்ணில் புதைந்து கிடந்த விமானத்தை ஒரு யானையைக் கொண்டு அகற்றினார்கள்!

மற்றொரு முறை கௌஹாத்தியிலிருந்து புறப்பட்ட விமானம், மேக மூட்டம் பார்வையை மறைத்ததால் தவறுதலாகக் கிழக்குப் பாகிஸ்தான் (தற்போது பங்களாதேஷ்) எல்லைக்குள் பிரவேசித்துவிட, எதிரே இரண்டு போர் விமானங்கள் தோன்றின. தங்களைப் பின் தொடருமாறும் அப்படிச் செய்யாவிட்டால் விமானத்தைச் சுட்டு வீழ்த்தி விடுவோம் என்றும் அந்தப் போர் விமானங்களிலிருந்து அச்சுறுத்தல் செய்தி வந்தது. துணிந்து தமது விமானத்தை மேலும் அடர்ந்த மேக மூட்டத்துக்குள் செலுத்தி அவர்களிடமிருந்து தப்பிவிட்டார் துர்பா பானர்ஜி.

இந்தோ — சீன யுத்தத்தின் போதும், பங்களாதேசப் போராட்டத்தின் போதும் ராணுவ வீரர்களையும், யுத்த தளவாடங்களையும், கைதிகளையும் தாங்கிய விமானங்களைச் செலுத்தி தேச சேவை செய்த பெருமையும் காப்டன் துர்பாவுக்கு உண்டு.

"ஆரோக்கியம், உடனடியாக முடிவெடுக்கும் துணிவு, மன உறுதி, பொறுமை, விடா முயற்சி ஆகிய குணங்கள் ஒரு பைலட்டுக்கு அவசியம் தேவை. அவற்றைக் கடவுள் எனக்கு அளித்துள்ளார். அதனால்தான் எதிர்ப்புக்களையும், ஏமாற்றங்களையும் வென்று ஒரு முன்னுதாரணமாக நான் இன்று இருக்கிறேன். நூற்றுக்கணக்கான பயணிகளை ஏற்றிக் கொண்டு வானவெளியில் பறக்கும் போது கவனமெல்லாம் பணியிலேதான் இருக்கும். ஆனால் ஒரு சில கணங்களுக்கு அந்தக் கவனம் வானவெளியின் அற்புதத் தோற்றத்தால் கவரப்படுவதுண்டு. அந்தக் கணங்களில் நான், எங்கும் நிறைந்திருக்கும் கடவுளின் சக்தியை உணர்கிறேன். அந்தச் சக்திக்குத் தலைவணங்குகிறேன்" என்கிறார் துர்பா. 'துர்பா' என்பது இறைவனைப் பூஜிக்க உபயோகிக்கப்படும் ஒரு வகைப் புல்லாகும். பல பெருமைகளைத் தாங்கி நின்றாலும், இறைவனின் சக்திக்குத் தலைவணங்கும் ஒருவருக்குப் பொருத்தமான பெயர்தான் — துர்பா!

— புஷ்பா பானர்ஜி

அடுத்த இதழில்...



சோதனைக் குழாயில் ஒரு சாதனை

—டெஸ்ட் ட்யூப் பேபி பற்றிய மருத்துவக் கட்டுரை




தன் ஆலோசனையை டாக்டரே பின்பற்றுகிறார்!

ஒரு டாக்டரின் பணி ஒருபோதும் சுலபமானதல்ல. அடிக்கடி அவசர கேஸ்களைக் கவனிப்பது. நீண்ட நேரம் வேலை செய்வது. இரவு-பகல் என்று பாராமல் நோயாளிகளின் வீடுகளுக்குச் செல்வது... களைப்பு மிக்க பணி.

அதனால் தான் நான் ஹார்லிக்ஸை நம்பியிருக்கிறேன்.


ஹார்லிக்ஸில் உள்ள ஊட்டச்சத்துப் பொருட்கள், அதைச் சுவையான, சுறுசுறுப்பளிக்கும் பானமாக ஆக்கி, நான் முழுதும் வேலைசெய்வதால் ஏற்படும் களைப்பைப் போக்கச் செய்கின்றன. அதனால் தான் ஒரு நாளில் இரு தடவை ஹார்லிக்ஸ் பருகுமாறு எப்போதும் சிபாரிசு செய்கிறேன்.

எனக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில் நானும் அதைப் பருகுகிறேனே!



டாக்டர்களால் நம்பப்படுவது—உலகம் முழுதும்.

மால்ட்டட் பார்லி, முழு ஆடைப்பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச் சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையைப்பெற்றது. எனவே கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்


HMM-9239 TAM


எதிர்ப்பின் வளர்ச்சி
ராஜீவுக்கு வழக்கமான எதிர்ப்பு
ராஜீவுக்கு எதிர்பாராத பாராட்டு
பிரேமதாசா
புயமான காத்துன்னு நெனச்சேன்! சூறாவளியா உருவாகுதே!
தண்ணி கேட்டதுக்கு பிளாஸ்டிக் குடம் கொடுத்தோம்! 'ஸ்டாக் இல்லே; இறைவன் அரிசியைக் குறைவாக் கொடுப் போம்'னு ஏன் சொல்றீங்க? அரிசி கேட்டதுக்கு கோணியைக் கொடுத்தாப் போவுது!
ரத்தத்தின் ரத்தம்



கல்கி

1987 செப்டம்பர் 6
மலர் 46 இதழ் 6
பிரபவ ஆவணி 21



வெளிச்சத்தைத் தேடுகிறோம்!

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி இருக்குமிடம் தெரிய வந்து, அவரது விளக்க உரையையும் கேட்கும் முன்னர், கடைசியாக அவர் நடந்து கொண்ட விதத்தை விமர்சிப்பது நியாயமோ, நீதியோ, நேர்மையோ, தர்மமோ ஆகாது. எனவே அதை விட்டுவிட்டாலும் கூட, இந்த நிகழ்ச்சிக்கு முற்பட்ட காலத்தைப் பார்க்கும் போது துறவிகளுக்குக் கூடப் பிரச்னைகள் ஏற்பட முடியும் என்று புரிகிறது!

ஆசைகளைத் துறந்தவர், பற்றுக்களை விட்டவர்தான் ஜெயேந்திரர். சந்நியாசிக்கு ஊர் ஊராகப் போக வேண்டிய தர்மம் உண்டு. அதை அனுசரித்துப் பரத கண்டத்தைச் சுற்றி வந்தபோது, இன்றைய இந்தியா எவ்வளவு இழிநிலைக்குத் தாழ்ந்து போயிருக்கிறது என்பதை அவரால் உணர முடிந்தது. எங்கும் அசத்தியம்; அதர்மம். நாலா திசைகளிலும் வன்முறை. திரும்பின பக்கமெல்லாம் இளைஞர்களைத் தவறான பாதையில் இழுக்கும் ஆபாசங்கள்; அடிமைப்படுத்தும் மது, மற்றும் கஞ்சாப் பொருள்கள்! முற்றும் துறந்த முனிவரேயானாலும் அவரால் தேசப்பற்றை மட்டும் துறக்க முடியவில்லை. கடவுள் பக்திக்கும் தேச பக்திக்கும் அவரால் வித்தியாசம் காண முடியவில்லை. காமாட்சி அன்னைக்கும் பாரத மாதாவுக்கும் இடையில் அவரால் வேற்றுமை காண இயலவில்லை.

நாட்டின் இந்த இழி நிலையை மாற்றி அமைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டிய கடமை தமக்கிருப்பதாக அவர் எண்ணினார். எண்ணியதைப் பேசினார். இங்கேதான் பிரச்னை எழுந்தது. நாட்டு நலன் என்னும் போது ஆன்மீகத்தை விட்டுச் சற்றுப் பாதை மாறி அரசியலுக்கு வர நேர்ந்தது. அவர் அரசியல் பேசுவது சரியா, முறையா என்ற கேள்வியும் பிறந்தது. ஒரு மடாதிபதி,மக்கள் நலனுக்காகப் பிரார்த்தனை செய்து, அறத்தை அவர்களுக்குப் போதித்து வந்தால் மட்டும் போதுமா? அல்லது யதார்த்த ரீதியில் மக்கள் நலனுக்காகப் பாடுபடுவதென்றால் ஓர் இயக்கத்தை அவர் தொடங்கி, அதனை வளர்க்கத் தான் வேண்டுமா? அது தீவிர அரசியல் பிரவேசத்தில் கொண்டு போய் விட்டு விடுமா? இதுதான் பிரச்னை.

இந்தப் பிரச்னையை காந்திஜியும் யோசித்திருக்கிறார்; அவரது அடியொற்றி ராஜாஜியும் சிந்தித்திருக்கிறார். 'இறையுணர்வு இல்லாத அரசியல் ஆபத்தானது' என்றார் காந்திஜி. இதற்கு ராஜாஜி விரிவுரை வழங்கினார்: 'மதச்சார்பின்மை என்பது மதத்தைப் புறக்கணிப்பதல்ல; எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் அரசு எல்லா மதங்களையும் சமமாகப் பாவித்து ஆதரிக்க வேண்டும். ஆண்டவனுக்குப் பயப்படாதவன் எவ்வித அதர்மத்துக்கும் அஞ்சமாட்டான். எனவே மத உணர்வும் கடவுள் நம்பிக்கையும் ஆட்சியாளருக்கு அவசியம்.'

இவர்கள் இவ்வாறு கூறியதால் மதத் தலைவர்கள் அரசியலில் புகவேண்டும் என்பது அர்த்தமல்ல. அரசியல்வாதிகள் தெய்வ பக்தியுள்ள நேர்மையாளராக, மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்பது மட்டுமே அர்த்தம். மதத் தலைவர்களை அவ்வப்போது அரசியல்வாதிகள் கண்டு பேசி, உள்ளொளி பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே பொருள். இதனை அனர்த்தமாக்கி மடாதிபதிகளே அரசியலில் புகுந்தால் ஒரே குழப்பம்தான் விளையும். நமது மதச்சார்பின்மை கொள்கை மடிந்து போகும். 'ஹிந்து ராஷ்டிரம்' என்று ஒருவர் கூறினால், 'சீக்கிய தேசம்' என்று வேறு ஒருவர் கூறுவதை நியாயப்படுத்தியதாகிவிடும்.

''ஜெயேந்திரருக்குத் தொந்தரவு தரவேண்டாம்; அவர் எங்கு போகிறாரோ போகட்டும்; மன அமைதிக்கு என்ன செய்ய விரும்புகிறாரோ செய்யட்டும்'' என்ற பரமாச்சார்யாளின் சொற்கள் அவருடைய அளப்பரிய கருணையை உணர்த்துகின்றன. அந்தக் கருணை உள்ளம்தான் ஆட்சியாளருக்கும் நமக்கும் வெளிச்சத்தைக் காட்டி, இருளிலிருந்து நம்மை ஒளிக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். அடக்கத்துடன் அந்தப் பேருள்ளத்தைப் பணிந்து, புதிய பீடாதிபதியான சங்கர விஜயேந்திர சரஸ்வதியை வரவேற்று, வணங்குவோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

.0G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.







மீண்டும் மகான்

நான்கு அசடு வழியும் இளைஞர்கள். வேலை அற்றவர்கள். நான்கில் மூன்று பேருக்கு மூன்று லட்சியங்கள். ஒருவர் முஹம்மத் அலி போல் பாக்ஸர். ஒருவருக்கு மைக்கேல் ஜாக்ஸன் டைப்பில் பாடகராகும் லட்சியம். இன்னொருவருக்கு... அதை விடுங்கள். நான்காமவர் இருக்கிறாரே. அலட்சியவாதி. பாண்டியராஜன். மூவரின் லட்சியங்கள் நிறைவேறுவதற்காக இவர் உழைக்கிறார் — பல்லவன் பஸ்களில், பிஸியான இடங்களில் பிக்பாக்கெட். மூன்று லட்சியவாதிகளும் காதல் வலையில் சிக்க —

படம் முழுக்கப் பாட்டுதான். டான்ஸ்தான். இளமைதான். துடிப்புத்தான். துள்ளல்தான்.

ரஹ்மானின் ஆட்டம் ரசிக்கும்படியாய் இருக்கிறது. அதிலும் சோளக்கொல்லை பொம்மையுடன் ஆடுகிறாரே ஒரு டான்ஸ். டைரக்டரும், நடிகரும் சேர்ந்து செய்திருக்கிறார்களா, அபாரமாக அமைந்திருக்கிறது.

கதை, காதல் என்று ஆகி விடுவதால் இயல்பாகவே ஒரு சுறுசுறுப்பு வந்து படத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

காதல் காட்சிகளில் ரேகா — ரஹ்மான் நெருக்கம் ஜோடிக்கிளி நெருக்கம். வரம்பு மீறாத கிளுகிளுப்பு.

எஸ். வி. சேகரும், முரளியும் சைட் தேடி அலையும் சகோதரர்கள். ஒருவர் ஜிகினா டிரஸ்ஸில் கோமஸ்வரராக நடைபோட, ஒருவர் செட்—அப் செய்த ஆளை வீரராகக் காட்டிக் கொள்ளும் நோக்குடன் அடிக்க— செம்மை கலகல.

அதேபோல் லைப்ரரியில் ஒருவர் காலை ஒருவர் வாரிவிட்டுக் கொள்கிறார்களே அந்த இடமும் வாய் விட்டுச் சிரிக்கச் சொல்லும் இடம்தான்.

அந்த பைனாகுலர், மூடப்பட்ட கறுப்புக் கண்ணாடி கார் — இவற்றுக்குச் சொந்தக்காரர் யார் யார் என்று இடைவேளை வரை நல்ல சஸ்பென்ஸ். கள்ளக் கடத்தல் அது இது என்று பார்த்தால் கடைசியில் ஓர் இளமையான பதினெட்டு. மாதுரி!

முரளிக்குக் கண்ணி வைக்கிறார். நடிப்பில் அதே படபட. சபாஷ். கீப் இட் அப் மாதுரி.

சோகமான ராகமாக வந்து சுகமான ராகமாக முடிபவர் — அடேடே அந்த நாள் அருணா. நன்றாகத்தானே நடிக்கிறார்? ஏன் தமிழ்ப் படவுலகம் இவரை நிராகரிக்கிறது?

முரளி மாதுரியை மாடியேறிப் பார்த்துக் கட்டியணைக்கும் காட்சி —

எஸ். வி. சேகர் அரியாசனத்தில் அமர்ந்து பாண்டியராஜனைத் தண்டிக்கும் காட்சி —

ஒரு லெட்டர் பேடில் இரண்டு பட்டுப் பூச்சிகளுக்குக் கீழே 'நீங்கள்' 'நான்' என்று எழுதியிருக்கும் காட்சி.


டைரக்டர் உத்தமன் புதியவராம். அபாரமான கற்பனைத் திறன். தூள் பரப்புகிறார்.

பாடல்கள் ரசிக்கும்படி! மியூஸிக் வீ கேயாமே அவரும் புதுமுகமா?

கடைசியில் இன்ஸ்பெக்டர் அப்பாவின் து. குண்டுக்கு பா. ராஜன் இரையாவது, அவருக்குத் தியாகிப் பட்டம் மாட்டுவது — இவை கொஞ்சம் நெருடல்தான். மற்றபடி படம் ஜாலியோ ஜாலி!

மாதம் ஒரு மாவட்டம்

நீலகிரி மாவட்டத்திற்கு வருகிறோம்!



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

தமிழகத்தைப் பொறுத்தவரை, முழுக்க முழுக்க ஒரு மாவட்டம் மலையின் மேலேயே அமைந்திருக்கிறது என்றால், அது நீலகிரி மாவட்டம்தான். ஊட்டியைத் தலை நகராகக் கொண்ட நீலகிரி மாவட்டம், அனைவராலும் வெயில் காலத்தில்தான் நினைவு கூரப்படுகிறது; மற்ற காலங்களில் அங்குள்ள மக்களின் பிரச்னைகள் கவனிக்கப்பட வேண்டாமா? குளிர்ந்து கிடக்கும் நீலகிரி மாவட்டத்தில் வாழும் மக்களின் மனம், பிரச்னைகளால் வெந்து கொண்டு கூட இருக்கலாம்; யார் கண்டது?

அதனால்தான், கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப்பணியில்,பத்தொன்பதாவதுமாவட்டமாக நீலகிரி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எனவே, நீலகிரி மாவட்டம் முழுவதிலும் உள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப் பிரச்னைகள் இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு,அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் பாராமுகங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் தெளிவான முழு முகவரி (வரும் வழிகள் — தூரம் — தாலுகா முதலியவை தெளிவாக இருக்க வேண்டும்)யோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள்.

மேலும், நகரத்தின் நாகரிகத் தாக்கத்திற்கு உட்படாமல் தங்களது தனித்துவத்தோடு அல்லது அரசின் உதவிகள் கிடைக்கப் பெறாமல் அவலத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மலைவாழ் மக்களின் வேதனைகளையும் எழுதுங்கள். (பஸ் வசதியோ அல்லது பாதை வசதியோ இல்லாமல் போனால் கூட நமதுநிருபர்கள் அங்கெல்லாம்நடந்துவரவும் தயாராய் இருக்கிறார்கள். கவலை வேண்டாம்.) கூடவே உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, அக்டோபர் மாத மத்தியில் நமது கல்கி நிருபர்கள் நீலகிரி மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப்பயண முடிவில், கல்கி நிருபர்கள் நீலகிரி மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசி — விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் நவம்பர் மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும் புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்!

எல்லாப் பிரச்னைகளைப் பற்றிய செய்திகளையும் பிரசுரித்துவிட முடியாது என்பது உண்மைதான். ஆயினும் நியாயமான பிரச்னைகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லப்படுவதன் மூலம், அரசின் கவனத்தையும் அதிகாரிகள் கவனத்தையும் திருப்ப முடியுமல்லவா! இவற்றோடு வாழ்க்கையின் அன்றாட அவலங்களையும் சமூக விரோதிகளின் அக்கிரமங்களையும் மோசடிகளையும் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுவதன் மூலம், நமது சகோதர மக்களிடத்திலும் ஓர் ஒட்டுமொத்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாமல்லவா! எனவே, உடனடியாக எழுதி அனுப்புங்கள்!

நீலகிரி மாவட்டம் பற்றிய பிரச்னைகள், அநீதிகள் தவிர, சாதனைகளும் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.9.87.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — நீலகிரி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

— ஆசிரியர்

(செங்கல்பட்டு மாவட்டம் தொடர்பான பிரச்னைகளும், கட்டுரைகளும், பேட்டிகளும் புகைப்படங்களும் செப்டம்பர் 20, 27 தேதியிட்ட கல்கி இதழ்களில் இடம் பெறும்.)

வாழ்க பல்லாண்டு!



மணமகன்: கல்கி பத்திரிகையின் பெங்களூர்ப் பிரதிநிதி திரு எஸ். ஆர். வெங்கடாசலத்தின் அருமைப் புதல்வன் செல்வன் ஸ்ரீனிவாசன்.

மணமகள்: ஸ்ரீ டி. சதாசிவத்தின் காரியதரிசியாகவும் பல்வேறு தொழில் வர்த்தக நிறுவனங்களின் சென்னைப் பிரதிநிதியாகவும் சிறப்புற இயங்கி வரும் திரு கே. ஆர். ஆத்மநாதன் அவர்களின் குமாரி செல்வி காயத்ரி.

இவர்களின் திருமணம் அண்மையில் சென்னையில் கோலாகலமாக நடந்தது.

ஸ்ரீ சதாசிவம் — ஸ்ரீமதி எம். எஸ். தம்பதி, தங்கள் இல்லத் திருமணமாகவே கருதி முன்னின்று விமரிசையாக நடத்தி வைத்த இந்தத் திருமணத்துக்கும் பெங்களூரில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்துக்கும் ஆளுனர், அமைச்சர்கள் உள்பட ஏராளமான பிரமுகர்களும் அன்பர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

திரு டி. கே. ஜெயராமன், திருமதி எம். எல். வசந்தகுமாரி ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் விருந்தினரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

வாழ்க, காயத்ரி — ஸ்ரீனிவாசன்!

காலம் பதில் சொல்லும்!

* ''ரெட்டி குப்பத்தில்'' கல்கியின் விசிட் ''போலீஸ் என்றாலே ஒருமாதிரி...'' என்ற நினைப்பை மறுக்கச் செய்கிறது.

டி. எஸ். பி. அலெக்ஸாண்டரின் பணி பாராட்டுக்குரியது.

கோவை — 6, ஆர். ரமணன்.

* ''இந்தத் தடவை அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில், ஆறு அறிமுக எழுத்தாளர்களின் கதைகளைத் தேர்ந்தெடுத்து, வெளியிட்டிருப்பதன் மூலமாக, அறிமுக எழுத்தாளர்களை ஊக்குவிக்கப் பத்திரிகைகள் முன் வருவதில்லை என்ற கூற்றை, உங்களைப் பொறுத்த வரை பொய்யாக்கி விட்டீர்கள்!

திருச்சி — 20, ஆர். அப்துல் சலாம்.

* ''விஷம் பரவும் வடாற்காடுக்கு விமோசனம் உண்டா?'' என்று தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு அழுத்தம் திருத்தமாகப் பதிலளித்திருந்தார் என். வி. எஸ். மணியன். தாங்கள் கூறியது போல இயற்கை அன்னை தந்த இந்தப் பூமி இந்தத் தலைமுறைக்கு மட்டும் உரியதல்ல, வருங்காலத்தில் இன்னும் எத்தனையோ தலைமுறைகளுக்குச் சொந்தமானது என்பதை ஆட்சியாளர்கள் கால தாமதமின்றி உணர வேண்டும்.

சென்னை — 16, சாயா ரவி.

* தலையங்கம் கண்டேன். அடேங்கப்பா! எவ்வளவு சந்தேகங்களுக்கு ராஜீவ் தெளிவான விடையளிக்க வேண்டும்? அது ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் அவரைப் பார்த்துக் கேட்கும் கேள்வி! தெளிவான விடை தரும் வரை மக்கள் அவரைச் சந்தேகக் கண்ணோடுதான் பார்ப்பார்கள்!

குற்றாலம், எஸ். ராஜா.

* ராஜீவ் நிச்சயமாக முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார். நான் குற்றமற்றவன் என்று அடிக்கடி சொல்வது 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்று சொல்வது போல் இருக்கிறது.

குற்றாலம், தி. மணிவண்ணன்.

* அமைதிப் பணியில் அந்நிய நாட்டில் துப்பாக்கிக் கட்டையால் அடிபெற்ற தலைவன் பற்றி உங்களால் மனிதாபிமானத்துடன் எழுத முடியவில்லை. என்ன செய்வது? குடலைக் கிழித்துத் தசையைக் காட்டினும் வாழை நார் என வாதிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள உங்களுக்குக் காலம் பதில் சொல்லும்.

திருச்சி, கே. கிருஷ்ணசாமி.

* புதிய பகுதியான கலரொட்டிச் செய்திகள் மிகவும் சுவையாக இருக்கிறது.

திருக்குவளை, வெற்றிப்பேரொளி.

* 'கலரொட்டிச் செய்திகள்' படித்தேன். குமரி அனந்தனின் மீது தொண்டர்கள் செலுத்துகிற கலப்படமற்ற அன்பை, உளப்பூர்வமாக செலுத்துகிற மாலை அணிவிப்பைச் சரிவர உணராமல் 'ஜெயமிஷம்' என்று குறிப்பிடுவது வருந்தத் தக்கது. பொது மக்களையும் குழப்பமடையச் செய்யும்.

விழுப்புரம், எம். நடராஜ்.

வட்டமேஜை

* 'இந்தப் பெண்ணின் சோகக் கதை' இக்காலப் பெண்களுக்கோர் எச்சரிக்கை!

குடியாத்தம், மு. மோகன்.

* அமரர் கல்கி வளர்த்த சங்கீத விமரிசனக் கலையும் அவரோடு மறைந்து விட்டதா என்று ஐயப்பட்டுக் கொண்டிருந்தோம்... 'இல்லை... இல்லை... அதற்கு இன்னும் ஜீவன் இருக்கிறது;' என்று சொல்லுவதைப் போல அமைந்துள்ளது ''தாலாட்டிலும் விழிப்புணர்ச்சி!''

சென்னை — 40, எச். கிருஷ்ணமூர்த்தி.

* ''அடப்பாவிங்களா'' பரிசுக்கதை ஒரு வித்தியாசமான கோணத்தில் எழுதப்பட்ட மாறுதலான கருத்தினைக் கொண்ட அருமையான கதை... அறிமுக எழுத்தாளர் என்றாலும் சரளமான நடை.

திருநெல்வேலி, எஸ். கணேசன்.

* தராசு பகுதியில் கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் 'நியாயமில்லை' எனக் கூறியது கண்டு வியப்பும் வேதனையும் அடைந்தேன்.

சுதந்திரம் பெற்று 25 ஆண்டு காலத்திற்கும் மேலாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த 'சமுதாயச் சிற்பிகளின்' நலன் குறித்து எந்த அரசாவது சிந்தித்ததா? பத்திரிகைகள் எழுதியதா? — இல்லை.

இன்றைய கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் சம்பளத்திற்கு மட்டுமல்ல — ஆசிரிய விரோதப் போக்குக் கொள்கைகளை அரசு அமல்படுத்தக் கூடாது என்பதுமேயாகும். இன்னும் ஆசிரியர்கள் கைகட்டி, வாய் பொத்தி வருவார்களேயானால் — இவர்களின் கோரிக்கைகளை யார் எடுத்துக் கூறுவது?

சென்னை — 112, எம். ஏ. ஜெரச். ஷாதலி

* அகில உலகிலேயே தரமான கிரானைட் கிடைக்கும் மூன்று இடங்களில் ஒன்றான சிவகங்கையை வைத்துக் கொண்டு சாக்கு போக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் நமது அரசாங்கத்தைப் போன்று அகில உலகத்தில் எதுவுமே இல்லையென்று சொல்லிக் கொள்வதில்... பெருமை அடையலாம் இல்லையா!!!

மதுரை — 1, ஞானசேகரன்.

* தமிழ்நாட்டில் எத்தனை வாரியங்கள் உள்ளன என்ற கேள்விக்கு தராசின் பதில்தான்... இதுவரை வந்த ''அரசியல் (வாதி) ஜோக்கு'' களிலே out standing ஆக இருந்தது எனத் தேர்வு செய்து பாராட்டுகிறோம்.

குற்றாலம், என். சேதுராமன்.

* கனிமத் தொழிற்சாலை அமைப்பதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அறிந்தும் அரசு இன்னும் தாமதப் படுத்துவது வருந்தப்பட வேண்டிய விஷயம்.'கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது' என்பது நம் அரசுக்கு மிகப் பொருத்தமே!

கோவை — 16, பாப்பம்பட்டி ராஜா.

பெருகிவரும் கூட்டத்திலே சேருங்கள்.



ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன். பெண் — அழகுப் படைப்பாளர் லக்மே அளிப்பது.

ஏராளமான பெண்கள் ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷனின் பெருகிவரும் கூட்டத்திலே சேர்ந்து வருகிறார்கள். இதில் வியப்பில்லையே! காரணம், ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி லோஷன் உபயோகிப்பதற்கு மிகவும் வசதியானது.

இது சீராகவும் எளிதாகவும் பரவுகிறது.

அதாவது, இதிலே சன்னே இல்லே, தொல்லே இல்லே. அதைவிடவும் ஒன்று: இதை தயாரித்தவர்கள் லக்மே! இதே லக்மேயிடம்தான், அழகு மற்றும் சருமப் பராமரிப்பிற்காக பெண்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

வாருங்கள் நீங்களும் ஸா:பட அண்ட் ஸில்க்கியின் பெருகி வரும் கூட்டத்திலே சேருங்கள்.

பட்டுப்போன்ற மென்மையை அங்கமெங்கும் அளியுங்கள்.

லக்மே



நிற்க நிழல் வேண்டும்!

வாஸந்தி

6

ஜயசீலன் உறைந்து நின்றான். அவனை இடித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும், பேரிரைச்சலுடன் ஜனசமுத்திரம் நகர்ந்தது.

அவ்வப்போது தெரிந்த இடைவெளியில் சற்றுத் தொலைவில் பொன்னம்பலத்தின் சடலத்தருகில் குந்தி அமர்ந்து அப்பா அழுவது தெரிந்தது. கூட்டம் நகர்ந்த வேகத்தில் அப்பா நிலை தடுமாறி விழுந்தார். சட்டென்று சுயப் பிரக்ஞை அடைந்தவர் போல் கண்களில் பீதி படர, அலங்க மலங்க விழித்தபடி, "சீலன்! சீலன்!" என்று கத்தினார்.

அவன் நின்ற இடத்தில் அசையாமல் இருந்தான். வாயைத் திறந்து "நான் இங்கு இருக்கிறேன்!" என்று சொல்ல முடியவில்லை. உறுப்புக்கள் செயலிழந்து விட்டன போல் தோன்றியது.

புலம்பியபடியே கூட்டத்தைப் பிளந்து கொண்டு அவனெதிரில் நின்று அவன் தோளைப் பற்றி "ஜயசீலன்!" என்று அப்பா உலுக்கிய போதும் அவனால் வாயைத் திறந்து எதையும் பேச முடியவில்லை.

எப்படி வீடு போய்ச் சேர்ந்தார்கள் என்று தெரியவில்லை. உள்ளே நுழைந்ததும் அம்மா அவனை அணைத்துக் கொண்டு அழுதாள்.

அப்பா ஓய்ந்து போனவர் போல் நாற்காலியில் அமர்ந்து இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டார்.

"இப்படி ஒரு கலவரம் நடக்கும் என்று நான் நினைக்கவே இல்லை... அந்தப் பொன்னம்பலம்..."

"என்ன? பொன்னம்பலத்துக்கு என்ன?"

அம்மாவின் பதற்றத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அவன் பின் கதவைத் திறந்து கொண்டு கொல்லை முற்றத்தில் சென்று அமர்ந்தான்.

அங்கிருந்த நிசப்தம் மனத்துக்குச் சற்றுத் தெப்பாக இருந்தது. செவிகளுக்குள் இன்னமும் கலவரக் குரல்கள் கேட்டன.

"பயப்படாதே தம்பி" என்ற பொன்னம்பலத்தின் வார்த்தைகள் இப்பவும் ஒலித்தன.

முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்துக் கண்ணை மூடிக் கொண்டான். மூடிய கண்களுக்குள் அப்பா 'பொன்னம்பலம் பொன்னம்பலம்' என்று அலறினார்.

யாரோ தோளைத் தொட்டார்கள். அவன் நிமிர்ந்து பார்த்தான்.

சீலியா நின்றிருந்தாள்.

"உனக்காக நான் ரொம்ப பயந்து போனேன் சீலன்!" என்றாள் மிருதுவாக. சட்டென்று அவன் உடைந்து போனான். சொல்லத் தெரியாமல் உள்ளே கொந்தளித்துக் கொண்டிருந்த உணர்வுகள் எல்லாம் ஒருசேர வெளிக்கிளம்பியது போல விசித்து விசித்து அழ ஆரம்பித்தான்.

"அழாதே சீலன்!" என்றாள் அவள் பதற்றத்துடன். "நல்லவேளை, நல்லபடியாய் வந்து சேர்ந்தியே!"

அவனுக்குக் கண்ணீர் நிற்கவில்லை. அவன் தோளை அவள் மென்மையாக அணைத்தாள்.

"அழாதே, அடிபட்டதா?"

'இல்லை' என்பதாக அவன் தலையசைத்தான்.

"பிறகு எதுக்காக அழறே?"

"தெரியவில்லை சீலியா. துக்கமா இருக்கு. அழுகை வருகிறது." சீலியா அவனை அநுதாபத்துடன் பார்த்தாள். "கலவரத்தைப் பார்த்த அதிர்ச்சி அது" என்றாள் மெல்ல. "அப்பாவும் ஜஸ்டினும் தப்பிச்சார்கள். கூட்டம் ரொம்ப அதிகம். நிற்கக் கூட இடமில்லே என்று திரும்பி வந்துட்டார்கள்."

அவன் பதில் ஏதும் சொல்லாமல் வானத்தில் மங்கலாகத் தெரிந்த நிலாத் துண்டைப் பார்த்தான். தனக்கு இன்றைக்கு ஏற்பட்டது வெறும் அதிர்ச்சி என்று தோன்றவில்லை. சிந்தனைத் திடலில் ஒரு புயல் வீசியது போல் இருந்தது. ஒரு பிரளயம் பொங்கியது போல் இருந்தது. திடீரென்று பத்து வயது கூடிப் போனமாதிரி மூப்பு ஏற்பட்டிருந்தது மனசில்.

"அங்கே என்ன நடந்தது சீலன்?"

"எனக்கு எதுவும் புரியல்லே சீலியா." என்றான் அவன் குழப்பத்துடன். "கூட்டம் அமைதியாக இருந்தது. திடீர் என்று போலீஸ் தொப்பிகள் வந்தன. அடிதடி. கண்ணீர் புகை. குண்டு வீச்சு ஆரம்பமாகி, கண் எதிரிலே பொன்னம்பலம் மாமா இறந்து போனார். இதெல்லாம் ஏன் நடந்தது?"

சீலியா தலையைக் குனிந்து கொண்டாள். "ஜஸ்டின் சொல்றான். இதெல்லாம் திட்டமிட்டு செய்யப்பட்ட காரியமாம். அதனாலே



தான் மேயர் துரையப்பாவும் சமயத்துக்கு இங்கு இல்லாம வெளி ஊருக்குப் போய் விட்டாராம். போலீஸ் அத்துமீறல் செஞ் சாலும் அதுக்குத் தான் பொறுப்பில்லே என்று காண்பிக்க!''

அவன் மெல்லிய சந்தேகத்துடன் அவளைப் பார்த்தான்.

''ஜஸ்டின் ஏதாவது இயக்கத்திலே இருக்கானா?''

''தெரியாது!'' என்றாள் அவள் சங்கடத்துடன். ''இருந்தாலும் தேவா அளவுத்தீவிரம் இல்லே என்று நினைக்கிறேன். அவன்தான் சொன்னான் நான் கூட்டத்துக்கு வர்றது நல்லதில்லே என்று!''

அவள் அவனருகில் நெருக்கமாக உட்கார்ந்திருந்தாள்.

''நல்ல வேளை, நீ வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் எண்டு என்னாலே நினைச்சுக்கூடப் பார்க்க முடியவில்லை சில்வியா!''என்றான் அவன் நெகிழ்ந்து. ''உனக்காக நான் எவ்வளவு பயந்தேன் எண்டு உனக்குத் தெரியாது.'' என்றான் அவன். அவனுடைய நெருக்கமும் அந்தப் பார்வையும் மங்கிய நிலா வெளிச்சத்தில் பளபளத்த அவளுடைய உதடுகளும் அவனுள் ஒரு நூதன உணர்வை ஏற்படுத்தின. மனசு மெலிதாகத் தடுமாறிற்று. இன்றைக்கு அவளுக்கும் பத்து வயது கூடிப்போன மாதிரி தோன்றிற்று.

''வீட்டுக்குள்ளேயே இரு; எங்கேயும் போய் விடாதே.'' என்றபடி அவள் எழுந்தாள்.

இன்னும் சற்று நேரம் இரேன் என்று சொல்லவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. அவன் வார்த்தைகளைக் கோக்க நினைப்பதற்குள் அவள் போய்விட்டாள்.

கொல்லையின் அந்தகார நிலத்தில் அவன் சற்று நேரம் அமிழ்ந்திருந்தான்.

'திட்டமிட்டுச் செய்யப்பட்டது.'

அப்படியும் இருக்குமா?

எதற்காக? என்ன காரணத்துக்காக?

நேற்று ஜஸ்டின் சொன்ன காரணங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. நியாயமற்ற முறையில் ஒரு அரசு நடந்து கொண்டதென்றால் அதைத் தட்டிக் கேட்க யாருமில்லையா? சொன்னாலும் கேட்டுக் கொள்வோர் யாருமில்லையோ?

தேவ்நேசனும் அவனது தீவிரப் பார்வையும் மௌனமும் நினைவுக்கு வந்து அடிவயிற்றில் சங்கடமேற்படுத்தின.

அவனுக்குத் திடீரென்று ராசமாணிக்கம் மாமாவின் நினைவு வந்தது. முன்பு அவன் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அவனிடம் மிகுந்த பாசத்துடன் இருப்பார். காந்திய வாதி, சாந்தம் தவழும் அவர் முகத்தைப் பார்ப்பதே ஓர் இன்பம் என்றால் அவரது பேச்சைக் கேட்பது இன்னும் அதிக

சுவாரஸ்யமாக இருக்கும். யாழ் நகரத்திலிருந்து சற்று தள்ளி ஒதுக்குப் புறமான பகுதியில் ஓர் ஆசிரமம் போன்ற இடத்தில் இருந்தார். அகதிகளாக வந்திருக்கும் தோட்டத்தொழிலாளிகளுக்கும்கிராமத்துமக்களுக்கும் சேவை செய்கிறார் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போதைய மன நிலையில் அவரைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

மறு நாள் காலை தேநீர் அருந்தியதும் யாரிடமும் சொல்லாமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் ஜயசீலன். அன்றைய தினசரித் தாளில் அப்பா மூழ்கியிருந்தார். தனக்குள் அமுங்கிய சோகத்தில் அம்மா இருந்தாள். நேற்று இரவு தேவநேசன் வீட்டிற்கு வராத காரணமாக இருக்க வேண்டும்.

தினசரித்தாளில் உண்மைக்குப்புறம்பான செய்திகள் இருந்தன. அத்துமீறி நடந்து கொண்ட கூட்டத்தை அடக்க வேண்டிய நிலை போலீஸுக்கு ஏற்பட்டுப் போனதாக வெளியாகி இருந்தது.

அவனைக் கண்டதும் ராசமாணிக்கம் மாமா மெல்லிய புன்னகையுடன், "வா தம்பி, எங்கே இத்தனை தூரம் வந்திருக்கே?" என்றார்.

எதிரில் இருந்த நாற்காலியைக் காண்பித்தார்.

அவன் அருகில் வந்து அவரை வணங்கினான்.

"ஊரெல்லாம் அல்லோலகல்லோலப் படுகிறது! நீங்கள் சாவகாசமாக் கேக்கிறீர்கள்!" என்று அவன் முணுமுணுத்தான்.

அவர் யோசனையுடன் அவனைப் பார்த்தார்.

"நேத்து நீ மாநாட்டுக்குப் போயிருந்தியா?"

"ஓம். நீங்கள்?"

"நா போக இல்லே."

"அப்ப உங்களுக்கு அங்கே என்ன நடந்தது என்று தெரியாது."

"தெரியும். இப்பத்தான் நண்பர்கள் சொல்லிவிட்டுப் போனார்கள். சரி நீ வந்த காரணத்தைச் சொல்லு."


"எனக்கு ஒண்ணும் புரியவில்லே. பயமாயிருக்கு. அமைதியா இருந்த கூட்டத்திலே போலீஸ் நுழைஞ்சு கலவரம் ஏற்படுத்தியது. பல இடங்களிலே நேத்து இரவு அப்பாவி ஜனங்களைப் போலீஸ் அடிச்சுப் போட்டிருக்காம்."

"எனக்கும் பயமாயிருக்கு தம்பி!" என்றார் ராசமாணிக்கம் தமக்குள் பேசிக்கொள்பவரைப் போல.

அவர் அவனை நாற்காலியில் உட்கார வைத்து எங்கோ தொலைவைப்பார்த்தபடி பேசிக்கொண்டு போனார்.

"இந்தத் தீவிலே சிங்களன் எத்தனை காலமா இருக்கானோ அத்தனை காலமா நாமும் இருந்து வருகிறோம். ஆனா சரித்திர காலமா ஒரே குடும்பமா வாழ்ந்ததில்லே. தனித் தனிப் பிரிவுகளாகவே. தனித்தனி கலாசாரத்தைப் பத்திரமா காப்பாற்றி வருகிறோம். கொஞ்சம் அதிக பத்திரமாவே காப்பாத்திக் கொண்டு வருகிறோம் என்று நினைக்கிறேன். வடக்கிலேயும் கிழக்கிலேயும் தனி ராஜ்யங்களாகவே தொன்று தொட்டு இருந்ததாலே இருக்கலாம். பிரிட்டிஷ்காரன் வந்தான். இணையாமல் வாழ்ந்து வந்த இனங்களை ஒரே அமைப்புக்குக் கீழ் கொண்டு வந்தான். ஆங்கிலம் போதிச்சான். ஆங்கிலம் படிச்சவனுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தான். நம்ம வட பகுதி வறண்ட பூமி.வானம் பார்த்த பூமி. பயிரை வளர்ப்பதைவிட மூளையை வளர்ப்பது நமக்குச் சுலபம். படிப்புதான் நமக்கு மூலதனம்.யாழ்ப்பாணத் தமிழர்கள் எல்லாருக்கும் பக்கென்று படிப்பு வந்த மாதிரி சிக்கென்று வேலை வாய்ப்பு அரசாங்கத்திலே கிடைச்சது. பதவி உயர்வு வந்தது. பிரிட்டிஷ்காரன் இன்னொரு வேலையும் செய்தான். பல ஆயிரம் தமிழர்களை இந்தியாவிலிருந்து இங்கே குடியேற்றினான், தோட்ட வேலைக்கு. அடிமைகளைப் போல வாழ்ந்த அவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு ஜனத்தொகையிலே ஒன்பது சதவீதம்.கேவலமான வாழ்க்கை வாழ்ந்தாலும், நம்ம ஜனங்கள் அவர்களுடன் சினேகிதமா இல்லாவிட்டாலும், தங்களுடைய யூனியன் பலத்தினாலே அவர்கள் சார்பிலே பல தமிழர்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க முடிந்தது. இந்தத் தீவுக்குச் சுதந்திரம் கிடைச்சபோது சிங்களனும் தமிழனும் சம உரிமையோடு சேர்ந்து வாழ்வது என்கிற அடிப்படைக் கருத்தோடுதான், நம்பிக்கையோடுதான் இயங்க ஆரம்பித்தோம். ஆனால் நாம் சிறுபான்மையோர் என்கிற எண்ணம் சிங்களவர்களுக்கு வந்துவிட்டது. நமக்குக் கிடைக்க வேண்டிய அந்தஸ்தை விட அதிகமாகக் கிடைத்து விட்டதாகத் தோன்றிவிட்டது. நமது பலத்தைக் குறைக்க இந்தியத் தமிழகத் தமிழர்களின் பிரஜா உரிமையை முதலில் பறித்தார்கள். நம்மவர் சிலர் அதைப் பலமாக எதிர்த்தாலும், பதவியில் இருந்த பல இலங்கைத் தமிழர்கள் பின்னால் நம்மையே இது பாதிக்கப் போகிறது என்கிற நினைப்பு இல்லாமல் பேசாமல் இருந்தார்கள். சிங்கள அரசு அதோடு சும்மா இல்லை. சிங்களம் மட்டுமே அரசு மொழி என்றாக்கியது. சிங்களம் படித்தவனுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு உண்டு. உன் அப்பா அதனாலேதானே கொழும்பு வேலையை விட்டு வந்தார்? அதோடு இப்பொழுது கல்லூரிகளிலே தரப்படுத்துதல் சட்டம் வந்துவிட்டது. தமிழ் மாணவன் நல்ல எண்ணிக்கை வாங்கியிருந்தாலும் குறைந்த எண்ணிக்கை வாங்கின சிங்கள மாணவனுக்குத்தான் இடம் கிடைக்கும். இப்படி ஒவ்வொரு விதத்திலேயும் அரசு நம்மை ஒடுக்கப் பார்க்கிறது?"

"ஏன்? நாம் என்ன தப்பு செஞ்சோம்?" ராசமாணிக்கம் அவன் கையைப் பற்றிக்



மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
ACIL/009/86-Tam

கொண்டார் ஆதரவாக. இவனுக்கு எப்படிச் சொன்னால் புரியும் என்று யோசிப்பவர் போல மெல்லச் சொன்னார்.

''இப்ப இருக்கும் சமூக அரசியல் அமைப்பிலே நாம் சிறுபான்மையாப் போனதுதான் காரணம். துரதிர்ஷ்டவசமா ரொம்பப் பிற்போக்கு எண்ணங் கொண்ட பௌத்த மடாதிபதிகளுடைய ஆதிக்கம் அரசியல்லே அதிகமா இருக்கு. பல புராணக் கதைகளை இப்பவும் சொல்லித் தமிழனால் தங்கள் கலாசாரத்துக்கும் மொழிக்கும் அபாயம் என்ற எண்ணத்தைப் பரப்பி அரசியலையும் அந்த எண்ணத்துக்குப் பணிய வைத்திருக்கார்கள். அரசியல்வாதிகளுக்கும் அந்த எண்ணம் சாதகமானது. அதனால் தான் நமக்கு எதிராவே ஒவ்வொரு காரியமும் நடக்கிறது. கிழக்குப் பகுதி தமிழ்ப் பகுதியாவே எப்பவும் இருக்கு. அங்கே நம்ம பலம் குறையணும் என்று சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி வருகிறார்கள். அரசியலிலே மதமும் தீவிரமாப் புகுந்தால் இப்படிப்பட்ட விளைவுகள்தான் வரும் தம்பி.''

விருக்கென்று ஜயசீலன் எழுந்தான்.

''எங்கே தம்பி கிளம்பினே?''

''எனக்கு அலுத்துப் போச்சு உங்கள் பேச்சு. இந்த விளக்கங்களாலே நமக்கு என்ன லாபம்? அடி வாங்கிக் கொண்டு தானே உட்கார்ந்திருக்கோம்? இண்டைக்குக் கண்ணாலே நான் பார்த்தேன் — அமைதியா உட்கார்ந்திருந்த ஜனங்கள் அடிபட்டுச் செத்ததை. கண் முன்னாலே பார்த்தேன், பொன்னம்பலம் மாமா...''

அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் முட்டி நின்றது. அவர் அருகில் வந்து அவனை அணைத்துக் கொண்டார்.

''எங்கள் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு தான் இருக்கோம் தம்பி., பொறுமை வேணும். ஆயுதமே ஏந்தாமல் பட்டினிப் போராட்டத்தாலேயே ஒரு பெரிய வல்லரசைப் பணிய வைத்தார் காந்தியடிகள். உனக்குத் தெரியுமா?''

அவன் கூர்மையாக அவரைப் பார்த்தான்.

''நீங்கள் எல்லாம் காந்தியடிகள் இல்லே. உங்க பட்டினிப் போராட்டத்தாலே எதுவும், நடக்கப் போறதில்லே!''

அவன் மறுவிநாடி அங்கு நிற்காமல் சைக்கிள் மேல் அமர்ந்து விரைந்தான்.

அன்றிரவு ஜஸ்டின் அவனை ரகசியமாக அழைத்துச் சொன்னான்.

''நேற்று மாநாட்டிலே நடந்த சாவுகளுக்குக் காரணமான போலீஸ் அதிகாரி சந்திரசேகராவையும் தமிழினத் துரோகி மேயர் துரையப்பாவையும் தீர்த்துக் கட்ட மாணவர் இயக்கம் தீர்மானம் செய்திருக்கு. அதிலே தேவநேசனும் இருக்கான்.''

(தொடரும்)

தண்டனை!



வெயிலில் சுற்றித் திரிந்தவனுக்குத் திடீரென நிழல் கிடைத்ததுபோல், வேலை தேடிக் களைத்த எனக்கு யார் மூலமாகவோ அந்த வேலை கிடைத்தது.

வேலையில் சேர்ந்த முதல் நாள், அலுவலகத்துள் நுழைந்த போது அங்கிருந்த அனைவரின் சுறுசுறுப்பும் என்னை வியக்க வைத்தது. 'பரந்தாமன் மேலாளர்' என்று எழுதியிருந்த அறைக்குள் நுழைந்தேன். என்னைச் சிரித்தபடியே வரவேற்றார் பரந்தாமன்.

"வாங்க! என்ன விஷயம்?" என்றவரிடம், அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டரைக் காண்பித்து அறிமுகப்படுத்திக் கொண்டதும், சந்தோஷமாய்க் கைகொடுத்து, வாழ்த்தினார்.

என்னை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளிவந்தவர், சுறுசுறுப்பாய் இருந்த தன் சக ஊழியர்களிடம் மன்னிப்புக் கோரி, சில நிமிடங்கள் தனக்காக ஒதுக்கக் கேட்டு, என்னை எல்லோருக்கும் அறிமுகப் படுத்தினார்.

பத்து மணிக்கு அலுவலகம் ஆரம்பம். பத்து ஒன்றுக்கு ஒருவர் சீட்டில் இல்லையென்றால் அன்று அவர் ஆபீசுக்கு வரப் போவதில்லை என்று அடித்துச் சொல்லி விடலாம். — அந்த அளவுக்கு எல்லோரும் நேரம் தவறாமையைக் கடைப்பிடித்தனர்.

தாமதமாய் வருவது மேனேஜருக்குப் பிடிக்காது. அவருக்குக் கோபம் வந்துவிடும் என்று அனைவருமே பயந்தனர்.

எனக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

அன்றைக்குச் சற்றுத் தாமதமாகவே எழுந்து கொண்டேன். நிதானமாகக் கிளம்பி, பத்து மணிக்கு பஸ் ஸ்டாண்டை அடைந்த போது, ஒருநாள் லஞ்ச் அவரில் ஏகாம்பரம் கூறியது நினைவிற்கு வந்தது. "பிரதீபன்! தக்க காரணத்தோட 'லீவ்' எடுத்துக்குங்க. அதுக்கு மேனேஜர் ஒண்ணும் சொல்ல மாட்டார். ஆனா(ல்) தாமதமா மட்டும் ஆஃபீஸ் வந்துடாதீங்க. அப்புறம் அவரைச் சமாளிக்கிறது கஷ்டம்."

'ஏகாம்பரம் சார், நீங்க எல்லாருமே அனாவசியமா அவருக்குப் பயப்படறீங்க. இதோ இன்னிக்கு நான் தாமதமாகத்தான் வருகிறேன். அதற்கு அவர் என்ன சத்தம் போட்டாலும் அதற்கு எதிராகப் பதில் கூறி, நாளையிலிருந்து யார் தாமதமாக வந்தாலும் கண்டுக்காத மாதிரி இருக்க வைக்கிறேன். பாருங்க!' என்று நினைத்தவாறே அலுவலகத்துக்குள் நுழைந்தேன்.

அனுதாபமாய் என்னைப் பார்த்தவர்களைப் பெருமையாய்ப் பார்த்துக் கொண்டே எனது இருக்கையை அடைந்தவன் அதிர்ந்து போனேன்.

அங்கே —

மேனேஜர் உட்கார்ந்து கொண்டு பைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவசர அவசரமாய் அவரை நெருங்கி... "குட்மார்னிங் சார்! அவசரமா ஒரு இதுக்கு, அதுக்கு..." என்று எதையெதையோ உளறிக் கொட்டினேன்.

என்னை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், எதுவுமே பேசாமல், மும்முரமாக ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் சங்கடத்துடன் நெளிந்தேன்.

மீண்டும் பலமுறை கூப்பிட்டும் எதையெதையோ கூறியும் அவர் கவனிக்காமல் என் ஃபைல்களையே பார்த்துக் கொண்டிருக்க, அவரிடம் கையெழுத்து வாங்க வந்தவர்கள் என்னைக் குற்றம் சாட்டுவது போல் பார்த்து விட்டுப் போக, தர்ம சங்கடமாய் உணர்ந்தேன்.

'உட்கார்' என்றும் சொல்லாமல் அவர் மௌனமாகவே இருக்க, நின்றேன்... நின்றேன்... நின்று கொண்டே இருந்தேன், லஞ்ச் டைம் வரை...

சரியாய் மணி ஒன்றடித்தவுடன் மேனேஜர் எழுந்தார். என்னை நேராகப் பார்த்து லேசாகச் சிரித்து விட்டுத் தமது அறைக்கு விரைந்தார். நான் அவரை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலைகுனிந்தேன்.

இப்பொழுதெல்லாம் நான் அலுவலகத்திற்குச் சரியாகப் போய்விடுகிறேன்.

— மேகதூதன்

"மாப்பிள்ளைக்கு எங்கே வேலை?"

வந்த விருந்தாளிகள் அத்தனை பேரும் வாய்க்கு வாய் இதையே விசாரித்தனர்.

பதில் சொல்லத் தோன்றாமல், மென்று விழுங்கினாள், விசாலம்.

மனம் நொந்து போகும் போது, வார்த்தைகளுக்கு வாசல் ஏது?

அதோ...

மாலையும், கழுத்துமாக வரவேற்பில் உட்கார்ந்திருக்கிறானே, அங்குராஜ்.

அவன்தான் விசாலத்தின் மாப்பிள்ளை.

சந்தன பேலா மாதிரி உருண்டு திரண்டு அழகாய்த்தான் இருந்தான், ஆள். ஆனால் இந்த பர்சனாலிடிக்கு, ஓர் ஐந்தடுக்கு அலுவலகக் கட்டடத்துக்கு முன்பு, ஸ்கூட்டரை விட்டு இறங்கினால் எத்தனை அழகாய் இருக்கும்? 'நார்த் ஸ்டார் ஹவு' கிசுகிசுக்க அதன் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றால் எத்தனை கம்பீரமாய் இருக்கும்?

'என் மாப்பிள்ளை ஆபீஸ் உத்தியோகம் பார்க்கிறார்' என்று நெஞ்சு நிமிர்த்திப் பதில் சொல்லலாமே.

ஆனால் —

காந்தி மார்க்கெட் அருகில் ஒரு சின்ன கடை வைத்திருந்தான், அங்குராஜ். சொற்பப் படிப்பு. ஆனதால், தந்தை விட்டுப் போன கடையைச் சாசனமாய் எடுத்துக் கொண்டான், தனயன்.

'மருமகனுக்குக் கடை வியாபாரம்' என்று சொல்ல வெட்கமாய் இருந்தது விசாலத்துக்கு.

இன்னும் ஓர் ஐந்தாயிரம் அதிகம் கொடுத்திருந்தால் ஆபீஸ் மாப்பிள்ளை கிடைத்திருப்பானோ...?

தன் வீட்டுக் கல்யாணம் என்னும் மகிழ்ச்சியைப் பறி கொடுத்துவிட்டு, சோர்வைச் சுமந்து நின்றாள் விசாலம்.

அப்போது —


"விசாலம்... விசாலம்..."

தடுக்கி விழுகிறவர் போல் பரபரப்புடன் ஓடிவந்தார், சுந்தரேசன். "ஒரு பெரிய சிக்கலிலே மாட்டிக் கொண்டு விட்டேன்" என்றார்.

ஏற்கெனவே விரிசல் கண்டிருந்த விசாலத்தின் மனம் இப்போது கணவனின் பதற்றத்தைக் கண்டதும் இடிந்து நொறுங்கியது.

"சிக்கலா?"

"ஆமாம். பி. எஃப் லோன் போட்டிருந்தேன். இல்லையா? அது வெள்ளிக்கிழமையே சாங்ஷன் ஆகி என்னுடைய பாங்க் அக்கவுண்டிலே கிரெடிட் ஆகி இருக்க வேண்டும். அதை நம்பித்தான் நகைக் கடைக்கார



காந்தி மார்க்கெட் கடைக்காரர்

தமிழினியன்

ருக்கு செக் கொடுத்து விட்டு வந்தேன். ஆனால், பி. எஃப் கமிட்டி செகரட்டரி போன வாரம் முழுக்க லீவாம். பணம் இன்னும் கிரெடிட் ஆகவில்லை." — மிடறு விழுங்கினார் சுந்தரேசன்.

"ம்..."

"பணம் பண்ண முடியாத செக்கை எடுத்துக் கொண்டு கோபத்துடன் வந்திருக்கிறார், நகைக் கடைக்காரர்..."

"அப்...படி...யா...?" பொறி கலங்கினாள், விசாலம். கணப் பொழுதுதான். மறு கணமே மலர்ந்தது அவள் முகம். "எனக்கு ஒரு யோசனை."

"சீக்கிரம் சொல்லு."

"உங்கள் ஆபீசிலிருந்து மானேஜர்கள், இன்ஜினீயர்கள் எல்லாரும் கல்யாணத்துக்கு வந்திருப்பதாகச் சொன்னீர்களே, அவர்கள் யாரிடமாவது கேளுங்களேன். நாளைக்கு லோன் கிடைத்ததும் கொடுத்து விடலாம்."

"நீ ஒண்ணு விசாலம். அவ்வளவு பெரிய தொகையை யார் வைத்திருக்கப் போகிறார்கள். ஒண்ணு... ரெண்டு இருந்தாலும் பாங்கிலேதான் இருக்கும். இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. பாங்க் கிடையாது."

"ஐயோ, இப்ப என்ன பண்றது?" நடுங்கினாள், விசாலம்.

மனுஷன் வந்திருக்கிற வேகத்தைப் பார்த்தால், எந்தச் சமாதானத்தையும் கேட்கிறவராய்த் தெரியவில்லை. நாம் ஏதோ ஏமாற்றி செக் எழுதிக் கொடுத்ததாக நினைக்கிறார். நான் ஏதாவது சமாதானம் சொல்லப் போய், அவர் கல்யாணப் பந்தியிலே ஏடாகூடமாக ஏதாவது பேசி மானத்தை வாங்கிடுவாரோன்னு பயமாய் இருக்கு."

வரவேற்பில், அன்பளிப்புகளையும், வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டிருந்த அங்குராஜுவுக்கு என்னவோ அவசரம்.

'மாப்பிள்ளை வீட்டார்' அறைக்குள் நுழைந்த போது, பக்கத்து அறையில் மாமாவும், அத்தையும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான்.

அங்கே பிரவேசித்தான்.

'பந்தலில் கடனைக் காக்க வைத்துவிட்டு இங்கே உங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி?' என்ற உரிமை கலந்த கண்டிப்புடன், "எவ்வளவு தொகை, மாமா?" என்றான்.

"இருபத்தைந்து ரூபாய்."


"லட்சமா...?"

"ஹி... ஹி... ஆயிரம்தான்..." அசட்டுத்தனத்தோடும், அதிர்ச்சியோடும் மாமா சிரிக்க, மருமகன் அலட்சியமாகச் சிரித்தான்.

"இருபத்தைந்து நிமிஷம் டைம் கொடுப்பீர்களா?"

"எதற்கு?"

"இந்தக் கல்யாண மண்டபத்திலிருந்து, காந்தி மார்க்கெட்டுக்கு ஆட்டோவில் போய் வர வேண்டாமா? அதற்கான அவகாசம்."



"தூங்கி எழுந்து வர்ற நீ, எப்படி புத்துணர்ச்சியோட வர்றே?"

"குளிக்கிற மாதிரி கனவு கண்டேனே!"

— கீழை அ. கதிர்வேல்

ஒன்றுமே புரியவில்லை.

விழித்த விழி விழித்தவராய், தலையசைத்தார், சுந்தரேசன்.

ஆண்கள் பகுதியில்,

கதரில் அரைக்கைச் சட்டையும், அங்கவஸ்திரமும் அணிந்து, சந்தனப் பொட்டு தரித்திருந்தார் அந்த நடுத்தர வயதுக்காரர்.

அவரது காதில் என்னவோ சொன்னான், அங்குராஜ். அதைக் கேட்டவர், அவரைப் போலவே பக்கத்தில் இருந்த இன்னொருத்தரையும் அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

அடுத்த இருபத்தைந்தாவது நிமிடம்...

"இந்தாருங்கள் மாமா... இருபத்தையாயிரம்" என்று காகிதப் பொட்டலம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான், அங்குராஜ்.

அத்தனையும் கனவு போல் இருந்தது சுந்தரேசன், விசாலம் தம்பதிகளுக்கு.

"மாப்பிள்ளை... இவ்வளவு பெரிய தொகை... எப்படி... அதற்குள் நீங்க...?" நம்ப முடியாத பிரமையில் நாக் குழறினார், சுந்தரேசன்.

அங்குராஜ் நிதானமாகச் சிரித்தான்.

"கடை கண்ணி வைத்து வியாபாரம் செய்கிறவர்களுக்கு இது ஒரு சௌகரியம், மாமா. எப்போதும் பணம் கைப்புழக்கத்தில் இருந்து கொண்டே இருக்கும். எவ்வளவு பெரிய தொகையானாலும் ஐந்து நிமிஷத்திலே புரட்டி விடலாம். சீக்கிரம் நகைக் கடைக்காரரை அனுப்பி வையுங்கள். நண்பர்கள் காத்திருக்கிறார்கள். நான் வர்றேன். வர்றேன், அத்தை."

அறையை விட்டு வெளியேறினான், அங்குராஜ்.

பணப் பொட்டலத்துடன் வேறொரு திசையில் விரைந்தார், சுந்தரேசன்.

விசாலம் —

'என் மாப்பிள்ளைக்கு காந்தி மார்க்கெட்டில் கடை' என்பதைச் சொல்ல மகிழ்ச்சியுடன் காத்திருந்தாள்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



அத்தியாயம் 12

குருவும் சீடனும்

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை இக்கதையைப் படித்து வரும் நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலுக்காவில் **அன்பில்** என்ற பெயர் கொண்ட கிராமம் ஒன்று இருக்கிறது. இதை வடமொழியாளர் 'பிரேமபுரி' என்று மொழி பெயர்த்துக் கையாண்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கிராமத்தில் ஒரு வேளாளர் தம்முடைய பழைய வீட்டை இடித்துப் புதுப்பித்துக் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டினார். அப்போது ஓர் அதிசயமான வஸ்து பூமிக்கடியிலிருந்து அகப்பட்டது. பல செப்புத் தகடுகளை நுனியில் துவாரமிட்டு வளையத்தினால் கோத்திருந்தது. அந்தத் தகடுகளில் ஏதோ செதுக்கி எழுதப்பட்டிருந்தது. இரண்டு ஆள் தூக்க முடியாத கனமுள்ள அந்தத் தகடுகளை அவர் சில காலம் வைத்திருந்தார். பிறகு அந்தக் கிராமத்துக் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யலாம் என்று வந்த ஸ்ரீ ஆர். எஸ். எல். லக்ஷ்மண செட்டியார் என்பவரிடம் அத்தீகடுகளைக் கொடுத்தார். ஸ்ரீ லக்ஷ்மணச் செட்டியார் அத்தகடுகளில் சரித்திர சம்பந்தமான விவரங்கள் இருக்கலாம் என்று ஊகித்து அவற்றை எடுத்துக்கொண்டு போய் மகாமகோபாத்தியாய சுவாமிநாத அய்யர் அவர்களிடம் தந்தார். அய்யர் அவர்கள் அச்செப்பேடுகளில் மிக முக்கியமான விவரங்கள் இருப்பதைக் கண்டு அந்த நாளில் சிலாசாஸன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ டி. ஏ. கோபிநாதராவ் எம். ஏ. என்பாரிடம் அத்தகடுகளைச் சேர்ப்பித்தார். ஸ்ரீ கோபிநாதராவ் அச்செப்புத் தகடுகளைக் கண்டதும்

அருமையான புதையலை எடுத்தவர் போல் அகமகிழ்ந்தார். ஏனென்றால், சோழ மன்னர்களின் வம்சத்தைப் பற்றிய அவ்வளவு முக்கியமான விவரங்கள் அச்செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன.

சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் 'மான்ய மந்திரி'யான அன்பில் அநிருத்தப் பிரமராயருக்குச் சக்கரவர்த்தி, பட்டத்துக்கு வந்த நாலாம் ஆண்டில் அளித்த பத்துவேலி நில சாஸனத்தைப் பற்றிய விவரங்கள் அந்தச் செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த நில சாஸனத்தை எழுதிய மாதவ பட்டர் என்பவர் சுந்தர சோழர் வரைக்கும் வந்த சோழ வம்சாவளியை அதில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அநிருத்தப் பிரம்மராஜரின் வைஷ்ணவப் பரம்பரையைக் குறிப்பிட்டு, அவருடைய தந்தை, தாயார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியவர்கள் ஸ்ரீ ரங்கநாதரின் ஆலயத்தில் செய்து வந்த சேவையைக் குறித்தும் எழுதியிருந்தார்.

இதற்கு முன்னால் அகப்பட்டிருந்த ஆனைமங்கலச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் — ஆகியவற்றில் கொடுத்திருந்த சோழ வம்சாவளியுடன் அன்பில் செப்பேடுகளில்கண்டது பெரும்பாலும் ஒத்திருந்தது. எனவே, அந்தச் செப்பேடுகளில் கண்டவை சரித்திர பூர்வமான உண்மைவிவரங்கள் என்பது ஊர்ஜிதமாயிற்று. மற்ற இரண்டு செப்பேடுகளில் காணாத இன்னும் சில விவரங்களும் இருந்தபடியால், "அன்பிற் செப்பேடுகள்" தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சித் துறையில் மிகப் பிரசித்தி அடைந்தன.

எனவே, அநிருத்தப் பிரம்மராஜர் என்பார் சரித்திரச் செப்பேடுகளில் புகழ் பெற்ற சோழ சாம்ராஜ்ய மந்திரி என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு மேலே கதையைத் தொடர்ந்து படிக்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.



மானிய முதன் மந்திரி அநிருத்தப்பிரம்மராஜர் வீற்றிருந்த மண்டபத்துக்குள் ஆழ்வார்க்கடியான் பிரவேசித்தான். அவரை மூன்று தடவை சுற்றி வந்தான். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்தான்.

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு!" என்று நாலு தடவை உரத்த குரலில் உச்சரித்து விட்டு, "குருதேவரே! விடைகொடுங்கள்!" என்றான்.

அநிருத்தர் புன்னகையுடனே "திருமலை! என்ன இந்தப்போடுபோடுகிறாய்? எதற்கு என்னிடத்தில் விடை கேட்கிறாய்?" என்றார்.

"தாஸன் அவலம்பித்த ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தையும், 'ஆழ்வார்க்கடியான்' என்ற பெயரையும் தங்களுக்குக் கைங்கரியம் செய்யும் பாக்கியத்தையும் இந்த மாகடலில் அர்ப்பணம் செய்துவிட்டு வீர சைவ காளாமுக சம்பிரதாயத்தைச் சேர்ந்து விடப் போகிறேன். கையில் மண்டை ஓட்டை எடுத்துக் கொண்டு 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு' என்ற மகத்தான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஊர் ஊராகப் போவேன்! தலையில் ஜடாமகுடமும் முகத்தில் நீண்ட தாடியும் வளர்த்துக் கொண்டு, எதிர்ப்படுகிற ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய மண்டைகளையெல்லாம் இந்தத் தடியினால் அடித்துப் பிளப்பேன்!......"

"அப்பனே! நில்! நில்! என்னுடைய மண்டைக்குக் கூட அந்தக் கதி தானோ?"

"குருவே! தாங்கள் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தை இன்னமும் அவலம்பிக்கிறவர்தானே?"

"திருமலை! அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்? என்னை யார் என்று நினைத்தாய்?"

"தாங்கள் யார்? அது விஷயத்திலேதான் எனக்கும் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. இரண்டு நதிகளின் நடுவில் அறிதுயில் புரிந்து சகல புவனங்களையும் காக்கும் ஸ்ரீ ரங்கநாதருக்குப் பணி செய்வதையே வாழ்க்கை எடுத்த பயனாகக் கொண்டிருந்த அன்பில் அனந்தாழ்வார் சுவாமி

களின் கொள்ளுப் பேரர் தாங்கள் தானே!......''


''ஆம், அப்பனே! நான்தான்!''

''ஸ்ரீமந் நாராயண நாமத்தின் மகிமையை நானிலத்துக்கெல்லாம் எடுத்துரைத்த அன்பில் அநிருத்தப் பட்டாச்சாரியின் திருப்பேரரும் தாங்கள் தானே?''

''ஆமாம்! நானே தான்! அந்த மகானுடைய திருநாமத்தைத் தான் எனக்கும் சூட்டினார்கள்!''

''ஆழ்வார்களுடைய அமுதொழுகும் மதுரகீதங்களைப்பாடிப் பக்த கோடிகளைப் பரவசப்படுத்திவந்தநாராயண பட்டாச்சாரியின் சாக்ஷாத் சீமந்த புத்திரரும் தாங்களேயல்லவா?''

''ஆமாம், அப்பா ஆமாம்!''



''ஸ்ரீ ரங்கநாதர் பள்ளி கொண்ட பொன்னரங்கக் கோயிலில் தினம் தினம் நுந்தா விளக்கு ஏற்றி வைத்தும், யாத்திரிகர்களுக்கு வெள்ளித் தட்டில் அன்னமிட்டும் கைங்கரியம் புரிந்து வந்தமங்கையர் திலகத்தின் புதல்வரும் தாங்களே அல்லவா?''

''சந்தேகமே இல்லை!''

''அப்படியானால், என் கண்கள் என்னை மோசம் செய்கின்றனவா? என் கண் முன்னே நான் பார்ப்பது பொய்யா? என் இரு செவிகளில் நான் கேட்டதும் பொய்யா?''

''எதைச் சொல்கிறாய், அப்பனே? உன் கண்களின் மேலும் காதுகளின் பேரிலும் சந்தேகம் கொள்ளும்படி என்ன நேர்ந்து விட்டது?''

''தாங்கள் இந்த ஊர்ச் சிவன் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் — அர்ச்சனை எல்லாம் நடத்தி வைத்ததாக என் செவிகளால் கேட்டேன்.''

''அது உண்மையேதான்; உன் செவிகள் உன்னை மோசம் செய்து விடவில்லை.''

''தாங்கள் சிவன் கோவிலுக்குப் போய் வந்ததின் அடையாளங்கள் தங்கள் திருமேனியில் இருப்பதாக என் கண்கள் காண்பதும் உண்மை தான் போலும்!''

''அதுவும் உண்மையே!''

''இந்தக் கலியுகத்தில் ஸ்ரீமந்நாராயணனே தெய்வம் என்றும், ஆழ்வார்களின் பாசுரங்களே வேதம் என்றும், ஹரிநாம சங்கீர்த்தனமே மோட்சத்தை அடையும் மார்க்கம் என்றும் எனக்குக் கற்பித்த குருதேவர் தாங்களே அல்லவா?''

''ஆம்; அதனால் என்ன?''

''குருதேவராகிய தாங்களே சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருந்தால், சீடனாகிய நான் என்ன செய்யக் கிடக்கின்றது?''

"திருமலை! நான் சிவன் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்தது பற்றித்தானே சொல்கிறாய்?"

"குருதேவரே! அங்கே எந்தக் கடவுளைத் தரிசனம் செய்தீர்கள்?"

"சந்தேகம் என்ன? நாராயண மூர்த்தியைத்தான்."

"இராமேச்சுரக் கோயிலுக்குள் இலிங்க வடிவம் வைத்திருப்பதாகவல்லவோ கேள்விப்பட்டிருக்கிறேன்! அதனால்தானே இங்குள்ள வீரசைவ பட்டர்மார்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அவ்வளவு கொக்கரித்தார்கள்?"

"பிள்ளாய்! நீ திருநகரியில் திரு அவதாரம் செய்த நம் சடகோபரின் அடியார்க்கடியான் என்று நாமம் பூண்டிருப்பது சத்தியந்தானே?"

"அதில் என்ன சந்தேகம்?"

"நம்மாழ்வாரின் அருள்வாக்கைச் சற்று ஞாபகப்படுத்திக் கொள். நீ மறந்திருந்தால் நானே நினைவூட்டுகிறேன். கேள்:

'இலிங்கத்திட்ட புராணத்தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும்
மற்று நுந் தெய்வமுமாகி
நின்றானே!...'

இவ்வாறு சடகோபரே சாதித்திருக்கும்போது சிவலிங்கத்தில் நான் நாராயணனைத் தரிசித்தது தவறா?"

"ஆகா! சடகோபரின் அருள் வாக்கே வாக்கு! இலிங்கத்தை வழிபடுவோரைச் சமணரோடும் சாக்கியரோடும் கொண்டு போய்த் தள்ளினார், பாருங்கள்!"

"அப்பனே! உன் குதர்க்க புத்தி உன்னை விட்டு எப்போது நீங்குமோ, தெரியவில்லை. நம் சடகோபர் மேலும் சொல்லியிருப்பதைக் கேள்.

'நீராய் நிலனாய்த் தீயாய் காலாய்
நெடுவானாய்ச்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச்
சிவனாய் அயனாய்...'

கள்ளவன் ஸ்ரீ நாராயண மூர்த்தியே என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இன்னும் கேள், திருமலை! கேட்டு உன் மனமாசைத் துடைத்துக் கொள்!

'முனியே நான்முகனே
முக்கண்ணப்பா! என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே என் கள்வா!
தனியேன் ஆருயிரே என்தலை
மிசையாய் வந்திட்டு...'

கேட்டாயா, திருமலை! 'முக்கண்ணப்பா!' என்று நம் சடகோபர் கூவி அழைத்துத் தம் தலைமீது வரும்படி பிரார்த்திக்கிறார்! நீயோ சிவன் கோயிலுக்கு நான் போனது பற்றி ஆட்சேபிக்கிறாய்!......"

"குருதேவரே! மன்னிக்க வேண்டும்; அபசாரத்தை க்ஷமிக்க வேண்டும்! நம்மாழ்வாரின் பாசுரங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ளாமையினால் வீண் சண்டைகளில் காலங் கழித்தேன். தங்களையும் சந்தேகித்தேன். இனி எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள வேண்டும்."

"என்ன வரம் வேண்டும் என்று சொன்னாயானால், கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்."

"திருக்குருகூர் சென்று அங்கேயே தங்கிவிட ஆசைப்படுகிறேன். நம் சடகோபரின் ஆயிரம் பாடல்களையும் சேகரித்துக் கொண்டு பிறகு ஊர் ஊராகச் சென்று அந்தப் பாடல்களைக் கானம் செய்ய விரும்புகிறேன்..."

"இந்த ஆசை உனக்கு ஏன் வந்தது?"

"வடவேங்கடத்திலிருந்து வரும் வழியில் வீரநாராயணப் பெருமான் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்கள் சிலவற்றைப் பாடினேன். அந்தச் சந்நிதியில் கைங்கரியம் செய்யும் ஈசுவரபட்டர் என்னும் பெரியவர் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்......"

"ஈசுவர பட்டர் மகா பக்திமான்; நல்ல சிஷ்டர்."

"அவருடைய இளம் புதல்வன் ஒருவனும் அவர் அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். அந்த இளம் பாலகனின் பால் வடியும் முகம் ஆழ்வார்

பாசுரத்தைக் கேட்டுப் பூரண சந்திரனைப் போல் பிரகாசித்தது. 'மற்றப் பாடல்களும் தெரியுமா?' என்று அந்தச் சின்னஞ்சிறு பிள்ளை பால் மணம் மாறாத வாயினால் கேட்டான். 'தெரியாது' என்று சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது. ஆழ்வார்களின் தொண்டுக்கே ஏன் இந்த நாயேனை அர்ப்பணம் செய்துவிடக் கூடாது என்று அப்போதே தோன்றியது. இன்றைக்கு அந்த எண்ணம் உறுதிப்பட்டு விட்டது......''

''திருமலை! அவரவர்களும் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கீதாச்சாரியார் அருள்புரிந்திருக்கிறார் அல்லவோ?''

''ஆம், குருவே!''

''ஆழ்வார்களின் பாசுரங்களைச் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் மகான்கள் அவதரிப்பார்கள். அதுபோலவே ஆழ்வார்களுடைய பாடல்களில் உள்ள வேத சாரமான தத்துவங்களை நிரூபணம் செய்து வடமொழியின் மூலம் பரத கண்டமெங்கும் நிலை நாட்டக் கூடிய அவதார மூர்த்திகளும் இந்நாட்டில் ஜனிப்பார்கள். நீயும் நானும் இராஜ்ய சேவையை நமது ஸ்வதர்மமாகக் கொண்டவர்கள். சோழ சக்கரவர்த்தியின் சேவையில் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வதாக நாம் சபதம் செய்திருப்பதை மறந்தனையா?......''

''மறக்கவில்லை, குருவே! ஆனால் அது உசிதமா என்ற சந்தேகம் தோன்றி என் உள்ளத்தை அரித்து வருகிறது. முக்கியமாக, தங்களைப் பற்றிச் சில இடங்களில் பேசிக் கொள்வதைக் கேட்டால்......''

''என்ன பேசிக் கொள்கிறார்கள்?''

''தங்களுக்குச் சக்கரவர்த்தி பத்து வேலி நிலம் மானியம் விட்டு அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருப்பதால் தாங்கள் வைஷ்ணவ சம்பிரதாயத்தை விட்டுவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். ஜாதி-தர்மத்தைப் புறக்கணித்துக் கப்பல் பிரயாணம் செய்ததாகவும் கூறுகிறார்கள்......''

''அந்தப் பொறாமைக்காரர்கள் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய ஜாதி கிணற்றுத் தவளைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். சக்கரவர்த்தி எனக்குப் பத்து வேலி நிலம் மானியம் கொடுத்திருப்பது உண்மைதான். அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அதற்கு நாலு வருஷங்களுக்கு முன்பே சக்கரவர்த்திக்கு நான் மந்திரியானேன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?''

ஆழ்வார்க்கடியான் மௌனமாயிருந்தான்.

''சக்கரவர்த்திக்கும் எனக்கும் எப்போது நட்பு ஏற்பட்டது? என்றாவது உனக்குத் தெரியுமா? நாங்கள் இருவரும் இளம் பிராயத்தில் ஒரே ஆசிரியரிடம் பாடங் கற்றோம். செந்தமிழும் வடமொழியும் பயின்றோம். கணிதம், வான சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்தோம். அப்போதெல்லாம் சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறப் போகிறார் என்று யாரும் கனவிலும் எண்ணியதில்லை. அவராவது நானாவது அதைப் பற்றிச் சிந்தித்ததே கிடையாது. இராஜாதித்தரும் கண்டராதித்தரும் காலமாகி அரிஞ்சய சோழர் பட்டத்துக்கு வருவார் என்று யார் நினைத்தது? அரிஞ்சயருக்கு அவ்வளவு விரைவில் துர்மரணம் சம்பவித்துச் சுந்தர சோழர் பட்டத்துக்கு வரும்படியிருக்கும் என்று தான் யார் நினைத்தார்கள்? சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறிய போது அதனால் பல சிக்கல்கள் விளையும் என்று எதிர்பார்த்தார். உடனிருந்து நான் உதவுவதாயிருந்தால் பட்டத்தை ஒப்புக் கொள்வதாகவும் இல்லாவிட்டால் மறுத்து விடுவதாகவும் கூறினார். இராஜ்ய நிர்வாகத்தில் அவருக்கு உதவுவதாக அப்போது வாக்களித்தேன். அந்த வாக்குறுதியை இன்றளவும் நிறைவேற்றி வருகிறேன். இதெல்லாம் உனக்குத் தெரியாதா, திருமலை?''

''எனக்குத் தெரியும், குருதேவா! எனக்கு ஒருவனுக்கு மட்டும் தெரிந்து என்ன பயன்? ஜனங்களுக்குத் தெரியாதுதானே? நாட்டிலும் நகரத்திலும் வம்பு பேசுகிறவர்களுக்குத் தெரியாதுதானே?''

''வம்பு பேசுகிறவர்களைப் பற்றி நீ

சிறிதும் கவலைப்பட வேண்டாம். பரம்பரையான ஆச்சாரியத் தொழிலை விட்டுவிட்டு நான் இராஜ சேவையில் இறங்கியது பற்றி இதற்கு முன்னால் நானே சில சமயம் குழப்பமடைந்த துண்டு. ஆனால் சென்ற இரண்டு நாட்களாக அத்தகைய குழப்பம் எனக்குச் சிறிதும் இல்லை. திருமலை! நான் இராமேசுவர ஆலயத்தில் சுவாமி தரிசனத்துக்காக இங்கு வர வில்லை என்பதும் மாதோட்டம் போவதற்காகவே இங்கு வந்தேன் என்பதும் உனக்குத் தெரியும் அல்லவா?''

''அப்படித்தான் ஊகித்தேன், குருதேவரே!''

''நீ ஊகித்தது சரியே. அன்றைக்குச் சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பரவசமாக வர்ணித்தபடியேதான் இன்றைக்கும் பாலாவி நதிக்கரையில் மாதோட்டம் இருக்கிறது.

'வண்டுபண்செயும் மாமலர்ப்
பொழில்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந்துதிசெய
அருள்செய் கேதீச்சுர
மதுதானே!'


என்று சம்பந்தர் பாடியிருக்கிறாரே. அந்த மாதோட்டத்தை நேரில் பார்க்காமல் எழுதியிருக்க முடியுமா? இந்த இராமேச்சுரத் தீவிலிருந்தபடியே மாதோட்டத்தை எட்டிப் பார்த்து விட்டு எழுதியதாகச் சொல்லுகிறார்கள் கிணற்றுத் தவளைப் பண்டிதர்கள் சிலர். அத்தகையோர் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம்......''

''சுவாமி! மாதோட்டத்தின் இயற்கைவளங்களைக் கண்டு களிப்பதற்காகவா தாங்கள் அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்றிருந்தீர்கள்?''

''இல்லை; உன்னை அங்கே அனுப்ப எண்ணியிருப்பதால் அதைப் பற்றியும் சொன்னேன். நான் சென்றது இளவரசர் அருள்மொழி வர்மரைப் பார்ப்பதற்காக......''

''இளவரசரைப் பார்த்தீர்களா, குருதேவரே?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான். அவனுடைய பேச்சில் இப்போதுதான் சிறிது ஆர்வமும் பரபரப்பும் தொனித்தன.

''ஆகா! உனக்குக் கூட ஆவல் உண்டாகி விட்டதல்லவா, இளவரசரைப்



பற்றித் தெரிந்து கொள்வதற்கு? ஆம், திருமலை! இளவரசரைப் பார்த்தேன்; பேசினேன். இலங்கையிலிருந்து வந்து கொண்டிருந்த அதிசயமான செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நேரில் தெரிந்து கொண்டேன். கேள், அப்பனே! இலங்கை அரசன் மகிந்தனிடம் ஒரு மாபெரும் சைன்யம் இருந்தது. அந்தச் சைன்யம் இப்போது இல்லவே இல்லை. அது என்ன ஆயிற்று தெரியுமா? சூரியனைக் கண்ட பனி போல் கரைந்து மறைந்து போய்விட்டது! மகிந்தனுடைய சைன்யத்திலே பாண்டிய நாட்டிலிருந்தும் சேர நாட்டிலிருந்தும் சென்ற வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நம் இளவரசர் படைத்தலைமை வகித்து வருகிறார் என்று அறிந்ததும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்கள். ஒருவரைப் போல் அனைவரும் நம்முடைய கட்சிக்கே வந்து சேர்ந்து விட்டார்கள்! மகிந்தன் எப்படிப் போர் புரிவான்? போயே போய் விட்டான். மலைகள் சூழ்ந்த ரோஹண நாட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆக நமது சைன்யம் போர் செய்வதற்கு அங்கு இப்போது எதிரிகளே இல்லை!''

''அப்படியானால், குருதேவரே! இளவரசர் நம் சைனியத்துடன் திரும்பி விட வேண்டியதுதானே? மேலும் அங்கே இருப்பானேன்? நம் வீரர்களுக்குத் தானியம் அனுப்புவது பற்றிய ரகளையெல்லாம் எதற்காக?''

''எதிரிகள் இல்லையென்று சொல்லித் திரும்பி விடலாம். ஆனால் இளவரசருக்கு அதில் இஷ்டமில்லை.



எனக்கும் அதில் சம்மதமில்லை. இளவரசரும் சைனியமும் இப்பால் வந்ததும் மகிந்தன் மலைநாட்டிலிருந்து வெளி வருவான். மறுபடியும் பழைய படி போர் தொடங்கும். அதில் என்ன பயன்? இலங்கை மன்னரும் ப க்களும் ஒன்று நமக்குச் சிநேகிதர்களாக வேண்டும். அல்லது புலிக் கொடியின் ஆட்சியை அங்கே நிரந்தரமாக நிறுவுதல் வேண்டும். இந்த இரண்டு வகை முயற்சியிலும் இளவரசர் ஈடுபட்டிருக்கிறார். நமது போர் வீரர்கள் இப்போது இலங்கையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பழைய போர்களில் அநுராதபுர நகரமே நாசமாகி விட்டது. அங்கிருந்த பழைமையான புத்தவிஹாரங்கள், கோயில்கள், தாது கர்ப்ப கோபுரங்கள், — எல்லாம் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. இளவரசரின் கட்டளையின் பேரில் இப்போது நம் வீரர்கள் இடிந்த அக்கட்டடங்களை யெல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!''

''அழகாய்த்தானிருக்கிறது. சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கைவிட்டு இளவரசர் சாக்கிய மதத்திலேயே ஒரு வேளை சேர்ந்து விடுவாரோ, என்னமோ? அதையும் தாங்கள் ஆமோதிப்பீர்களோ?''

''நானும் நீயும் ஆமோதித்தாலும் ஒன்றுதான்; ஆமோதிக்கா விட்டாலும் ஒன்றுதான். நம்மைப் போன்றவர்கள் நம்முடைய மதமே பெரிது என்று சண்டையிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு நாட்டை ஆளும் அரசர் அவருடைய பிரஜைகள் அனுசரிக்கும் சமயங்கள் எல்லாவற்றையும் ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். இந்த உண்மையை யாருடைய தூண்டுதலுமில்லாமல் இளவரசர் தாமே உணர்ந்திருக்கிறார். சந்தர்ப்பம்கிடைத்ததும் காரியத்திலும் செய்து காட்டுகிறார். திருமலை! இதைக் கேள்! நம் இளவரசர் அருள்மொழிவர்மருடைய கரங்களில் சங்கு சக்கர ரேகை இருப்பதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன்; நீயும் கேட்டிருப்பாய். ஆனால் அவருடைய கரங்களை நீட்டச் சொல்லி நான் பார்த்ததில்லை. சங்கு சக்கர ரேகை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒன்று நிச்சயமாகச் சொல்கிறேன். இந்தப் பூமண்டலத்தை ஏக சக்ராதிபதியாக ஆளத் தகுந்தவர் ஒருவர் உண்டு என்றால் அவர் இளவரசர் அருள்மொழிவர்மர் தான். பிறவியிலேயே அத்தகைய தெய்வ கடாட்சத்துடன் சிலர் பிறக்கிறார்கள். சற்றுமுன் சில வர்த்தகத் தலைவர்களும் கைக்கோளப் படை சேநாதிபதிகளும் வந்து பேசிக் கொண்டிருந்தார்களே, அது உன் காதில் விழுந்ததா? இளவரசருக்கு என்றால் நம் வர்த்தகர்கள், — காசிலேயே கருத்துள்ளவர்கள், — எவ்வளவு தாராளமாகிவிடுகிறார்கள், பார்த்தாயா? போர் வீரர்கள் அவர் கீழிருந்து போர் செய்ய எப்படிப் போட்டி போடுகிறார்கள் பார்த்தாயா? சில நாளைக்கு முன்னால் பொதிகை மலைச் சிகரத்தில் ஒரு தவயோகியைப் பார்த்தேன். அவர் ஞானக்கண் படைத்த மகான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும். இப்போது தென்னாடு மேம்பாடு அடையும் காலம் வந்திருக்கிறது. வெகு காலமாக இப் புண்ணிய பாரத பூமியில் பெரிய பெரிய சக்கரவர்த்திகளும் வீராதி வீரர்களும் ஞானப் பெருஞ்செல்வர்களும் மகா கவிஞர்களும் வடநாட்டிலேயே அவதரித்து வந்தார்கள். ஆனால் வடநாட்டைச் சீக்கிரம் கிரகணம் பிடிக்கப் போகிறது. இமய மலைக்கு அப்பாலிருந்து ஒரு மகா முரட்டுச் சாதியார் வந்து வடநாட்டைச் சின்னாபின்னம் செய்வார்கள். கோயில்களையும் விக்கிரகங்களையும் உடைத்துப் போடுவார்கள். ஸநாதன தர்மம் பேராபத்துக்கு உள்ளாகும். அப்போது நமது தர்மம், வேத சாஸ்திரம், கோயில், வழிபாடு — ஆகியவற்றையெல்லாம் தென்னாடுதான் காப்பாற்றித் தரப் போகிறது. வீராதி வீரர்களான சக்கரவர்த்திகள் இத்தென்னாட்டில் தோன்றி நாலு திசைகளிலும் ஆட்சி செலுத்துவார்கள். மகா ஞானிகளும், பண்டிதோத்தமர்களும், பக்த சிரோமணிகளும் இத்தென்னாட்டில் அவதரிப்பார்கள்!' என்று இவ்விதம் அந்தப் பொதிகை மலைச் சிவயோகி அருளினார். அந்த யோகியின் தீர்க்க

தரிசனம் உண்மையாகும் என்ற நம்பிக்கை எனக்கு இப்போது பிறந்திருக்கிறது, திருமலை!''

''சுவாமி! தாங்கள் ஏதேதோ ஆகாசக்கோட்டைகள் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கே இராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெறியப் பார்க்கிறார்கள். குருதேவரே! நான் பார்த்ததையெல்லாம் தாங்கள் பார்த்து நான் கேட்டதையெல்லாம் தாங்களும் கேட்டிருந்தால் இவ்வளவு குதூகலமாயிருக்க மாட்டீர்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏற்படப் போகும் அபாயத்தை நினைத்துக் கதிகலங்குவீர்கள்...''

''திருமலை! ஆம், நான் மறந்தே விட்டேன். அதிக உற்சாகம் என் அறிவை மூடிவிட்டது. நீ உன் பிரயாணத்தில் தெரிந்து வந்த செய்திகளை இன்னும் நான் கேட்கவே இல்லை. சொல், கேட்கிறேன். எவ்வளவு பயங்கரமான செய்திகளாயிருந்தாலும் தயங்காமல் சொல்!''

''சுவாமி! இங்கேயே சொல்லும்படி ஆக்ஞாபிக்கிறீர்களா? நான் கொண்டு வந்த செய்திகளை வாயு பகவான் கேட்டால் நடுங்குவார்; சமுத்திர ராஜன் கேட்டால் ஸ்தம்பித்து நிற்பார்; பட்சிகள் கேட்டால் பறக்கும் சக்தியை இழந்து சுருண்டுவிடும்; ஆகாசவாணியும் பூமாதேவியும் கூட அலறி விடுவார்கள். அப்படிப்பட்ட செய்திகளை இங்கே பகிரங்கமாகச் சொல்லும்படியா பணிக்கிறீர்கள்?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''அப்படியானால் வா! காற்றும் கனலும் புகாத பாதாளக் குகை ஒன்று இந்தத் தீவிலே இருக்கிறது. அங்கே வந்து விவரமாகச் சொல்லு!'' என்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

அத்தியாயம் 13

''பொன்னியின் செல்வன்''

வந்தியத்தேவன் நாகத்தீவின் முனையில் இறங்கி மாதோட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அதே சமயத்தில், அநிருத்தப் பிரம்மராயரும் ஆழ்வார்க்கடியானும் சாம்ராஜ்ய நிலைமையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும், அம்பாரி வைத்த யானை மீது ஏறித் தஞ்சை நகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

இளையபிராட்டி சில காலமாகத் தஞ்சைக்குப் போவதில்லை என்று வைத்துக் கொண்டிருந்தாள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. தஞ்சையில் அரண்மனைப் பெண்டிர் தனித் தனியாக வசிக்கும்படியாகப் போதிய அரண்மனைகள் இன்னும் உண்டாகவில்லை. சக்கரவர்த்தியின் பிரதான அரண்மனையிலேயே எல்லாப் பெண்டிரும் இருந்தாக வேண்டும். மற்ற அரண்மனைகளையெல்லாம் பழுவேட்டரையர்களும் மற்றும் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். பழையாறையில் அரண்மனைப் பெண்டிர் சுயேச்சையாக இருக்க முடிந்தது. விருப்பம் போல் வெளியில் போகலாம்; வரலாம். ஆனால் தஞ்சையில் வசித்தால் பழுவேட்டரையர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் தீர வேண்டும். கோட்டைக்குள்ளும் அரண்மனைக்குள்ளும் இஷ்டம் போல் வருவதும் போவதும் இயலாத காரியம். அம்மாதிரி கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங்களும் இளையபிராட்டிக்குப் பிடிப்பதில்லை. அல்லாமலும் பழுவூர் இளைய ராணியின் செருக்கும் அவளுடைய அகம்பாவ நடத்தைகளும் குந்தவைப் பிராட்டிக்கு மிக்க வெறுப்பை அளித்தன. அரண்மனைப் பெண்டிர்கள் பழையாறையில் இருப்பதையே சக்கரவர்த்தியும் விரும்பினார். இந்தக் காரணங்களினால் குந்தவைப் பிராட்டி பழையாறையிலேயே வசித்து வந்தாள். உடம்பு குணமில்லாத தன் அரு

மைத் தந்தையைப் பார்க்க வேண்டும், அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஆனால் வந்தியத்தேவன் வந்து போனதிலிருந்து இளைய பிராட்டியின் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. இராஜரீகத்தில் பயங்கரமான சூழ்ச்சிகளும் சதிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நாம் பழையாறையில் உல்லாசமாக நதிகளில் ஓடம் விட்டுக் கொண்டும் பூங்காவனங்களில் ஆடிப் பாடிக் கொண்டும் காலங்கழிப்பது சரியா? தமையன் தொண்டை நாட்டில் இருக்கிறான்; தம்பியோ ஈழ நாட்டில் இருக்கிறான். அவர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் இராஜ்யத்தில் நடக்கும் விவகாரங்களை நாம் கவனித்தாக வேண்டும் அல்லவா? தலைநகரில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளை அந்தரங்கத் தூதர்கள் மூலம் அறிவிக்க வேண்டும் என்று தமையன் ஆதித்த கரிகாலன் கேட்டுக் கொண்டிருக்கிறானே? பழையாறையில் வசித்தால் தஞ்சையில் நடக்கும் காரியங்கள் எப்படித் தெரிய வரும்?

வந்தியத்தேவன் அறிவித்த செய்திகளோ மிகப் பயங்கரமாயிருந்தன. பழுவேட்டரையர்கள் தங்கள் அந்தஸ்துக்கு மீறி அதிகாரம் செலுத்தி வந்தது மட்டுமே இதுவரையில் இளைய பிராட்டிக்குப் பிடிக்காமலிருந்தது. இப்போதோ, சிம்மாசனத்தைப் பற்றியே சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! பாவம், அந்தப் பரம சாது மதுராந்தகனையும் தங்கள் வலையில்போட்டுக்கொண்டார்கள். சோழ நாட்டுச் சிற்றரசர்களையும் பெருந்தரத்து அதிகாரிகள் பலரையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ, தெரியாது. இவர்களுடைய சூழ்ச்சியும் வஞ்சனையும் துராசையும் எந்த வரையில் போகும் என்று யார் கண்டது? சுந்தர சோழரின் உயிருக்கு உலை வைத்தாலும் வைத்து விடுவார்கள்! மாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? சக்கரவர்த்தியின் புதல்வர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து விடுவது எளிதாயிருக்கும் அல்லவா? இதற்காக என்ன செய்தாலும் செய்வார்கள்! அவர்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும் அந்த ராட்சஸி நந்தினி சொல்லிக் கொடுப்பாள். அவர்கள் தயங்கினாலும் இவள் துணிவூட்டுவாள். ஆகையால் தஞ்சாவூரில் நம் தந்தையின் அருகில் நாம் இனி இருப்பதே நல்லது. சூழ்ச்சியும் சதியும் எந்த வரைக்கும் போகின்றன என்று கவனித்துக் கொண்டு வரலாம். அத்தோடு நம் அருமைத்தந்தைக்கும் ஆபத்து ஒன்றும் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

சாதுவாகிய மதுராந்தகனை ஏன் இவர்கள் சிம்மாசனத்தில் ஏற்றப் பார்க்கிறார்கள்? தர்ம நியாய முறைக்காகவா? இல்லவே இல்லை! மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டினால் அவனைப் பொம்மையாக வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டம் போல் எல்லாக் காரியங்களையும் நடத்திக் கொள்ளலாம் என்பதற்காகத்தான். அப்புறம் நந்தினி வைத்ததுதான் சோழ சாம்ராஜ்யத்தில் சட்டமாகிவிடும்! அவளுடைய அதிகாரத்துக்குப் பயந்துதான் மற்றவர்கள் வாழ வேண்டும். அவளிடம் மற்ற அரண்மனை மாதர் கைகட்டி நிற்க வேண்டும்! சீச்சீ! அத்தகைய நிலைமைக்கு இடங்கொடுக்க முடியுமா? நான் ஒருத்தி இருக்கும் வரையில் அது நடவாது. பார்க்கலாம் அவளுடைய சாமர்த்தியத்தை!

தஞ்சாவூரில் இருப்பது தனக்குப் பலவகையிலும் சிரமமாகவே இருக்கும். தாயும் தந்தையும் "இங்கு எதற்காக வந்தாய்? பழையாறையில் சுகமாக இருப்பதை விட்டு!" என்று கேட்பார்கள். சுயேச்சை என்பதே இல்லாமற் போய்விடும். தன்னுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சை யாரேனும் எடுப்பார்கள். அதைக்

கேட்கவே தனக்குப் பிடிக்காது. நந்தினியைச் சில சமயம் பார்க்கும்படியாக இருக்கும். அவளுடைய அதிகாரச் செருக்கைத் தன்னால் சகிக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் இந்தச் சமயத்தில் பார்த்தால் சரிப்படுமா? இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது; தந்தையின் உயிருக்கு அபாயம் நேரலாம் என்ற பயமும் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் இருக்க வேண்டிய இடம் தஞ்சையே அல்லவா?

இவ்வளவையும் தவிர, வேறொரு முக்கிய காரணமும் இருந்தது. அது வந்தியத்தேவனைப் பற்றி ஏதேனும் செய்தி உண்டா என்று தெரிந்து கொள்ளும் ஆசைதான். வந்தியத்தேவன் கோடிக்கரைப் பக்கம் போயிருக்கிறான் என்று தெரிந்து அவனைப் பிடித்து வரப் பழுவேட்டரையர்கள் ஆட்கள் அனுப்பியிருப்பதைப் பற்றி இளையபிராட்டி கேள்விப்பட்டாள். புத்தி யுக்திகளில் தேர்ந்த அந்த இளைஞன் இவர்களிடம் அகப்பட்டுக் கொள்வானா? ஒருவேளை அகப்பட்டால் தஞ்சாவூருக்குத்தான் கொண்டு வருவார்கள். அச்சமயம் நாம் அங்கே இருப்பது மிகவும் அவசியமல்லவா? ஆதித்த கரிகாலன் அனுப்பிய தூதனை அவர்கள் அவ்வளவு எளிதில் ஒன்றும் செய்துவிட முடியாது. ஏதாவது குற்றம் சாட்டித்தான் தண்டிக்க வேண்டும். அதற்காகவே சம்புவரையர் மகனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அது பொய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பொய் என்பதை நிரூபிக்க வேண்டும். கந்தமாறனுடன் பேசி, அவனுடைய வாய்ப்பொறுப்பை அறிந்து கொள்வது அதற்கு உபயோகமாயிருக்கலாம்......

இவ்விதமெல்லாம் குந்தவையின் உள்ளம் பெரிய பெரிய சூழ்ச்சிகளிலும் சிக்கலான விவகாரங்களிலும் சஞ்சரித்துக் குழம்பிக் கொண்டிருக்கையில், அவளுடன் யானைமீது வந்த அவள் தோழி வானதி



அருள் வாக்கு

ஒரு பெரிய ராஜா இருந்தால் எல்லாரும் ராஜாவிடமே நேரில் போக முடியுமா? அந்த ராஜாவின் பரிபாலனத்துக்கு உட்பட்ட உத்தியோகஸ்தர்களிடம், குடிமக்கள் நெருங்கித் தங்களுக்கு வேண்டிய அனுகூலங்களைப் பெறுகிறார்கள். உத்தியோகஸ்தர் தாங்களாகச் செய்வதில்லை. அரசன் உத்தரவுப்படி ஜனங்களுக்கு அனுகூலம் செய்கிறார்கள். 'அரசன்தானே செய்கிறான்!' என்று அரசனிடத்தில் குடிமக்கள் நேராகப் போக முடியாது.

அப்படித்தான் நம் மதத்தில் சில வழக்கங்கள் இருக்கின்றன. பரமேசுவரன் மகா சக்கரவர்த்தி. ஜனங்கள் குடிமக்கள். வருணன், அக்கினி, வாயு போன்ற பல தேவதைகள்தாம் உத்தியோகஸ்தர்கள். இவர்கள் மூலமாக நாம் பல நன்மைகளை அடைய வேண்டும். அதற்காகவே, தேவர்களுக்குச் சக்தி அளிக்க யாகம் பண்ணுகிறோம். அக்னி முகமாக நாம் கொடுக்கிற ஹவிஸ்கள் தேவர்களுக்குச் சேர்ந்து ஆஹாரமாகின்றன.

அக்நிமுகா: தேவா:

'நம்முடையது அன்று' என்று நாம் கொடுக்கிற பொருள்கள் தேவதைகளுக்குப் போய்ச் சேருகின்றன. அக்னியில் போடுவதுதான் நம்முடையது இல்லை என்று எரிந்து போகும். போடும்போது 'நமம' என்று சொல்லிப் போடுகிறோம். 'நமம' என்றால் என்னுடையது அல்ல என்று அர்த்தம். தேவர்களுக்கு ஆகாரம் போய்ச் சேருகிற வழிதான் அக்கினி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யின் உள்ளம் பால் போன்ற தூய்மையுடனும் பளிங்கு போன்ற தெளிவுடனும் ஒரே விஷயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு விஷயம் இளவரசர் அருள்மொழி வர்மர் எப்போது இலங்கையிலிருந்து திரும்பிவருவார் என்பதுபற்றித்தான்.

"அக்கா! அவரை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா? வந்தால் எவ்விடம் வருவார்? பழையாறைக்கா? தஞ்சாவூருக்கா?" என்று வானதி கேட்டாள்.

தஞ்சாவூருக்கு இவர்கள் போயிருக்கும்போது இளவரசர் பழையாறைக்கு வந்து விட்டால் என்ன செய்கிறது என்பது வானதியின் கவலை.


வேறு யோசனைகளில் ஆழ்ந்திருந்த குந்தவைப் பிராட்டி வானதியைத் திரும்பிப் பார்த்து, "யாரைப் பற்றியடி கேட்கிறாய்? பொன்னியின் செல்வனைப் பற்றியா?" என்றாள்.

"ஆமாம், அக்கா! அவரைப் பற்றித்தான். இளவரசரைப் 'பொன்னியின் செல்வன்' என்று நாலைந்து தடவை தாங்கள் குறிப்பிட்டு விட்டீர்கள். அதற்குக் காரணம் சொல்லவில்லை. பிற்பாடு சொல்வதாகத் தட்டிக் கழித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்போதாவது சொல்லுங்களேன். தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இந்த யானையோ ஆமை நகர்வது போல் நகர்கிறது!" என்றாள் வானதி.

"இதற்கு மேல் யானை வேகமாய்ப் போனால் நம்மால் இதன் முதுகில் இருக்க முடியாது! அம்பாரியோடு நாமும் கீழே விழ வேண்டியதுதான்! அடியே! தக்கோலப் போரில் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?"

"அக்கா! 'பொன்னியின் செல்வன்' என்னும் பெயர் எப்படி வந்தது என்று சொல்லுங்கள்!"

"அடி கள்ளி! நீ அதை மறக்க மாட்டாய் போலிருக்கிறது. சொல்கிறேன், கேள்!" என்று குந்தவைப் பிராட்டி சொல்லத் தொடங்கினாள்.



சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த புதிதில் அவருடைய குடும்பவாழ்க்கை ஆனந்தமயமாக இருந்தது. அரண்மனைப் படகில் குடும்பத்துடன் அமர்ந்து சக்கரவர்த்தி பொன்னி நதியில் உல்லாசமாக உலாவி வருவார். அத்தகைய சமயங்களில் படகில் ஒரே குதூகலமாயிருக்கும். வீணைகானமும் பாணர்களின் கீதமும் கலந்து காவேரி வெள்ளத்தோடு போட்டியிட்டுக் கொண்டு பெருகும். இடையிடையே யாரேனும் ஏதேனும் வேடிக்கை செய்வார்கள். உடனே கலகலவென்று சிரிப்பின் ஒலி கிளம்பிக் காவேரிப் பிரவாகத்தின் சலசலப்பு ஒலியுடன் ஒன்றாகும்.

சில சமயம் பெரியவர்கள் தங்களுக்குள் பேசி மகிழ்வார்கள். படகில் ஒரு பக்கத்தில் குழந்தைகள் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள். சில சமயம் எல்லோருமாகச் சேர்ந்து வேடிக்கை விநோதங்களில் ஈடுபட்டுத் தங்களை மறந்து களிப்பார்கள்.

ஒருநாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் ராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, திடீரென்று, "குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே?" என்று ஒரு குரல் எழுந்தது. இந்தக் குரல் குந்தவையின் குரல்தான். அருள்மொழிக்கு அப்போது வயது ஐந்து. குந்தவைக்கு வயது ஏழு. அரண்மனையில் அனைவருக்கும் கண்ணினும் இனிய செல்லக் குழந்தை அருள்மொழி. ஆனால் எல்லாரிலும் அவனிடம் வாஞ்சை உடையவள் அவனுடைய தமக்கை குந்தவை. படகில் குழந்தையைக் காணோம் என்பதைக் குந்தவைதான் முதலில் கவனித்தாள். உடனே மேற்கண்டவாறு கூச்சலிட்டாள். எல்லோரும் கதிகலங்கிப் போனார்கள். படகில் அங்குமிங்கும் தேடினார்கள். ஆனால் அரண்மனைப் படகில் அதிகமாகத் தேடுவதற்கு இடம் எங்கே? சுற்றிச் சுற்றித் தேடியும் குழந்தையைக் காணவில்லை. குந்தவையும் ஆதித்தனும் அலறினார்கள். ராணிகள்

புலம்பினார்கள். தோழிமார்கள் அரற்றினார்கள். படகோட்டிகளில் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித்துத் தேட லுற்றார். ஆனால் எங்கே என்று தேடுவது? ஆற்று வெள்ளம் குழந்தையை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயிருக்கும் என்று யார் கண்டது? குழந்தை எப்போது வெள்ளத்தில் விழுந்தது என்பதுதான் யாருக்குத் தெரியும்? நோக்கம், குறி என்பது ஒன்றுமில்லாமல் காவேரியில் குதித்தவர்கள் நாலாபுறமும் பாய்ந்து துளாவினார்கள். குழந்தை அகப்பட வில்லை. இதற்குள் படகில் இருந்த இராணிகள் — தோழிமார்களில் சிலர் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார்கள். அவர்களைக் கவனிப்பார் இல்லை. உணர்ச்சியோடு இருந்த மற்றவர்கள் 'ஐயோ!' என்று அழுது புலம்பிய சோகக் குரல் காவேரி நதியின் ஓங்காரக் குரலை அடக்கிக் கொண்டு மேலெழுந்தது. நதிக்கரை மரங்களில் வசித்த பறவைகள் அதைக் கேட்டுத் திகைத்து மோனத்தில் ஆழ்ந்தன.

சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. படகுக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளத்தின் மத்தியில் அது தெரிந்தது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றது. அந்த மங்கையின் வடிவம் இடுப்பு வரையில் தண்ணீரில் மறைந்திருந்தது. அப்பெண்ணின் பொன் முகமும் மார்பகமும் தூக்கிய கரங்களும் மட்டுமே மேலே தெரிந்தன. அவற்றிலும் பெரும் பகுதியைக் குழந்தை மறைத்துக் கொண்டிருந்தது. எல்லாரையும் போல் சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்றார். கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டார். இதற்குள் படகும் அவர் அருகில் சென்று விட்டது. படகிலிருந்தவர்கள் குழந்தையைச் சுந்தர சோழரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து ஏற்றி விட்டார்கள். சக்கரவர்த்தி படகில் ஏறியதும் நினைவற்றுவிழுந்துவிட்டார். அவரையும் குழந்தையையும் கவனிப்பதில் அனைவரும் ஈடுபட்டார்கள். குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்த மாதரசி என்னவானாள் என்று யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய உருவம் இப்படியிருந்தது என்று அடையாளம் சொல்லும்படி யாரும் கவனித்துப் பார்க்கவும் இல்லை. ''குழந்தையைக் காப்பாற்றியவள் நான்!'' என்று பரிசு கேட்பதற்கு அவள் வரவும் இல்லை. ஆகவே, காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழி வர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒரு முகமாக முடிவு கட்டினார்கள். ஆண்டுதோறும் அந்த நாளில் பொன்னி நதிக்குப் பூஜை போடவும் ஏற்பாடாயிற்று. அதுவரையில் அரண்மனைச் செல்வனாயிருந்த அருள்மொழி வர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்' ஆனான். அச்சம்பவத்தை அறிந்த அரச குடும்பத்தார் அனைவரும் பெரும்பாலும் 'பொன்னியின் செல்வன்' என்றே அருள்மொழி வர்மனை அழைத்து வந்தார்கள்.

(தொடரும்)

பிச்சைக்காரன்: ஐயாசாமி! ரெண்டு ரூபா இருந்தாக் கொடுங்க! நான் என் குடும்பம்இருக்கறஇடத்துக்குப்போய்ச் சேர்ந்துடறேன்!

இவர்: இந்தாப்பா ரெண்டு ரூபா! உன் குடும்பம் எங்கே இருக்கு?

பிச்சைக்காரன்: பக்கத்துத் தியேட்டரில் படம் பார்த்துக்கிட்டு இருக்கு!

—கடலூர் கன்னியப்பன்.



போட்டிக் கதை — 2

ஒரு பேனாவின் மரணம்!



பஸ்ஸில் வந்த களைப்புத்தீர, பரபரப்பில்லாத காலை நேரத்தைக் கண்களால் கிளிக் செய்தபடி நடந்தான் சுதன்.

இந்நேரம் தயாளன் என்ன செய்து கொண்டிருப்பான்? அலாரம் வைக்காமலேயே ஐந்து மணிக்கு விடியலை ரசிக்கிறவன், இந்நேரம் கையிடுக்கில் கிப்ரானோ, மேத்தாவோ... இருக்கும். இல்லை கன்னத்தை மழித்துக் கொண்டிருப்பானோ?

தயாளன் பற்றிய நினைவு நெஞ்சில் எட்டிப்பார்த்தபோதே — சுதனுக்குள் ஒரு பிரகாசம் தோன்றிற்று..

தயாளன் — பாரதியை நேசிக்கிறவன். தீட்சண்யமானவார்த்தைபிரயோகம். துணிச்சல். சாக்கடையைக்கூடச் சந்தனமாய் நினைக்கிற 'ஆப்டிமிஸ்ட்.' நண்பனே — இதோ... வருகிறேன். முந்நூற்று முப்பதாறு மாலைகள். உன் முகத்தை நேர்க்கோட்டில் சந்தித்து உரையாடாமல் உதிர்ந்திருக்கிறது. தெரியுமா?

சுதனின் சொந்த ஊரான கோவைதான் தயாளனுக்கும் சொந்தஊர். தயாளனின் தந்தை ஒரு எஸ்டேட்டில் மானேஜராக இருந்தபோது, சுதனும் தயாளனும் நண்பர்கள் ஆனார்கள்.

இருவரையும் இணைத்தது, தயாளனின் கவிதைதான். இன்றுவரை அந்த அன்புச் சங்கிலி அறுபடவே இல்லை!

காயப்படாத சாயங்காலங்களில் தயாளனின் இளநீர்க் கவிதைகளைக் கேட்டுக் கேட்டு மனத்தில் பூவிரிந்து போயிருக்கிறான் சுதன்.

தன் அருகே ஒற்றை ரசிகனாய் அமர்ந்து கொண்டு, ரசித்துக்கொண்டிருக்கும் சுதனுக்காகத் தமிழோடு விளையாடியிருக்கிறான் தயாளன். சில ஞாயிற்றுக் கிழமைகள் இவர்களின் விவாதங்களால் விரிசல் பட்டதுண்டு. ஆனால் விடை பெறும் போது புன்னகை, கைகுலுக்கல், பரஸ்பரம் பரிமாறப்பட்டு விடும்.

தயாளனின் தந்தை வேலை இழந்தபின், தயாளன் குடும்பம் சென்னைக்கு நகர்ந்தது. சென்னை வந்தபின்னும் இருவரது நட்பும் நெருக்கமாகவே இருந்தது.

'சே... எவ்வளவு பொழுதுகள்! தயாளா...! என்னருமை கவிதைக்கிறுக்கா — இதோ தாகத்தோடு வருகிறேன்டா உன் முதல் ரசிகன். உன் கவிதைகளைக்கேளாத என் காதுகளைக் கௌரவப்படுத்து...' நடந்தான் சுதன்.

திருவல்லிக்கேணியில் பொந்து போன்ற ஒரு வீடு. கிரீச்சென வாசலைத்திறந்



தாள் வேணி — தயாளனின் தங்கை. புடைவையைக் கிழித்துத் தாவணியாய்ப் போட்டிருந்தாள்.

''வாங்கண்ணு...! டேய் மாலி! சுதன்ணு வந்திருக்கார்டா.'' உள்ளுக்குள் குரல் கொடுக்க, விசுக்கென்று ஓர் உருவம் எட்டிப் பார்த்தது.

தயாளன் எழுந்து, கண்கசக்கி வந்தான். ''டேய் சுதன் வாடா. வர்றதா ஒரு லெட்டர் போடலே?''விழிகள் விரிய விசாரித்தான்.

''எப்படி இருக்கே தயா'' — சுதன்.

''ஏதோ இருக்கேம்பா.'' என்றான்.

அந்த ஏதோவில் — நிறைய சோகம் இருந்தது. வேலே கிடைக்காத கவலே, அப்பாவின் எரிச்சல், அம்மாவின் அழுகை எல்லாமே இருந்தது....

வீட்டின் முன்னறையில் இருவரும் அமர்ந்து கொண்டனர். சுவரில் மார்க்ஸும் லெனினும் படமாய் இருந்தார்கள்.

''புதுசா எதாவது படிச்சியா தயா? சொல்லு — நல்லது காதுல வாங்கி எவ்வளவு நாளாச்சு...'' — சுதன்.

''ப்ச். இல்லம்மா, ஒண்ணும் படிக்கலே. இ'ம் ஸாரி என்னுல இப்பல்லாம், படிக்கவும் முடியலே எழுதவும் முடியலேடா.'' எங்கோ வெறித்தபடி சொன்னுன். விழி ஓரத்தில் ஈரம் பளபளத்தது.

''தயா! உனக்கு என்னுச்சு? உன்னேட பழைய சிரிப்பு, உன் கவிதை இதெல்லாம் என்னுச்சுப்பா? நீ... நீ ரொம்பவுந்தான் மாறிப்போயிட்ட தயா?''

''மாறலே சுதன். மாற்றப்பட்டுட்டேன். வாழ்க்கை பழைய தகரமா நசுங்குறப்ப கலர் கனவுகள் எப்படிடா வரும் சொல்லு?''

''... ... ...''

''ஏண்டா சுதன் மௌனமாயிட்டே? எழுதறத்துக்கு பேப்பரை எடுத்தா இந்தக் காகிதம் இருந்தா, நாலு இடத்துக்கு அப்ளிகேஷன் போடப்பயன்படுமே என்ற எண்ணந்தான் வருது. அதுதான் நிஜம்!''

''உன்னே மாதிரியே பேனு புடிக்கிறவன், இலக்கியம் பண்றவன் எல்லாரும் நெனச்சா நல்ல இலக்கியம் கெடைக்குமா? நீ ஒரு ஆப்டிமிஸ்ட், நீயா இப்படி மாறிட்டே?''

''நோ.நான்என்னேவச்சுத்தான்பேசறேன் சுதன். நான் எழுதறதை வறுமை மட்டுந்தான் வாசிக்குதுன்னு அந்த எழுத்து தேவையா?''

''அப்படின்னு எழுத்துக்கு முற்றுப் புள்ளியா?''

''ஆமாம்.''

இந்த நெருப்பை உறங்கவிடக்கூடாது! மறுபடியும் கிளறிவிடணும் — மனசுக்குள் உறுதி செய்துகொண்டான் சுதன். மெல்லியதாய்த் தயாளனிடம் சொன்னுன்: ''தயா, அழகான பேனு ஒண்ணு செத்துப்போயிடுச்சேன்னு கவலேயாயிருக்குப்பா.''

''மன்னிக்கணும்சுதன்.என்பேனுசாகலே. அது துப்பாக்கியா மாறிடுச்சு...''

''என்ன சொல்றே தயா?''

''ஆமாம்! இலக்கியம் மூலமா வயிற்றுக்குச் சோறுகேக்கறதுகூட ஒரு வகையில எஸ்கேபிஸம் மாதிரிதான். அதனுல்தான் நேரடியா களத்துல இறங்க ஆரம்பிச்சுட்டேன்'' என்றான் தயாளன்.

சுதனுக்கு எல்லாமே — மெல்ல மெல்லப் புரிந்தது. 'யார் யாரோ இவனேத் தேடிக்கிட்டு வர்றாங்க. என்னன்னமோ ரகசியமாப் பேசிக்கறாங்க. எனக்கு பயமா இருக்குது சுதன்' காலேயில்தயாவின்அம்மாசொன்னது எல்லாவற்றையும் புரியவைத்தது.

மாரு.பாஸ்கரன்

''ஸோ! இலக்கியத்தாலே முடியாது. ஆயுதத்தாலதான் முடியும்னு முடிவு கட்டியாச்சா?'' — சுதன்.

''உண்மையும் அதுதானப்பா, பாரதி கேட்கலையா? பாவேந்தன் பாடலையா? ஏன் இன்னிக்கு உள்ள புதுக்கவிஞர்கள்லாம் பாட்டாலதட்டலையா? என்ன பிரயோஜனம். எவனும் கேக்க மாட்டான். மூடுனகதவைத் திறக்குற ஒரே சாவி, ஆயுதப்பார்வைதான்.

''இம்பாஸிபிள் தயா. அடிப்படையில் மாறுதலைச் சந்திக்காம, பெரிய புரட்சியை நீங்க கனவு காண்றதும், ஓர் அழகான கற்பனைதான்னு நெனச்சுக்கவேண்டியதுதான்.''

''உன்னைமாதிரி, இளைஞர்கள்கூட பொய்ப் பூசி ஆயுதத்தீர்வை மழுப்பி விட்டுடறீங்க சுதன். நீ மட்டுமில்லே இந்தத் தேசத்துல எல்லாருமே இப்படித்தான்.''

''இல்லே தயாளன்! காந்தியம் மாதிரி, ஆயுதப்புரட்சியும் ஒரு கனவா, கற்பனையாத்தான் எனக்குப் படுது...''

''நாங்க நிஜமாக்குவோம்...''

சுதன் திடீரென்று மௌனமானான்.

மெரினா—மக்கள் முதுகைக் காற்றால் தடவிக்கொடுத்தது. சுண்டலும், பேல்பூரியும் காசாகிக் கொண்டிருந்தன.

சுதனும், தயாளனும் மணலில் பதிய, பதிய நடந்தார்கள். என்னென்னமோ பேசிக் கொண்டே நடந்தார்கள். பேச்சின் சின்னச் சிதறல் கூட இலக்கியத்தின் மீது விழவில்லை.

இந்த இலக்கிய மௌனம் — தயாளனின் வைராக்யமாகவே பட்டது சுதனுக்கு!

கட்டுமரங்கள் கால்நீட்டிக்கொண்டிருக்க, அவற்றின் அருகில் பெரிய படகு ஒன்று குந்திக் கிடந்தது. படகில் முதுகு சாய்த்துக் கொண்டு இருவரும் அமர்ந்து கொண்டனர்.

மீண்டும் சுதன்தான் பேசினான். ''தயா! நீதான் ஏதும் படிக்கலேன்னு சொல்லிட்டே, நானாவது படிச்சதைச் சொல்லட்டுமா?'' கெஞ்சலாய்க் கேட்டான் சுதன்.

''சொல்லு'' என்றான்.

''அம்மா! நான் இறந்தபிறகு
அந்த சன்னலைத் திறந்து வை
என் நண்பனைக்...
காணவேண்டும்'' சொல்லிவிட்டு

தயாவைப் பார்த்தான்.

''இது, லோர்க்காவுடையது — ஆனால் எனக்குப் பிடிக்கலே'' என்றான் தயாளன்.

''வயித்துப்பாட்டுக்குவழிசெய்யாதகவிதை வேண்டாம்டா. தனிமனுஷன் தன் சொந்தச் சோகத்தைப் சொறிஞ்சுக்கறதுக்காகக் கவிதையைப் பயன்படுத்தக் கூடாது சுதன்.''

மோவாயைச் சுதன் துடைத்துக்கொண்டு, வினோதமாய், தயாளனைப் பார்த்தான். தயாளனின் மனத்தை மாற்ற, எல்லா வழிகளையும் பயன்படுத்தினான் சுதன்.

''ஒண்ணு தெரியுமா தயா? உங்க துப்பாக்கியோட இலக்கு, மேட்டை நோக்கி இருந்தாலும், சிலசமயம் உங்க குறிதவறி எந்தத் தப்பும் செய்யாதவங்ககூடப் பலியாகிடறாங்க. இதுக்குஎன்னசொல்றீங்க?'' என்றான்.

''இது தவிர்க்கமுடியாது. சில உயரங்களை எட்டிப் பிடிக்கும்போது, சில உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டியதுதான்.''

இந்தவார்த்தைகளைக்கேட்டதும்சுதனுக்கு கோபம் மூண்டது. முகம் சிவந்தது. ''எது தவிர்க்க முடியாதது? உயிர் இழப்புகளையா? உங்க வன்முறையால நீங்க நினைக்கிற உயரத்தைப் புடிச்சாலும், அதை அனுபவிக்க அந்த அப்பாவி மக்கள் இருக்க மாட்டாங்க. அப்படிப்பட்ட உயரம் நமக்குத் தேவையில்லேப்பா'' உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான் சுதன்.

''... ... ...''

''உங்க அதிருப்தியை அரசாங்கத்தை எதிர்க்கறதுல காட்டறீங்க. ஆனா அதுல பலியாறதுயாருதெரியுமா? அப்பாவி மக்கள். சின்னச் சின்ன பிரச்னைகளுக்கு முடிவு காண முடியாதப்ப, பெரிய மாறுதலுக்கு முன்னுரை எழுதறது தப்பு. உங்கள் பார்வையெல்லாமே பலவீனமானது கண்ணா.'' கிண்டலாய்ச் சொன்னான் சுதன்.

சுதனா இப்படிப் பேசுவது? என்று தயாளனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சுதன் தயாளனை விடுகிறமாதிரி இல்லை.

''கடைசியாய் சொல்றேன் தயா. மக்களுக்காகச் சாதிக்க நெனச்சு அரசை எதிர்க்கறீங்க, பொதுச் சொத்துக்களை நாசமாக்கறீங்க. அதனால நீங்க யாருக்கு நல்லது செய்யத் துடிக்கிறீங்களோ, அவங்களே பாதிக்கப்படறாங்க. எவனும் இங்கே நல்லது செய்ய வேண்டாம். கெடுதல் செய்யாம இருந்தால், அதே தேசத்துக்குச் செய்யற பெரிய சேவை தெரியுமா?''

சுதன் இறுதியாய்ச் சொன்னது — தயாளனுக்குள் விழுந்து விட்டது.

இரவு வெகுநேரம்சுதனும், தயாளனும் பேசிக்கொண்டிருந்தனர். சுதன் எப்போது உறங்குவான் என்று தயாளன் பொறுமையாய்ப் படுத்திருந்தான். சுதன் சொன்ன வார்த்தைகள், நரம்புகளுக்குள் நடந்து கொண்டே இருந்தன.

அந்த வார்த்தைகள் இதயத்தை உதைத்து உதைத்து, உசுப்பிவிட்டுக் கொண்டே இருந்தன. 'என்னாலேயும் மக்களுக்கு சேவை செய்ய முடியும். இதைநிரூபிக்கணும்.' தயாளனுக்குச் சுத்தமாய் உறக்கம் கலைந்தது.

சுதனைப் பார்த்தான். அவன் உறங்கி, குறட்டை வாசித்துக்கொண்டிருந்தான். தன் போர்வையை எடுத்து அவனுக்குப் போர்த்தி விட்டு, வீட்டை விட்டு வெளியே வந்தான் தயாளன்.

பனித்தூறல் தலையை நனைத்துக்கொண்டிருந்தது. எதையோ சாதிக்கத் துடிக்கிற அவசரம் அவனுள் பரவியிருந்தது. தயாளன் ஓட ஆரம்பித்தான்.

புறநகர்ப்பகுதியை அடைந்து, படுத்துக் கிடந்த ரயில்வே தண்டவாளத்தில் ஏறி ஓடினான் தயாளன்.

இரண்டு பர்லாங் ஓடியிருப்பான் — செடிகளும், கொடிகளும் அடர்ந்திருந்த அந்தப் பகுதிக்குப் பக்கத்தில் இருந்த அந்தப்பாலம்

இருட்டில் மூழ்கியிருந்தது.

கோடைக்காலமாதலால் பாலத்தடியில் நீரில்லை. கீழிறங்கி, தண்டவாளங்களுக்கும், ஸ்லீப்பர் கட்டைகளுக்கும் இடையே தேடினான்.

ஒரு முழம் நீளத்தில், பெட்டி வடிவத்தில் இருந்த அதை எடுத்துக்கொண்டு மேலே வந்தான்.

திடீரென்று ''யார் அங்கே'' என்று காற்றில் ஒலித்தது.

வந்த குரலை, அடையாளம் தெரிந்துகொண்டான் தயாளன்.

''நான்தான் தயாளன் சிக்ஸ்டி'' என்றான்.

''ஓ... என்ன தயாளா? என்ன இந்த நேரத்துல இங்கே'' என்றான் சந்தன் — அவனது சகாக்களில் மூத்தவன்.

தான் 'அதை' எடுத்துவிட்டதை அவர்கள் பார்த்துவிட்டார்களோ என்ற பயத்தையும் மீறிய ஒரு துணிச்சல் உடலில் பரவியது தயாளனுக்கு.

''ஒண்ணுமில்லே சந்தன். இன்னிக்கு எக்ஸ்பிரஸ்ல இதை வைக்கவேண்டாம்னுட்டாரு தலைவரு. அதான் இதை எடுக்க வந்தேன்'' சமாளித்தான்.

''அப்படியா? எங்கிட்ட சாயந்தரமா சொன்னாரு, காரியம் கச்சிதமா நடக்கணும்னு?''

''என்னன்னு தெரியலே — எனக்கு ஆள் அனுப்பி இன்னிக்கு வேண்டாம்னு சொன்னாரு. அதான் வந்தேன்.'' தயாளன் உரக்கவே சொன்னான்.

தயாளன் பேச்சுக்கு அவர்கள் அடங்கிப் போக, அந்தக் கனமான பெட்டியை எடுத்துக்கொண்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

அவன் கையிலிருந்த — அந்த ஆட்கொல்லி ஆயுதம் அவனுக்குப் பூச்சியாய்த் தெரிந்தது. வரும் வழியில், பாழடைந்த கிணற்றின் உள்ளே அப்பெட்டியை வைத்துவிட்டு, நகருக்குள் நகர்ந்தான்.

மனசெங்கும் மகிழ்ச்சி பூப்பூத்தது. சுதனுக்கு — காற்றின் காதுகளில் நன்றி சொன்னான். 'என்னாலும் இந்தத் தேசத்துக்கு நன்மை செய்யமுடியும்னு நிரூபிச்சுட்டேன் என் நண்பனே...' ஆமாம் எக்ஸ்பிரஸ்ஸில் சாக இருந்த ஐந்நூறு மக்களைக் காப்பாற்றிட்டேன் சுதன்... இது ஒரு மௌனமான சேவைதான்!

மிகப்பெரிய காரியத்தைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சி அவனை இயக்க, கையை ஆட்டி ஆட்டி நடந்தான்.

வீட்டை அடைந்தான். அமைதி வீட்டை அடைகாத்துக்கொண்டிருந்தது.

சுவடுதெரியாமல் — படுக்கையை இழுத்துப் போட்டுப் படுத்த போது — மீண்டும் மணியைப் பார்த்துக் கொண்டான்.

நிம்மதியாய்ப் பெருமூச்சு நீண்டது.

'அப்பாடி இந்நேரம் எக்ஸ்பிரஸ் நல்லபடியாகப் போயிருக்கும்.'

கண்களுக்குள் சொல்லத்தெரியாத சுகம் தெரிந்தது.



வி.ஐ.பி.க்குப் பாடம் புகட்டிய பயணிகள்!

விமான நிலையத்திலிருந்து கல்கத்தா செல்ல வேண்டிய விமானம், புறப்பட வேண்டிய நேரம் கடந்து பல நிமிடங்கள் ஆகியும் புறப்படவில்லை! காரணம், விமானத்திற்கு வரவேண்டிய ஒரு வி.ஐ.பி. வரவில்லை. தாமதத்துக்கான இந்தக் காரணத்தை விமான 'காப்டன்' அறிவித்த போது, விமானத்தில் காத்திருந்த சுமார் ஐம்பது பயணிகள் கொதித்தெழுந்தனர். அதற்குள் அந்த வி.ஐ.பி.யும் வந்துவிட்டார். ஆனால் பயணிகள் தங்களைத் தாமதப் படுத்திய அந்த வி.ஐ.பி.யை ஏற்றக்கூடாது என்று சத்தியாக்கிரகம் செய்தனர். கடைசியில், அவர்கள் கோரியபடியே விமானம், அந்த வி.ஐ.பி.யை விட்டுவிட்டுப் புறப்பட்டது. அந்த வி.ஐ.பி. யார் தெரியுமா? நடிகை மூன் மூன் சென்.

—சம்பத் குமாரி.

ஆதாரம்: ''வீக்லி''

திடீரென்று — மெல்லிய குரலில் யாரோ, வாசலில் அழைக்கும் சத்தம் கேட்டது. எழுந்து சென்று பார்த்தான்.

சந்தனும் — இன்னும் இருவரும் நின்று கொண்டிருக்க — கொஞ்சம் தள்ளி, இவர்களுக்கெல்லாம் தலைவன் நின்றிருந்தான்.

தயாளனின் — அடி வயிற்றில் பயப் பூச்சிகள் படபடத்தன. கவலைப்படாமல் நிமிர்ந்து நின்று ''என்ன'' என்றான்.

வந்தவர்களில் ஒருவன் — ''எங்ககூட கொஞ்சம் வரணும் தயா'' என்றான் கட்டளையாய்.

அவர்கள் அழைப்புக்கு இணங்கி செல்லாவிட்டால் விடமாட்டார்கள், எதுவந்தாலும் எதிர்கொள்ளத்துணிந்து அவர்கள் பின்னால் நடந்தான். 'என்னாலும் சில சாதிக்க முடிந்ததே... அதுபோதும்' நினைவுகள் இனிக்க நடந்தான்...

காலை சூரியன் சோம்பல் இல்லாமல் கண்விழித்தபோது — சென்னை புறநகர்ப் பகுதியின் இறுதியில் இருந்த ரயில்வே பாதை அருகே — ஐந்நூறு மனிதர்களைக் குண்டு வெடிப்பிலிருந்து காப்பாற்றியவன் பிணமாய்க் கிடந்தான் — தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தெரியாமல்!

வழக்கம்போலவே — மக்கள் கூட்டம் கூட்டமாய் வேடிக்கை பார்த்து, 'வேலை கிடைக்காத சோகத்தால் ஒரு வாலிபன் மரணம்' என்று ஏகமனதாய்த் தங்கள் பாஷையில் மொழிபெயர்த்துக்கொண்டனர்.

+கண்டிஷனர்.

அனைத்திலும் சிறந்த ஷாம்ப்பூ+கண்டிஷனர்.

இது, ஏன் ஏனைய ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனரை விட சிறந்தது என்பதற்கு அழகான 4 காரணங்கள்

1 எல்லா வகை கேசத்திற்கும் உகந்தது.

கேசம் 4 வகை. சாதாரண கேசம், உலர்ந்த கேசம், எண்ணெய்ப் பசையுள்ள கேசம், போஷாக்கற்ற கேசம். லக்மே ஷாம்ப்பூ + கண்டிஷனர் மட்டுமே எல்லா வகைக் கேசத்திற்கும் 4 வகைகளிலே கிடைக்கிறது.

மேலும், லக்மே மட்டுமே எக் ஷாம்ப்பூ + கண்டிஷனரை வழங்குகிறது.

2 சரிவிகிதமான கண்டிஷனர்.

அதிக அளவு கண்டிஷனர் இருக்குமானால், பல்முறை பயன்படுத்தியதும், கேசத்திலே கண்டிஷனர் தங்கிவிடுகிறது. இதனால் கேசம் கனமாக, எண்ணெய்ப் பிசுக்குப் படியாமல் போகிறது.

லக்மே ஷாம்ப்பூ மட்டுமே சரிவிகித கண்டிஷனர் கொண்டது. ஷாம்ப்பூ செய்யச் செய்ய, இது உங்கள் கேசத்தை மிருதுவாகவும், பட்டுப்போலவும், படிந்தும் இருக்கச் செய்கிறது.

3 உங்கள் கேசத்திற்கு இதமான ஷாம்ப்பூ.

கடுமையான ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனர், உங்கள் கேசம் மற்றும் மண்டை மேல் தோலிலுள்ள இயற்கையான எண்ணெய்களைக் கழுவிக் களைந்து, கேசத்தை உலரச்செய்து, சொரசொரப்பாகச் செய்கிறது.

லக்மே ஷாம்ப்பூ + கண்டிஷனர் மட்டுமே ஒவ்வொரு வகை கேசத்திற்கும் ஏற்றவாறு, மாறுபட்ட அளவு, இதமாகச் சுத்தமாக்கும் பொருள்களடங்கி வருகிறது. இவை உங்கள் கேசத்தின் இயற்கையான எண்ணெய்களை விடுத்து, அழுக்கையும் பிசுபிசுப்பையும் கழுவிக் களைகின்றன.

4 பணத்திற்கு முழு மதிப்பு.

ஏனைய ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனர்கள், லக்மேயை விட 20% வரை விலை அதிகம்.

லட்சக் கணக்கான மகளிர் கண்டுணர்ந்துள்ளனர் —உண்மையிலேயே லக்மே ஷாம்ப்பூ + கண்டிஷனர் மிகச் சிறந்தது என்று.

நீங்கள்?



லக்மே

இந்தியாவின் நெ.1 ஷாம்ப்பூ+கண்டிஷனர். 7 ஆண்டுகளாக.

Enterprise/LL/145 Tm A

—22

யோசித்துச் செயல்படுகிற போது அடைந்த இலக்கும், அடுத்த இலக்கும் தெளிவாய்த் தெரியும். சிலருக்கு இடைப்பட்ட இடைவெளியும் கடக்கும் கால நேரமும் மனசுக்கு வரும்.

முட்டிக் கொண்டு கதவு விழுந்து கதவு உடைந்த பிறகு முட்டிக் கொண்ட இடத்தில் வலியும், கதவு உடைந்த அதிர்ச்சியும் முதலில் ஆக்கிரமிக்கிறது. எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் போய் விடுகிறது. இனி என்ன என்பது பெரிய கேள்வியாகி விடுகிறது. யுத்தத்தில் சம்பந்தமில்லாதவர்கள்



ஓடிவர வேண்டியிருக்கிறது.

''அரை மணியை அறுத்து வீசினது தப்புத்தான் மாமி, நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்'' என்று சங்கரன் சுத்தமாய் நிலத்தில் விழுந்தார்.

''ஐயோ, என்னது... என்னைவிட வயசுல பெரியவர்...'' என்று அம்மா நடுங்கி எழுந்திருந்தாள்.

''வயசு இங்கே முக்கியமில்லே மாமி. இந்தத் தவறு ரொம்பப் பெரிசு. உங்க வேதனை எனக்குப் புரியறது. உங்க புள்ளையோட வேதனையும் எனக்குத் தெரியறது.''

''நாலு ஊர் பார்த்தவா, நல்லது கெட்டது தெரிஞ்சவா நடுசபைல அப்படிப் பண்ணும்படியா பொண்ணை வளர்க்கலாமா...?'' வேறு யாரோ பேசினார்கள்.

''எம் பொண்ணு துஷ்டையில்லே சார். தன் குழந்தைக்கு ரத்தம் வர்றதேங்கற பதற்றம்! என்னது, யார் போட்டா, எதுவும் தெரியாத பதற்றம். மாமியை அவமானப் படுத்தணும்னு செய்யலே. செய்யத் தெரியாது அவளுக்கு.''

''வந்து மன்னிப்புக் கேட்டிருக்கலாம் அப்பாவை அனுப்பிட்டு...''

''நல்ல ஜுரம் குழந்தைக்கு. கண்பட்டாப்பல ஆயிடுத்து. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகராமல் லலிதா அங்கேயே உட்கார்ந்திருக்கா.''

''சரி ஜுரம் சரியாகட்டும். அப்புறம் உங்க பொண்ணை வரச் சொல்லுங்கோ. மாமிக்கும் ரொம்ப அதிர்ச்சி. கோவில்ல சுருண்டு கிடக்கறதைப் பார்த்து எனக்கு ஒண்ணுமே புரியலே. கைத்தாங்கலா வீட்டுக்குக் கூட்டிண்டு வர்றதுக்குள்ளே என்னென்னவோ பேசறா. அவமானம் தாங்கறது ஒரு வயசு வரைக்கும்தான். அதுக்கு ஒரு சக்தி வேணும்.'' அடுத்த வீட்டுப் பெரியவர் பேசிக் கொண்டு போனார்.

முரளி நாற்காலியே கதி என்று உட்கார்ந்திருந்தான். மூன்று நாட்கள் லீவு போட்டிருந்தான்.

''முரளி, இதுக்காக வேலையை விட்டுடாதே. உன் கோவம் ஆறினதும் வா.

நானும் லலிதாவை வரச் சொல்றேன். அவள் கலங்கிப் போயிருக்கா. அவமானம் தாங்கறதுக்குச் சக்தி வேணும்கறு மாமி. சக்தி மட்டுமில்லே. அனுபவமும் வேணும். என் குழந்தைக்கு அது இல்லே. அவள் அவ்வ மானப்பட்டதில்லே. ரௌத்திரமாயிடுத்து.

''அடிச்சது தப்பு'' அம்மா தீர்மானமாய்ச் சொல்லி விட்டாள். ''பொம்மனாட்டியைக் கைநீட்டி அடிக்கிறது மகாபாவம். எம் புள்ளை அப்படிப் பண்ணினுன்கிறது எனக்கும் அவமானம்.''

முரளி திசை தெரியாது தவித்தான்..

அடித்த வேகத்திற்கு வெட்கப்பட்டான். பதிலுக்கு 'அரிவாள் மனை யோடு நின்ற மலைவியின் தோற்றத்தை யோசித்து வீடு மறக்கும். பெண்கள் மீது கோபம் கொண்டாலோ கோபம் கொண்ட பெண் களைச் சந்திக்க வேண்டியிருந்தாலோ சற்று விலகி நில். தானய்க் காயம் ஆறும். ஒரு சண்டைக்குப் பிறகு வாழ்க்கையில் நிச்சயம் தெளிவு வரும். வர வேண்டும். பெண்கள் மாறி வருகிருர்கள் முரளி. ஆணுக்குச் சவா லாகிருர்கள். சவாலைப் பெரிதாக்கி விடாதே. பாதிக்கப்படப் போவது நீயும் இல்லே. அவளும் இல்லே. குழந்தை. குழந் தைக்காக ஆயிரம் வேதனைகளைச் சகித்துக் கொள்ளலாம். உதாரணம் உன் தாயார். போ. போய் வேலையைக் கவனி.''

நாலு நாட்கள் நேரே தனது வீட்டுக்குப்



ஆத்திரப்பட்டான். அரை மணியை அறுத்து வீசியதும். அம்மா சுருண்டு வசந்த மண்ட பத்தில் கிடந்ததையும் நினைத்து நினைத்துப் பொருமினுன்.

நாலாம் நாள் ஆபீஸ் போனுன்.

உள்ளே நுழைந்ததும் ஜி. எம். கூப்பிட் டார்.

''உட்கார்'' என்று சொன்னுர். விட்டம் நோக்கி உட்கார்ந்தபடி யோசித்தார்.

''ஒரு சின்ன உபதேசம் கேட்பாயா, முரளி.

முரளி தலையசைத்தான்.

''ஆபீஸ் வேலையில் முழு மூச்சாய் ஈடுபடு. போய்க் கொண்டிருந்தவனை ஐந்தாம் நாள் கம்பெனி வாசலில் சங்கரன் மடக்கினுர். காரைக் கொண்டு வந்து கம்பெனி வாச லில் வைத்திருந்தார். காருக்குள் லலிதா இருந்தாள். குழந்தை தூங்கிக் கொண்டிருந் தான். காரில் ஏறும்படி வற்புறுத்தினுர். ஏறினதும் கடற்கரைப் பக்கமாகப் போனுர். இறங்கி அவர்களை மட்டும் விட்டு விட்டு மணலில் இறங்கிக் கடல் பார்க்க நடந்தார்.

''ஐயாம் ஸாரி. முரளி.. எமோஷனலா

பாலகுமாரன்



நான் தபால் அலுவலகத்தில் போஸ்டல் அசிஸ்டெண்டாகப் பணிபுரிகிறேன். கிராமப்புறங்களில் மக்கள், தபால் இலாகா சம்பந்தப்பட்டவைகளைக் கேட்க உபயோகித்த சில வார்த்தைகள்: 'ரௌடிஸ்டாம்ப்' 'கப்ப தவாலு', 'ரெயிலு தபாலு' 'கடிதாக', 'கவுறு' இன்னும் பலப்பல!

சரி! இவை யெல்லாம் என்ன? முறையே, ரெவின்யூ ஸ்டாம்ப், ஏர்மெயில் லெட்டர், இன்லாண்ட் லெட்டர், கார்டு, கவர் — ஆகியவை தாம்!

—வி. எழில்

ஆயிட்டேன். பதிலுக்குப் பதில்னு இறங்கிட்டேன். நான் அம்மா போட்ட அரைமணி. எது அறுக்கரேமேன்னு நினைக்கவேயில்லே. குழந்தைக்கு உறுத்தியதும், ரத்தம் பார்த்ததும் கோபமாயிடுத்து. அம்மாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கலாம்.''

''கேட்டுட்டு...''

''நீங்க சொல்லுங்கோ.''

''அங்கேயே இருக்கணும்.''

''ஆக, நான் அறுத்தது தப்பில்லே. அங்கே இல்லாமல் என் வீட்டில் இருக்கிறது தான் தப்பு.''

''பேச்சு வேண்டாம். என் வீட்டில் குடித்தனம் பண்ணணும்.''

''முரளி!''

''எங்க அம்மாவுக்கு அனுசரணையாக இருக்கணும்.''

''அந்த வீடு வசதியில்லே.''

''அந்த வசதி போறும்.''

''நான் முக்கியமில்லேயா?''

''எனக்கு அம்மா முக்கியம்.''

''அப்ப எதுக்குக் கல்யாணம் செய்துண்டேள்?''

''எங்க அம்மாவுக்கு உதவி செய்ய.''

''வேலைக்காரி வைச்சுக்க வேண்டியது தானே? கல்யாணம் எதுக்கு?''

''லலிதா, என் உலகம், என் சட்டதிட்டம் அப்படி. எனக்குப் பொண்டாட்டி. எங்கம்மாவுக்கு வேலைக்காரி.''

''பொம்மனாட்டி என்ன ஆடா மாடா?''

''ஆடுமில்லே. மாடுமில்லே. அவளுடைய ரோல் இது.''

''இந்தக் குழந்தைக்கு நான் தாயார். உங்களுக்குப் பொண்டாட்டி. வேறே வேஷம் என்னால போட முடியாது.''

''தாங்க்ஸ். உன்கிட்டே காக இருக்கிற கொழுப்பு. ஆடறே?''

''நான் குடிசையிலே இருந்தாலும் இப்படித்தான் இருப்பேன். உங்கம்மா மனசு கஷ்டமாச்சு. மன்னிப்பு கேட்கறேன். அங்கேயே குடித்தனம் பண்ண முடியாது.''

''ஏன்?''

''இன்னும் சண்டையாகும். தினம் சண்டை. தினம் மன்னிப்புக் கேட்கணும். அது நரகம்.''

''அம்மா இல்லாத இடம் எனக்கு நரகம்.''

''சரி. அப்ப நாம் பிரிஞ்சுடலாம். நீங்க உங்க வீட்டுக்குப் போங்கோ. நான் என் வீட்டுக்குப் போறேன்.''

எக்கி கார் ஹாரனை அழுத்தினாள் லலிதா. முரளி காரை விட்டு வெளியேறி மெல்ல நடந்தான். கார் அவனைக் கடந்து போயிற்று.

•

வீட்டு வாசலில் படியேறிய போது கார் அங்கே நின்றிருந்தது.

குழந்தையோடு லலிதா கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். அம்மா குனிந்து குழந்தைக்கு ஸ்பூனால் ஏதோ கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா அவளை வீட்டுக்கு அனுப்பு!''

''எதுக்குடா? அவள் நாலு நாட்கள் இங்கே இருப்பாள். பேசாமல் உள்ளே போ.''

''நாலு நாள் என்ன நாலு நாள்?''

''போறும், போ, உள்ளே.''

''விவரம் புரியாத பேசாதேம்மா.''

''நான் சொல்றதைக் கேள், முரளி! அவள் வீட்டுக்கு நான் வர முடியாது! அவளுக்கு இங்கே புழங்க இடமில்லேங்கிறது வாஸ்தவம். வாரம் ஒருநாள் வந்து போயிண்டிருந்தேன். சரின்னு. அதோட முடிஞ்சது. ஏன் கத்தறே? கைகால் அலம்பிண்டு குழந்தையை வாங்கிக்கோ. அடித்தங்கம், அடிராஜா.'' அம்மா மிகச் சாதாரணமாய் ஒதுக்கி விட்டாள்.

சங்கரன் போய்த் துணிமணிகள் எடுத்து வர லலிதா நான்கு நாட்கள் அங்கு தங்கினாள். நைட்டியோடு வீட்டுக்குள் வலம் வந்தாள். எழு மணிக்கு எழுந்திருந்தாள். இரவு வெகு நேரம் படித்தாள். குழந்தை நாலா பக்கமும் ஓடினான். அவனைத் தூக்கி அவளும் ஓடினாள்.

''என்டா வாசல்லியே படுத்துக்கறே. தப்பு அது. போ. உள்ளே போ.'' அம்மா அவனை நாலாம் நாள் அறைக்குள் தள்ளி விட்டாள்.

அறை புழுங்கிற்று. மின் விசிறி கூட

வெப்பம்கொண்டு கொப்புளித்தது-குழந்தை தூக்கமின்றிப் புரண்டான். உள்ளே போன அரைமணி நேரத்தில் வெளியே கொண்டு வந்து காற்றுடப் போட அயர்ந்து தூங்கினான்.

''லலிதா, நீ போ. நான் குழந்தையைப் பார்த்துக்கறேன்.'' அம்மா ஹாலில் குழந்தையைத் தன்னருகே போட்டுக் கொண்டு படுக்க,

லலிதா அறைக்குள் வந்தாள்.

''இதுக்கப்புறமும் நான் என்ன செய்யணும்?''

''உங்க வேதனையைப் புரிஞ்சுண்டு நான் வளைஞ்சு கொடுத்திருக்கேன். நீங்க வளையப் படாதா?''

''என்ன வளையணும்?''

''நீங்க ஸாரி லலிதான்னு சொல்லக் கூடாதா? அது கௌரவக் குறைச்சலா?''

முரளி பேசாதிருந்தான்.

''நாலு பேருக்கு முன்னாடி மனைவியை அடிச்சுக் கீழே தள்ளினது சரின்னு படறதா? எங்கேயாவது ஒரு இன்ஸின்ஸியரிடி எங்கிட்ட பார்த்தேளா? ஒரு இடத்துலயாவது நான் பணக்காரி, உங்கிட்டப் பணம் இல்லேன்னு நான் பேசியிருக்கேனா? வீடு வசதின்னு அங்கே இருக்கிறது குத்தமா? ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மீ. இந்த ரூம் இட்லி பானையா வேகறது. நம்ம ரூம் அப்படியிருக்குமா?''

''அரிவாள் மனையை எடுத்துண்டு வந்தியே?''

''அதுக்கு மன்னிப்புக் கேட்க மாட்டேன், முரளி. தட்ஸ் மை ரியாக்ஷன். வன்முறைக்குப் பதில் வன்முறைதான். புருஷன் அடிச்சா வாங்கிண்டு போக என்னால் முடியாது. போறவ மேல் மதிப்பும் கிடையாது.''

''சரி, நாளைக்கு நீ உன் வீட்டுக்குப் போகலாம்.''


''ஓ. எஸ். நான் ரெடி.''

லலிதா கதவைத் திறந்தாள். தலையணையை எடுத்துக் கொண்டு போய் மாமியாருக்கு அருகில் போட்டுக் கொண்டாள். படுத்தாள். அழுதாள்.

முரளியின் அம்மா மெல்ல எழுந்து திறந்த கதவுகளை வெறித்துவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள். எழுந்து விட்டாள்.

''அம்மாடி, லலிதா அழாதே... நான் சரி பண்றேன். அழாதே.'' குலுங்கும் லலிதாவின் முதுகைக் கிழவி தடவிக் கொடுத்தாள். பெண்ணுக்குப் பெண் இரங்கிச் கலபமாய்க் கட்சி மாறினாள். ஆண் அசடானான்.

(தொடரும்)





ரேப் ரேப் நம்பாதீர்கள்;

● ரோம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த போது அரசன் நீரோ வயலின் வாசித்துக் கொண்டிருந்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்லக் கேட்டு, அச்செயல் அகம்பாவத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் ஓர் உவமானமாகவே இன்று ஆகிவிட்டது. ஆனால் பாவம் நீரோ! அவன் தன் மனைவியையும் தாயையும் கொன்றானே தவிர, ரோம் பற்றி எரிந்த போது வயலின் வாசிக்கும் படுபாதகச் செயலை அவன் செய்திருக்கவே முடியாது. ஏனென்றால், அவன் இறந்து கிட்டத்தட்டப் பதினைந்து நூற்றாண்டுகள் ஆன பிறகுதான் இத்தாலியில் வயலின் என்ற இசைக் கருவியே உருவாக்கப்பட்டது!

● 'ரொட்டி இல்லாவிட்டால் அவர்களைக் கேக் சாப்பிடச் சொல்லுங்கள்' என்று திமிருடன் பேசிய ஃப்ரெஞ்சு அரசி மேரி அன்டோய்னட் ஃப்ரெஞ்சுப் புரட்சியின் போது நன்றாகப் பழி வாங்கப்பட்டார் என்பதும் சரித்திரப் பாடத்தில் கற்பிக்கப்பட்டு வரும் விஷயம். ஆனால் அவர் அவ்வாறு கூறியதற்கான சான்று ஏதும் கிடையாது. ரூஸோ தமது 'Confession' என்ற நூலில் 'ஓர் இளவரசி' அவ்வாறு கூறியதாகக் குறிப்பிட்டுள்ளாரேயொழிய அந்த இளவரசியின் பெயரைக் குறிப்பிடவில்லை. ரூஸோவின் நூல் எழுதப்பட்டது 1766 இல் — சம்பவம் நடந்தது 1740 இல் — மாரி அன்டோய்னட் பிறந்தது 1755 இல்!

● சிவப்பு — ரத்தத்தின் நிறம் — அதனால் புரட்சியின் நிறம் ஆயிற்று என்கிறார்கள். ஆனால், உண்மையில், இதயத்தால் வெளியேற்றப்பட்டு, நுரையீரலில் சுத்திகரிக்கப்பட்டுப் பிராணவாயுவைத் தாங்கி வரும் ரத்தம்தான் சிவப்பு. உடலின் இதர பகுதிகளிலிருந்து இதயத்தை நோக்கிச் செல்லும் ரத்தம், சுத்திகரிக்கப்படாத நிலையில், அடர்ந்த ஊதா அல்லது நீல நிறமாகக் கூட இருக்கும். அப்போது ஏன் உடலிலிருந்து வெளிவரும் ரத்தம் நீல நிறமாக இல்லை என்கிறீர்களா? காற்று மண்டலத்தில் உள்ள பிராண வாயு உடனுக்குடன் அந்த ரத்தத்தில் கலந்து விடுவதால் கெட்ட ரத்தம் கூடச் சிவப்பாக மாறிவிடுகிறது.

● ஒரு கண்ணாடி தம்ளரைத் தூள் தூளாகப் பொடி செய்து சாப்பிட்டால் என்ன ஆகும்? ஒன்றும் ஆகிவிடாது! ஆமாம். பதினேழாம் நூற்றாண்டிலேயே சர் தாமஸ் பிரவுன் என்பவர் ஒரு நாய்க்குக் 'கண்ணாடித் தூள்' அளித்து இதை நிரூபித்துள்ளார். கண்ணாடித் தயாரிப்பில் முக்கிய கச்சாப் பொருளாக உபயோகிக்கப்படுவது 'சிலிகா' என்று அழைக்கப்படும் மணல்தான் என்பதை அறிந்தவர்களுக்கு இந்த விஷயம் ஆச்சரியத்தைத் தராமல் போகலாம். சின்ன வயதில் மகிழ்ச்சியுடன் மணலைத் தின்று களிக்காத வாண்டுகளும் உண்டோ! அதற்காகக் கண்ணாடியை அரைத்துச் சாப்பிட்டுப் பார்க்கலாம் என்று நினைத்து விடாதீர்கள். ஒரு சிறு துணுக்கு, சரியாக அரைபடாமல் போனால் கூடக் குடல் பீஸ் பீஸாகிவிடும்!

● 'தும்மும்போது கைக்குட்டையால் வாயை மூடிக் கொண்டு தும்மணும்' — கான்வெண்ட் பள்ளியில் கற்கும் பால பாடம். நமது பல்லழகை உலகம் பார்த்துச் சிரிக்க வேண்டாம் என்பதைத் தவிர விஞ்ஞான பூர்வமான சுகாதார காரணம் ஏதும் இதற்குக் கிடையாது. ஜலதோஷ வைரஸ் கிருமிகள் காற்று மூலம் பரவுவது மிக மிக அரிது. அவை உடல் தொடர்பு மூலமாகத்தான் நிச்சயமாகவும், வேகமாகவும் பரவுகின்றன. மூக்கைக் கைக்குட்டையில் சிந்திய கையோடு நண்பரிடம் கைகுலுக்கினால் நட்புறவோடு நீங்கள் நிச்சயம் ஜலதோஷத்தையும் பரிமாறிக் கொள்வீர்கள்!

● 'துருப்பிடித்த பிளேடால் கையை வெட்டிக் கொண்டால் நிச்சயம் டெடனஸ் வர

வாய்ப்பு உண்டு. உடனே டாக்டரிடம் போய் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்' என்று பையன்களை எச்சரித்து வைக்கிறோம். உண்மையில் துருவுக்கும் டெடனஸுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. **Clostridium Tetani** என்ற கிருமியே டெடனஸ் வியாதியை உண்டாக்குகிறது. நாம் உபயோகிக்கும் பிளேடு துருப் பிடிக்காமல் பளபளவென்று இருந்தால்கூட, இந்தக் கிருமி அதன் மீது படிந்திருக்குமெனில், அதன் காரணமாக டெடனஸ் வரக் கூடும்.

- மதுவருந்துவதால் அதிகம் பாதிக்கப்படும் உடல் உறுப்பு கல்லீரல் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இதோ ஓர் அதிர்ச்சி தரும் மறுப்பு — மது தாக்குதலால் அதிவேகமாகப் பாதிக்கப்படுவது மனிதனின் மூளைதான்! மதுவுக்கு அடிமையானோருள் 19 சதவிகிதத்தினர் கல்லீரல் வியாதியால் தவித்தால் 59 சதவிகிதத்தினர் மூளை பாதிக்கப்பட்டுப் பரிதாபமாய்க் காட்சியளிக்கின்றனர். எனவே மதுவை நெருங்குவோர் யோசிக்கட்டும். கல்லீரல் பாதிக்கப்பட பல ஆண்டுகள் ஆகும். ஆனால் மூளை பத்தே வருடங்களில் பயனற்றுப் போக வாய்ப்பு இருக்கிறது!

- கறுப்பையும் சிவப்பையும் கண்டால் காளை மிரண்டு முட்ட வரும் என்று பாட்டிகள் சொன்னதை உங்கள் 'அனுபவத்தில்' கூட உணர்ந்து அறிந்திருப்பீர்கள். ஆனால் காளை மாட்டுக்கு நிறங்களை வேறுபடுத்திப் பார்க்கும் சக்தி கிடையாது. எல்லா நிறமும் சம நிறம்தான். மிரட்சிக்குக் காரணம் உங்கள் தோற்றமாகக் கூட இருக்கலாம்!

- மகுடிக்குக் கட்டுண்ட பாம்பு எப்படியெல்லாம் ஆடுகிறது! ஆட்டத்துக்குக் காரணம் பாம்பாட்டியின் அபார இசைத் திறமையில்லை. மகுடியை அசைத்துச் சுழற்றி அவர் அசைக்கும் லாகவம்தான். அந்த அசைவுதான் பாம்பைக் கட்டிப் போடுகிறதேயொழிய இசையில்லை. ஏனென்றால் பாம்புக்கு மனிதர்களைப் போல் பலவித ஓசை ஒலிகளை வித்தியாசப்படுத்திக் கேட்கும் சக்தியே கிடையாது. அதற்கு மகுடியும் ஒன்றுதான், லைட் மியூசிக்கும் ஒன்றுதான், பாப் மியூசிக்கும் ஒன்றுதான்!

- பாம்பும் கீரியும் போல் பரம வைரிகள் என்று அந்த வாயில்லா ஜீவன்களை மனிதர்களின் வன்மத்துக்கு உதாரணம் காட்டுவது இன்னோர் அநியாயம். பாம்பும் சரி, கீரியும் சரி ஒன்றையொன்று தேடிப் போய் அடித்துக் கொள்வதே கிடையாது. கீரிப்பிள்ளை பூச்சி, பொட்டுகளைத் தின்று காலட்சேபம் செய்யும். பாம்பைக் கண்டால் பதுங்கி விலகுமேயொழிய நாம் நினைப்பது போல் பல்லைக் கடித்துக் கொண்டு, மல்லுக்கு நிற்காது. தீராமல் கைகலப்பு ஏற்பட்டு விட்டால் நல்ல பாம்பைக் கீரியால் ஜெயிக்க முடியும். — பாவம் நல்ல பாம்பு கொஞ்சம் ஸ்லோ! ஆனால் பிற ஜாதிப் பாம்புகளிடம் கீரி மரண அடி வாங்கிவிடும்.


- 'வானம்பாடிகள் போலே — இன்ப
  கானம்பாடி மகிழ்வோம்...'

என்று பறவைகளைப் பார்த்துக் குதூகலிக்கும் காதலர்களுக்கு — பறவைகள் மகிழ்ச்சி காரணமாகப் பாடுவதில்லை! இல்லை! இல்லை! பாட்டு பிறக்கக் காரணம்: 1) கவலை, 2) தற்காப்பு உணர்வு 3) அறிவிக்கும் அல்லது விளம்பரப்படுத்தும் நோக்கம். 'இது என் பிரதேசம்; இதை நெருங்காதே என்று உணர்த்தவோ; நான் ஒரு கூடு கட்டியிருக்கிறேன், குடித்தனம் பண்ண யார் தயார் என்று விசாரிக்கவோ; எதிரி இருக்கிறான் இந்தப் பிரதேசத்தில் என்று எச்சரிக்கவோ; இங்கே உணவு இருக்கிறது என்று அறிவிக்கவோதான் பறவைகள் பாடுகின்றன. மெய்மறந்து, உலகை மறந்து ஆனந்தமாகப் பாடுவது மனிதர்கள்தான் — சினிமாத் திரையிலும் பாத்ரூமிலும்!

ஆதாரம்: **'ஃபாபுலஸ் ஃபாலசீஸ்'**








...உண்மை வேறு உணருங்கள்!



ஒரு கைக்குட்டை மீது மெல்லிசாகப் புகை ஊதிப் பாருங்கள்...



பிசுக்கென்று அதன் மீது படிந்துவிடும் கக்கல்-கரிசல்கள் உங்களை அசந்துபோக வைக்கும். அவை எல்லாம் என்ன ! மாணுபத்தான விஷங்கள் : தார், கரி, நிகோட்டின், கார்பன் மானுக்ஸைடு, ஹைட்ரோஜன் ஸயனைடு, அமோனியா போன்ற பலப் பல இரசாயனப் பொருள் களின் கலவை.

கற்பனை செய்து பாருங்கள், புகை ஊதும் ஒவ்வொரு தடவையும் உங்கள் நுரையீரலில் (மூச்சுப்பையில்) இவ்வளவு கசடு வண்டல் படியுமானால்... சிகரெட் மேல் சிகரெட்டாக... நாளுக்கு நாள்... ஆண்டுக் கணக்கில் புகை இழுத்தால் உங்கள் சுவாசப் பைகளின் பொந்தகை என்ன ஆகும் ?

இவ்விதக் கொடு நஞ்சுப் பொருள்கள் உள்ளே குவிந்து போவது நோய்களுக்கு தூபம் போடும் : நுரையீரலில் நெரிசல், தீவிர ரத்தக் கொதிப்பழுத்தம், மாரடைப்பு, பக்க வாதம்—ஏன், கான்ஸர் (புற்றுநோய்) கூட. உஷார், அறிகுறிகள் இவைதான் : மார்பு வலி, விடாத இருமல், கோழையில்-ரத்தத் துளிகள்.

எனினும் இதோ ஒரு நற்செய்தி. முளையிலேயே நோயறிந்து விட்டால் முன்னதாகவே புற்றுநோயைக் குணப் படுத்த முடியும். ஆகவே, தப்பாமல் இந்தியன் கான்ஸர் ஸொஸைட்டி நோயறி நிலையத்திற்குச் செல்லுங்கள், அல்லது, மாதம் ஒரு முறையாவது உங்கள் டாக்டரைப் பார்த்து வாருங்கள்.

முக்கியமாக, புகைகுடிப்பதை நிறுத்துங்கள், அல்லது குறைத்திடுங்கள். சின்னஞ்சிறு வீக்கம் பெரும் தொல்லையாக மாறுமுன்பே செயல்படுவீர்.

இதோ, கான்ஸர் இன்ஷ்யூரன்ஸ்!

இந்தியன் கான்ஸர் ஸொஸைட்டி வழங்குகிறது. புற்றுநோயை முன்னறிந்து, குணப்படுத்துவதற்கான எல்லாச் செலவுகளுக்கும் ஈடுதரும் இன்ஷ்யூரன்ஸ்— இந்தியாவிலேயே இது ஒன்றுதான் சிறியதொரு தொகை கட்டி ரூ. 40,000 வரை காப்புறுதி பெறலாம் உங்கள் துணைவியாரும் நீங்களும். மேலும் விவரமறிய, போன் மூலமோ, எழுதியோ கேளுங்கள் எங்களை.

ஆலோசனைக்கு அணுகவேண்டிய இதர நிலையங்கள் :

- பாலிகா மெடிகல் ஸெண்டடர், 48, பாபர் ரோடு, பெங்காலி மார்க்கெட், நியூ டெல்லி 1100 01. போன் : 389363
- 15/A, சரத் போஸ் ரோடு, கல்கத்தா 700 020. போன் : 433812
- 127, அங்கப்ப தெரு, சென்னை 600 001. போன் : 39444

இந்தியன் கான்ஸர் ஸொஸைட்டி

தேசியத் தலைமையகம் : லேடி ரத்தன் டாட்டா மெடிகல் & ரிசர்ச் ஸெண்டர், எம். கார்வே ரோடு, கூப்பரேஜ், பம்பாய் 400 021. போன் : 2021417

முன்னமே நோயறிவீர்
முன்னமே குணம்பெறுவீர்.

daCunha/ICS/19/87/TM



* கல்யாணமாக வரதராஜன்

ட. வி. நியூஸ் வாசிக்கும் வரதராஜனை உங்களுக்குத் தெரியும். "கல்யாணத்துக்குக் கல்யாணம்" தொடர் நாடகத்தில் அவர் நடிப்பதும் தெரியும்.

ஆனால் இரண்டாவது வாரம் கல்யாணக் காட்சி வந்ததே. அதில் ஒரு ரகசியம் இருக்கிறது. தெரியுமோ?

வரதராஜன் பாங்க் ஆஃப் இந்தியாவில் வேலை பார்க்கிறார். அதே வங்கியில் வேலை செய்யும் வைஜயந்தியின் சகோதரருக்குக் கல்யாணம். அந்தக் கல்யாணத்தை விடியோ படமெடுத்து அதைத் தொடர் நாடகத்தில் சேர்த்து விட்டார்கள். இது கல்யாணத்துக்கு வந்திருந்த யாருக்குமே கூறப்படவில்லை. ட. வி. நாடகக் காட்சியில் தாங்களும் தங்களை அறியாமலே நடித்திருப்பது கண்டு பலருக்கு இனிய ஆச்சரியம்!

— ஜூலி.

ஸிடி ரவுண்ட் அப்

இந்தக் கல்யாணத்தில் ஒரு ரகசியம்!

சீறிப் பாயும் ஃப்பியூரி

என்ஃபீல்ட் நிறுவனம் அண்மையில் ஒரு புதிய மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது. பெயர் (FURY) ஃப்பியூரி. அதென்ன? 'ஆத்திரம்' என்று ஒரு மோட்டார் சைக்கிளுக்குப் பெயரா? ஃப்பியூரி என்ற பெயரைத் தேர்ந்தெடுக்கும் முன் பல நூறு பெயர்களை அலசினார்களாம். லோட்டஸ், ரோஸ் என்று பூக்களின் பெயர்கள்; புலி, சிங்கம், சிறுத்தை என்று ஆக்ரோஷமான மிருகங்களின் பெயர்கள்; சாலஞ்சர், வாயேஜர், ஈகிள் ரீதியில் சில பெயர்கள்; மெர்க்குரி, சாட்டர்ன் என்று கிரகங்களின் பெயர்கள். கடைசியில் ஆக்ரோஷம் என்று அர்த்தம் கொண்ட ஃப்பியூரி என்கிற பெயரையே சூட்டி விட்டனர்! இந்த 175 சிசி மோட்டார் சைக்கிள் எப்படி சீறிக் கொண்டு புறப்படும் என்பதை இந்தப் பெயர்தான் சீரிய முறையில் உணர்த்துகிறது என்பதால்!

— எஸ். சந்திரமௌலி



ஃப்பியூரி

திகைப்பு நீங்கும்முன் திகைப்பு!

ஜி. என். பி.யின் சிஷ்யர் திருச்சூர் ராமச்சந்திரன். ஜி. என். பி. யின் சிஷ்யையான எம். எல். வி. யிடம் பயின்றவர் சாருமதி. சாருமதியும் ராமச்சந்திரனும் திருமணம் செய்து கொண்ட பிறகு, பல ரசிகர்கள், ஜி. என். பி. வழியில் வந்த இருவரும் சேர்ந்து கச்சேரி செய்வார்கள் என்று எதிர்பார்த்ததுடன் அவர்களிடம் இதுபற்றிக் கூறியும் இருக்கிறார்கள். ஆனால் ஏனோ அதை விரும்பாத கணவனும் மனைவியும், ரசிகர்களின் ஆசையை ஓரளவேனும் திருப்திப்படுத்த இருவருமாகச் சேர்ந்து பாடிய ஒரு காஸெட்டை வெளியிடத் தீர்மானித்தனர். "கிருஷ்ணாம்ருத தரங்கிணி" என்ற பெயர் கொண்ட இந்த காஸெட்டை ஸங்கீதா நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. கிருஷ்ணலீலா தரங்கிணி, கிருஷ்ண கர்ணாமிர்தம் பாடல்கள் கர்ணாமிர்தமாக ஒலிக்கும் இந்தக் காஸெட்டின் வெளியீட்டு விழாவில் பேசிய பாலமுரளி கிருஷ்ணா, ஓர் ஆச்சரியமான தகவலை வெளியிட்டார். அதாவது, காஸெட் டேப்களை ஒலிபரப்புவதற்கான சாதனங்கள் அகில இந்திய ரேடியோவில் கிடையாது! எல். பி. ரிகார்டுகளை மட்டுமே அவர்களால் ஒலிபரப்ப முடிகிறது! இதனால் ரசிகர்களின் இழப்பு மிகுதியாகிறது என்பதுதான் அந்தத் திடுக்கிட வைத்த செய்தி! 'இந்த நவீன யுகத்தில் இப்படிக் கூட வானொலி நிலையங்களா?' என்று நாம் திகைப்பிலிருந்து மீள்வதற்குள் ஒரு வித்வான் மீண்டும் நம்மைத் திகைப்பில் ஆழ்த்தும் விதமாக ரகசியமாகச் சொன்னார்: "காஸெட் ஒலிபரப்பு வசதி இல்லாததே நல்லது! அதுவும் இருந்து விட்டால், கர்நாடக இசைக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் ஒரு பகுதியை அது விழுங்கிவிடும்! அதில் பாடகருக்குச் சன்மானமும் கிடைக்காது! நேரடியாகப் பாடகர்கள் ரேடியோ கச்சேரி செய்கிற வாய்ப்பும் குறைந்து போகும்!" என்றார்.

—நிருபர்



* செவிக்கு இசை: இதயத்துக்கு பக்தி

மேற்கு பார்த்த ஜன்னல்

நாலைந்து இளைஞர்கள் வருவார்கள் — இருபதைக் கடக்காதவர்கள். நாராயண் தான் நிலைத்தான். மற்றவர்களுக்கு ரிடையர்ட் மேஜர் சிவராமையாவிடம் பிரியமில்லை என்று சொல்ல முடியாது. எனினும் வேலை, படிப்புக்காக ஊர் மாற்றம், இப்படி ஒவ்வொருகாரணம்.ஒவ்வொருவராகநின்றுவிட நாராயண் மட்டும் நிலையாக அவரைப் பார்க்க வந்து கொண்டிருந்தான்—ஐந்தாறு மாதங்களாய். காலை மாலை. சில சமயம் நாளின் பெரும் பகுதி. இப்போது நாலைந்து நாட்களாய் அவன் வருவதில்லை.

அவனுக்காகவே மாடியறையில் ஒரு டேபிள் டென்னிஸ் மேஜை வாங்கிப் போட்டிருந்தார். அறை விசாலமானது. மேற்கு பார்த்த மாதிரி இரண்டு பெரிய ஜன்னல்கள். நடுவில் டென்னிஸ் டேபிள். அதற்கு நாலாபுறமும் சுவர் ஓரமாக இரண்டிரண்டு பிரம்பு நாற்காலிகள்.

எந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்தாலும் மேற்குப் பார்த்த ஜன்னல்கள் வழியே மேலே வானமும், கீழே அடுத்த வீட்டுத் தோட்டமும், கிணறும் துணி துவைக்கும் கல்லும் தெரியும்.

ஆரம்பத்தில் மேஜர், நாராயணனுடன் செஸ்தான் விளையாடிக் கொண்டிருந்தார். ஆனால் துறுதுறுவென்று தோளும் புஜமும் விம்மிக் கொண்டு, பத்தொன்பது வயசு அரும்பு மீசையும் இளமைப் பொலிவுமாக வியர்வை வழிய ஓடியாடும் கிளர்ச்சியுள்ளவனுக்கு இப்படி மேஜை எதிரில் உட்கார்ந்து முகவாயைப் பிடித்துக் கொண்டு செஸ் போர்டில் தலைகவிழ உட்கார்வது தண்டனை என்று மேஜருக்குப் புரிந்து விட்டது.

அதிலும் நாராயண் செஸ்ஸில் அவரிடம் தோற்றுக் கொண்டே இருந்தான். அவன் ஜெயிப்பதற்கான வாய்ப்பை மேஜரே ஏற்படுத்திக் கொடுத்தாலும் தோற்றான்.

சிநேகம் அவருக்கு மிக முக்கியம். நாலைந்து பேராக வந்து கடைசியில் ஒருவனாக மிஞ்சிய நாராயண் முக்கியம்.

"உனக்கு டேபிள் டென்னிஸ் பிடிக்குமா?" என்று ஒரு நாள் கேட்டார் மேஜர்.

"ஷ்யூர்!" என்றான்.

"ஏன்னு சொல்ல முடியுமா?"

"ஓ! சுறுசுறுப்பான ஆட்டம். இளமையின் துள்ளலுக்கு ஏற்ற ஆட்டம் அதான்..."

அவன் சொன்ன கடைசி விஷயம் அவர் மனத்தில் குறி பார்த்துப் பாய்ந்தது. அது இளமை நிறைந்தது. இளைஞர்கள் நேசிப்பது.

மறுநாள் காலை நாராயண் படிக்கட்டு ஏறி வரும் ஓசை கேட்ட போதே அறையில் இருந்த பிரம்பு நாற்காலிகளைச் சுவருக்குச் சுவர் ஜோடி ஜோடியாக நகர்த்திப் போட்டு வைத்திருந்து, அவற்றுள் ஒன்றில் அமர்ந்திருந்த மேஜர் கண்ணை மூடிக் கொண்டார்.

கதவருகில் அவன் பிரமித்து நிற்பதை மனசுக்குள் ரசித்துவிட்டு, "ஒண்டர்ஃபுல் சார்!" என்று அவன் கூவிய பிறகு கண் திறந்தார்:

நாராயண் பிரமாதமாக டேபிள் டென்னிஸ் ஆடினான். பெரும்பாலான முறை அவன்தான் ஜெயிப்பான். ஆனால் கொஞ்சம் முரட்டு அடி. ஒன்றில் இரண்டில் பந்து மேற்குப் பார்த்த ஜன்னல் வழியாக அடுத்த வீட்டுத் தோட்டத்துக்குப் பாய்ந்து விடும்.

அவருக்குச் சிரமம் தராமல் அவனே போய் அடுத்த வீட்டுத் தோட்டத்திலிருந்து பந்தை எடுத்து வருவான். சில சமயம் ஐந்து பத்து நிமிஷங்கள் தாமதமாகிவிடும்.

அங்கே ப்ளஸ் டூ முடித்துவிட்டு, கல்லூரி அட்மிஷன் கிடைக்காத இளம் பெண் ஒருத்தி உண்டு. வனிதாவோ சவிதாவோ.

"ஸாரி சார்! பந்து எங்கேயோ மூலையிலே ஒளிஞ்சுண்டுடுத்து" என்று அவன் திரும்பி வரும்போது மேஜர் நமுட்டுச் சிரிப்பு சிரிப்பார். அவர் பார்க்காததா?

அவர் குடியிருந்தவற்றில் எத்தனை அடுத்த வீடுகளில் அழகான இளம் பெண்கள் இல்லை?


எவ்வளவு விஷயங்கள் பேசினாலும் இப்படித் தன் அனுபவங்களைத் தமுக்கடிக்கிற விவகாரத்தை அவர் எச்சரிக்கையாகத் தவிர்த்தார்.

இன்றைய இளைஞர்கள் பகிரங்கமாகக் கொட்டாவி விடுகிறார்கள். கொட்டாவி உடனிருப்பில் ஒரு சுமையை உணர்த்தும் அபாய விரிசல்.

மேற்குப் பார்த்த ஜன்னல்களைத் திறந்து கொக்கிகளை மாட்டிக் கொண்டிருக்கும்போது, "ஐயா, நான் மார்க்கெட்டுக்குப் போயிட்டு வர்றேன்" என்று குரல் கேட்டது.

திரும்பி தலைசாய்த்து நின்ற சமையற்காரி காமாட்சியைப் பார்த்து, "என்ன வாங்கணும்?" என்று கேட்டார்.

"இன்னிக்கு மீன் வாங்கியாறேன்! நேத்து அந்தத் தம்பி வரும்னு வாங்கிவச்ச ப்ரெட் அப்படியே காஞ்சுப் போச்சு! புதுசா ப்ரெட் வாங்கணும். கொஞ்சம் காய்



கறி.''

மேஜர் ஹால் மாதிரியிருந்த அறையை ஒட்டி, உள்ளேயிருந்த அறைக்குள் போய் பீரோவைத் திறந்து பர்ஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

ஓர் இருபது ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினார்.

''போதும்லே?''

''போதும். இன்னிக்குப் பத்தாம் தேதியாச்சே. அம்மாவுக்கு மணியார்டர் பண்ணிடலாங்களா?''

தன்னுடைய தாயாருக்குப் பத்து தேதியானால் மணியார்டர் அனுப்புவதில் அவளுக்கு இருக்கிற அக்கறை மார்க்கெட்டுக்குப் பக்கத்திலுள்ள போஸ்டாபீஸுக்கு இன்னொரு முறை நினைத்துக் கொண்டு அவளைத் துரத்தக் கூடாது என்ற உபத்திரவம் சார்ந்தது என்று புரிந்தது.

''எழுதி வச்சுட்டேன். கொஞ்சம் இரு''

என்று மேஜர் பீரோவின் எதிரிலிருந்த மேஜை மீது 'வெய்ட்'டின் கீழே இருந்து பூர்த்தி செய்திருந்த மணியார்டர் பாரத்தை இழுத்து எடுத்து வந்து ஒரு நூறு ரூபாய் நோட்டையும் அதையும் சேர்த்து அவளிடம் நீட்டினார்.

அவள் கீழிறங்கிப்போனதும் சமையலறை ஒலிகள் கூட அடங்கிய நிசப்தம் அங்கே நிலவியது.

மேற்குப் பார்த்த ஜன்னலில் காற்று சுழன்று கொக்கிகள் சப்தித்தன.

அது ஒரு வேதனையூட்டும் நிசப்தம்தான். நாலைந்து நாட்களாக நாராயண் ஏன் வரவில்லை என்று நினைக்க வைக்கும் நிசப்தம்.

எங்கேயாவது வெளியூர் போயிருப்பான் என்று மனசை அலைபாயவிடாது இழுத்துக் கடிவாளம் மாட்டினார்.

தனிமையும் நிசப்தமும் இணைந்து ஒரு மரத்தின் மீது கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கும்தேவாங்கின் கண்கள் மாதிரி

அவரை உற்று நோக்குவதாக மேஜர் கற்பனை செய்து கொண்டார்.

அவ்வப்போது இல்லாவிட்டாலும் எப்போதாவது இப்படி நேரும். அதற்கு மேஜர் ஒரு மாற்று மருந்து வைத்திருந்தார். ஏதாவது வேலையில் மூழ்கி விடுவது.

என்ன செய்யலாம்?

டேபிள் டென்னிஸ் மேஜைக்குப் பவுடர் போடலாம். நாலு நாட்களாகிவிட்டன— அதில் பவுடர் விழுந்து. அறை ஓரமாக ஒரு டிரஸ்ஸிங் டேபிள் அருகே டிராயரில் பவுடர் இருந்தது.

எழுந்து போய்த்திறந்தார்.

டிரஸ்ஸிங் டேபிளோடு இணைந்திருந்த நிலைக்கண்ணாடியில் முகம் தெரிந்தது. ஐம்பதை எப்போதோ கடந்து எக்ஸ்பிரஸ் வேகத்தில் அறுபதை நெருங்கும் முகம். நெற்றிக்கு மேலே முன்னந்தலையில் புதிதாக வளர்ந்த முடி சாயத்தைப் பின்னே தள்ளி நரைத்திருந்தது. டை அடித்திருப்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்தது. வெள்ளி நாற்று விட்டமாதிரி தாடி.

"யூ ஓல்ட்மேன்!" என்று கண்ணாடிப் பிம்பம் அவரைப் பார்த்துக் கேலி செய்தது.

ட்ராயரை இழுத்து, பவுட்ரை எடுத்து வந்த மேஜர், தப்பிக்க முடியாதவாறு நினைவுகளில் சிக்குண்டார்.

கை டென்னிஸ் மேஜைக்கு பவுடர் தூவிக் கொண்டே இருந்தது. மனசு நடந்து முடிந்து காலியான போர்க்களங்கள், வயசுப் பெண்கள், பிராந்திக் கடைகள், கலந்துகொண்ட விருந்துகள் என்று குதித் தாண்டாகக் கட்டவிழ்த்துத் தாண்டிப் பறந்தது.

"சிவராமா.. இப்ப கூட உனக்கு வயசாயிடலேடா! இத்தனை நாள் ஒண்டிக்கட்டையாக் குடும்பத்துக்கு ஒழைச்சே. அது வேற. நெழல் தாழ்ந்துண்டு போறச்சே ஒரு துணை வேணும். எத்தனையோ பொண்ணுங்க அடுக்களையிலேயிருக்கற அஞ்சறைப் பொட்டியாட்டம் மங்கி மடிஞ்சுண்டிருக்கு. 'ஊம்'னு ஒரு வார்த்தை சொல்லுடா..." தன் எண்பதாவது வயசிலாவது மகனை மாப்பிள்ளைக் கோலத்தில் பார்க்க விரும்பிய அம்மா.

"அட போம்மா..! இன்னமே ஒரு கல்யாணம்னு மணையிலே ஒக்கார்ந்து நாலு பேரு மாப்பிள்ளைக்கு வயசு அம்பது தாண்டிடுச்சாமேன்னு கிசுகிசுக்கற அவஸ்தையெல்லாம் என்னாலே சகிக்க முடியாது"

ஐம்பதைத் தாண்டுவதில் கூட இல்லாத பயம் ஐம்பது தாண்டிவிட்டதை ஒப்புக் கொள்வதில் இருக்கிற மாதிரி அவருக்குப் பட்டது.

அது பயமா?

பவுடர் டின்னை எடுத்துக்கொண்டு மீண்டார். டிராயரில் அதை வைத்து மூடும்போது தவிர்க்க முடியாதபடி நாராயண் ஞாபகம் வந்தது.

அவன் ஏன் வருவதில்லை?

"நான் ஒரு 'போர்' என்று நினைக்கத் தொடங்கி விட்டானோ?'

நாராயண் சிரித்துச் சிரித்துப் பேசுவான். அவன் சிரித்துக் கொண்டிருந்தால் அறையில் ஒரு ஜீவகளை நிரம்பி வழியும். இளமையும் வீரியமும் ஒளியும் உல்லாசமும் நிறையும்.

மேஜர் தன் பழைய புராணத்தை ஒரு போதும் புரட்டமாட்டார். அன்று படித்த ஜோக், அன்று படித்த புத்தகம், அன்று ரசித்த பாடல், டீ. வி. யில் அன்று கண்ட நிகழ்ச்சி என்று பிடிவாதமாக நிகழ்காலத்திலேயே இருப்பார்.

"என்னங்க மேஜர் ஸார். ஒங்க ஆர்மி எக்ஸ்பீரியன்ஸையே நீங்க சொல்றதில்லே?"

"பாஸ்ட் ஈஸ் பாஸ்ட். அந்தக் காலம் நல்லாயிருந்தது. ஐ என்ஜாய்ட். தட்ஸ் ஆல். இதிலே சொல்லிக்க என்ன இருக்கு?"

நாராயணின் வக்கீல் தாத்தா இன்னும் உயிரோடிருந்தார். அம்மா மாதிரி. ஒரு முறை நாராயண் அவரை வீட்டிற்கு அழைத்துப் போனான். பிலு பிலுவென்று பிடித்துக் கொண்டார். ஒரு மணி நேரம். தனக்கே எண்பது வயசான ஆயாசத்தோடு, விட்டால் போதும் என்று விடுபட்டு வந்தார் மேஜர்.

முதுமை. அது புலம்புகிறது. வாழ்வின் விளிம்பு நெருங்கி வந்து விட்டதை உணர்ந்து, எல்லாமே கை நழுவப்போகிறது என்ற அச்சத்தில் புலம்புகிறது. தான் வாழ்ந்த ஞாபகத்தைப் பெரிசுபடுத்தித் தன் வரம்புகளைப் பிரமாதப்படுத்தித் திருப்தி தேட முயற்சி செய்கிறது.

தோள்களைக் குலுக்கிக் கொண்டு விடு திரும்பினார் அன்று. மேஜரால் சகிக்க முடியாத விஷயம் முதுமையல்ல. முதுமை முடக்கிவிட்டது என்று உணரும் கொடுமை.

அதற்காகவே அவர், தன் வயது ஒத்தவர்களைத் தவிர்த்தார். பி.பி. என்ன, டயாபெடீஸ் ஷுகர்கவுண்ட் என்ன என்ற கேள்விகளைத் தவிர்க்கவிரும்பினார். டாக்டர்களிடம் அதற்காகவே அவர் போக விரும்புவதில்லை.

கூடுமானவரை ஆரோக்கிய விதிகளை அனுசரித்துக் கொண்டு கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து வந்தால் போதும். அப்படி தன்னை மீறி ஒரு நாள் மரணம் வந்தால் வந்து போகட்டும் என்று முதுமைத் தொடர்புகளிலிருந்து விலகிவிலகி வந்தார் மேஜர்.

அதற்காகவே இந்த இளைஞர்களிடம் பழகினார். நாராயண் நெருக்கமாகப் பழகினான். நிறைய யோசனை கேட்பான்.

வெளியே யாரோ மாடிப்படியேறும் காலடி ஓசை கேட்டது.

கழுத்தில் ஒரு பொத்தான் விடாமல் முழுக்க மூடியவாறு கையில் கோட்டை மடித்துப் போட்டுக் கொண்டு ஒரு மத்திய வயது ஆசாமி நுழைந்தார் — புதியவர்.

"எக்ஸ்க்யூஸ் மீ."

"கம் இன். உள்ளே வாங்க! பீ ஸீடட்" என்று ஒரு பிரம்பு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார் மேஜர்.

"நான் கடலூர்லேயிருந்து இங்கே ட்ரான்ஸ்ஃபர் ஆகி வந்திருக்கேன்."

"ஐ ஸீ."

"நல்ல வீடு தேடிண்டிருக்கேன். கெடைக்

மங்கையர் மலர்

செப்டம்பர் '87

நவராத்திரி சிறப்பிதழ்

ஒரு

'ஆடைப் புரட்சி'

வருகிறது!





நவராத்திரியை

'தேசீய'


விழாவாக்கலாம்!



சிருஷ்டி

— அனுராதா ரமணனின்

குறுநாவல்



சிருங்கேரி

சாரதா தேவி

வண்ணப்படம்

— சிருங்கேரி பற்றிய

கட்டுரை

— மற்றும் நவராத்திரி பற்றி ஏராளமான

சிறப்புச் செய்திகள்.

அதிக பக்கங்கள்!

ஜோக் எழுதுங்கள்! பரிசு ரூ. 200/-



'சிரிப்பு சிறந்த டானிக்' என்று எந்த டாக்டர் சொன்னாரோ என்னவோ, டாக்டர்களை வைத்தே ஜோக் எழுதுவதில் மன்னர்களாகி விட்டோம்! எங்கே, நீங்களும் டாக்டரைக் கிண்டல் செய்து ஒரு ஒரிஜினல் ஜோக் எழுதுங்கள் பார்க்கலாம்! கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமாகும் சிரிப்புக்களுக்கு ரூ. 200 சன்மானம் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும். உறையின் மேல் "டாக்டர் ஜோக்" என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 16.9.87

என் பெயர்: . . . .

விலாசம்: . . . .

. . . .

கலே. ஒங்க பக்கத்து வீடு காலியாயிருக்குன்னு சொன்னா."

அதற்குள் மார்க்கெட்டிற்குப் போன காமாட்சி திரும்பி வந்தாள்.

"போஸ்ட் ஆபீஸ்லே ஒரே கூட்டம். பெரிய க்யூ நிற்கறது. நாளைக்குக் காலையிலே வீட்லேயிருந்து வர்றப்போ பண்ணிட்டு வந்துடறேன்" என்றாள்.

'சரி.. உள்ளே போ' என்று சொல்ல வாயெடுத்த மேஜர் நிறுத்தி, வந்தவர் சொன்ன தகவலில் ஆச்சரியப்பட்டுப் போனார்.

"பக்கத்து வீடு ஒண்ணும் காலியில்லையே?"

"இல்லே சார்... வெளியே பூட்டியிருக்கு! டு லெட் போர்ட் போட்டிருக்காங்க."

"என்ன காமாட்சி?" என்று திரும்பினார்.

"ஆமா அது காலியாயி ஆறு நாளாகப் போகிறது!"

"எங்கேயோ ஊருக்குப் போயிருக்கான்னு நான் நெனச்சேன்."

பக்கத்து வீட்டுக்காரர்கள் காலி செய்தது கூடத்தெரியாத அத்தமாடியறைத்தனிமையை நொந்து கொண்டார்.

"கீழே குடியிருக்கற வாளைக்கேளுங்கோ! அவங்களுக்கும் அடுத்த ஹவுஸ் ஓனருக்கும் தொடர்பு உண்டு."

"தாங்க்யூ" என்று விடை பெற்றார் வந்தவர்.

கொஞ்சம் உலாவிவிட்டு வரத் தோன்றியது. வழியில் எங்காவது நாராயண் தட்டுப்படலாம் என்று ஊமை எதிர்பார்ப்பு.

சொல்லி வைத்த மாதிரி தெருத்திருப்பத்திலேயே நாராயண் சைக்கிள் மிதித்து அவர் தெருவைக் கடந்து கொண்டிருந்தான். அவரைப்பார்த்ததும் பிரேக் போட்டுக் கீழே இறங்கினான். முகத்தில் அவனுக்குப் பொருந்தாத வருத்தமான புன்னகை.

"என்ன நாராயண், நாலஞ்சு நாளா ஆளைக் காணோம்.?"

"ஒண்ணுமில்லே ஸார்! அந்த அடுத்த வீட்டுக்காரங்க நான் அந்தப் பெண் கிட்டே 'ப்ரண்ட்லியா பழகினதைப்பார்த்து மிரண்டு காலி பண்ணிட்டாங்க."

"யார் சொன்னது?"

"அந்தப் பெண்"


"ஸோ வாட்? இப்பத்தான் அவங்க இல்லையே. நீ வரலாமே"

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்! என்னால அந்த ஷாக்லேருந்து விடுபட முடியலே. வந்தா ஒவ்வொரு முறையும் அந்த ஜன்னல் என்னை ரொம்ப உறுத்தும் ப்ளீஸ்... நீங்க தப்பா எடுத்துக்க வேணாம்."

மேஜர் புரிந்து கொண்டார்.

முதுமையைப் போலவே இளமைக்கும பிரச்னை உண்டு. இப்போது நாராயணுக்கு ஒரு குற்றம் சுமக்கும் பிரச்னை.

"ஆல்ரைட்" என்று அவன் தோளைத் தட்டிக்கொடுத்து விட்டு 'மேஜர் மேலே நடந்தார். அவரவர் பிரச்னையை அவரவர் சந்திக்க வேண்டும் தான்.



வேண்டாம் கத்திச் சண்டை!

ஒருவர்: இனி அமிதாப் கத்திச் சண்டைப் படத்தில் நடிக்க மாட்டாராம்?

அடுத்தவர்: ஏன்?

முதலாமவர்: கத்தி வீச்சின் போது "ஸ்விஷ்" "விஷ்" என்று சத்தம் வருதாம்.


— நூர்

தலைவர்: கங்கா — காவேரி இணைப்புக்கு நான் தான் தடை என்று பொய்ப் பிரசாரம் நடைபெறுகிறது. அவர்கள் இணைந்தால் எனக்குத் தான் அதிக சந்தோஷம். ஆனால் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையே!

தொண்டர் 1: தலைவர் என்ன கூறுகிறார்?

தொண்டர் 2: இது தெரியலையா? தனது பெரிய வீட்டையும் சின்ன வீட்டையும் பற்றித்தான் பேசுகிறார்!

— நூர்



"இன்னைக்குப் படப்பிடிப்புக் குழுவினருக்கு மீன் வறுவல் போடத் தயாரிப்பாளர் ஏற்பாடு பண்ணிட்டார்!"

"ஏதுங்க அவ்வளவு மீன்?"

"ஹீரோ தூண்டில் போடற காட்சி 74 வது டேக்கில்தான் ஓ.கே. ஆச்சு!"

— மணியன் தர்மலிங்கம்.

"உங்க ஆபீஸ் டைப்பிஸ்ட்டுக்கு அவ்வளவு லவ் லெட்டர் எழுதறுங்களா?"

"ஆமா, லெட்டர் பாக்ஸுக்குப் பக்கத்திலேயே ஒரு லவ் லெட்டர் பாக்ஸ் வெச்சுட்டாங்கன்னு பார்த்துக்கோயேன்!"

— இளை அ. கதிர்வேல்



"எங்க வீட்டில் டி. வி. மட்டும் திருட்டுப் போனதுக்கு என் கணவரும் உடந்தையா இருந்திருப்பார்ன்னு எனக்குத் தோணுது!"

"எப்படிச் சொல்றே?"

"டிபன் செய்யாம டி. வி. பார்க்காதே'ன்னு தினம் எச்சரிச்சுக்கிட்டு இருந்தார்டி!"

— மணியன் தர்மலிங்கம்

அவன்: "நாலு வருஷமா எங்கப்பா தினம் உயிரை எடுக்கிறார்!"

இவன்: "கல்யாணம் செய்துக்கச் சொல்லியா!"

அவன்: "ஊஹும். 'இந்த வருஷமாவது பத்தாம் வகுப்பு பாஸ் செய்கிற வழியைப் பார்'னு!"

— உ. ராஜாஜி



கருணாநிதி டைரக்டர் ஆகப்போகிறாராமே?

* என். சத்தியநாராயணன், குரோம்பேட்டை.

? மனிதனுக்குப் பசியே இல்லை என்றால்...?

! சத்துணவுத் திட்டம் வந்திருக்காது. வோட்டுக்கள் குவிந்திருக்காது!

* மு. மதிவாணன், அரூர்.

? கேரளாவில் போதைப் பொருட்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதைச் சுட்டிக் காட்டக் கஞ்சாவை சட்டசபையிலேயே எடுத்துக் காட்டிய எதிர்க்கட்சி உறுப்பினரின் செயலைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

! நல்லகாலம் விபசாரம் அதிகரித்திருப்பதாகச் சட்டசபையில் சுட்டிக்காட்டப் படவில்லை!

* பா. நாராயணன், சென்னை — 40.

? சென்னை தமிழக தலைமைச் செயலகத்துக்கு எதிரிலேயே ஒரு தோட்டத்தில் ஐந்து லட்ச ரூபாய் பெறுமானமுள்ள கள்ளச் சாராயம் பதுக்கி வைக்கப்பட்டது குறித்து...?

! 'கோட்டையிலே என் குடியிருப்பு' என்று கள்ளச் சாராயப்புட்டி பாடுவது போல் கார்ட்டூன் போடலாம்.

* ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி.

? உபராஷ்டிரபதி எஸ். டி. சர்மா போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரே?

! ஜனாதிபதி தேர்தலிலேயே எதிர்க்கட்சிகளின் 'தம்' தீர்ந்து போய் விட்டதோ என்னவோ! சர்மாவுக்கே தங்கள் ஆதரவையும் தெரிவித்து விட்டனர்! என்ன இருந்தாலும் சிறுபான்மையினரின் பிரதிநிதியாக யாரேனும் ஒருவருக்குக் கிடைத்திருக்க வேண்டிய வாய்ப்பைத் தராமல் போனது மரபு மீறல் மட்டுமல்ல; வருந்தத்தக்க தவறு தான்.

* இராமலிங்க், தக்கலை.

? இன்றைய செய்தித்தாள்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! பத்திரிகைக் காகித விலை உயர்வு என்ற நிதர்சனத்துக்கும் வாசகர்கள் பத்திரிகையின் விலை ஏற்றத்தை ஒப்புக் கொள்வார்களா எதிர்ப்பார்களா என்ற கவலைக்கும் இடையில் ஊசலாடும் நிலையில் உள்ளன



* கருணை ......

* போட்டியின்றி......



அவை. பரிதாபமாகத்தான் இருக்கிறது.

* பாளை அசோக், திருச்சி.

? பத்திரிகையாளர் ஜி. கே. ரெட்டியின் மறைவு குறித்து?

! அவர் ஆங்கிலத்தைக் கையாண்ட திறமையும், அதனால் உப்பு சப்பற்ற விஷயத்தைக் கூட ரசமாக எழுதினால் விழுந்து விழுந்து படிக்கச் செய்யலாம் என்று உணர்த்திய ஆற்றலும்; இதற்கு மறுபுறமாக முக்கியமான செய்திகளின் பின்னணியை நுணுகி

நோக்கி ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்ட சாகசமும் மெச்சத் தக்கவை.

* ஜி. சுப்பிரமணியன், நெய்வேலி — 2.

? மனச்சாட்சிக்குப் பயந்தால் போதாதா? ஊருக்கும் உலகுக்கும் வேறு பயப்பட வேண்டுமா?

! கொஞ்சம் பொறுங்கள். ஜயேந்திர சரஸ்வதி கண்டுபிடிக்கப்பட்டதும் உங்களுக்கே புரிந்து போகும்!

* எம். நாகேந்திரகுமார், ஒசூர்.

? கலைஞர் கருணாநிதி டைரக்டராகப் போகிறாராமே?

! தமிழ்நாட்டை டைரக்ட் செய்கிற வாய்ப்புக் கிட்டும் வரை சினிமாவையாவது டைரக்ட் பண்ணலாமே என்ற எண்ணமாக இருக்கும்!

* சைதை வி. முரளி, சென்னை — 15.

? எந்த டி. வி. நிகழ்ச்சியும் பார்க்கும்படியாக இல்லை என்று நிலைய இயக்குனர் அகிலா சிவராமன் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறாரே, இது எதைக் காட்டுகிறது?

! பார்க்கும்படி நிகழ்ச்சிகள் இல்லாத போதே மக்கள் விழுந்து விழுந்து பார்க்கிறார்களே, ஆக, பார்க்கும்படியான நிகழ்ச்சிகளையே தந்தால் டி. விக்கு மக்கள் அடிமையாகி விட மாட்டார்களா? அதைத் தவிர்க்கத்தான் டி. வி. நிகழ்ச்சிகள் இன்றுள்ளவாறு தயாரிக்கப்படுகின்றன. அந்தக் கருணையைத்தான் இயக்குனரின் பதில் உணர்த்துகிறது!

* மதுரை ஜோ, மதுரை.

? கல்லூரி ஆசிரியர் போராட்டம் பற்றிய கேள்விக்கு வேலை நிறுத்தத்தில் நியாயம் இல்லை என்று கூறியுள்ளீர்கள். நியாயமானதைக் கூடப் போராடித்தான் பெற வேண்டும் என்ற சூழ்நிலைக்கு நம்மைக் கொண்டு வந்ததே நம் அரசுதானே?

! உங்கள் கேள்வியில் ரொம்ப நியாயமிருப்பதாலும் தராசிடம் நியாயத்துக்குப் போராட அவசியமில்லாததாலும், மிஸ்டர் ஜோ, பிடியுங்கள் இந்த வாரப் பரிசை!

* ஆர். ஜே. பாலன், சிவகங்கை.

? இனிமேல் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று சொல்லக் கூடாது மாவட்டப் பணியாளர், மாவட்ட அலுவலர் என்றுதான் கூறவேண்டும். இதற்குச் சட்டமியற்றப்போகிறோம் என்று சபாநாயகர் பி. எச். பாண்டியன் கூறியிருக்கிறாரே?

! அவர் இனி அவைத் தலைவர் இல்லை அவை ஊழியர்; சபாநாயகர் அல்ல, சபா பணியாளர் என்று சொல்லலாமா?

* பெரியகுளம் பாசு, உத்தரமேரூர்.

? மாவட்ட ரீதியாக மலர் வெளியிடுகிறீர்களே, எதிர்பார்த்த பலன் ஏற்பட்டுள்ளதா?

! ஊகும், எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே தான் ஏற்பட்டுள்ளது.

* ஸ்ரீ மனோ பாரதி, பாண்டிச்சேரி.

? ஒரு மனிதனுக்கு நம்பிக்கையின் பலன் எப்போது தெரியும்?

! சென்னை, அடையாறு, அனந்த பத்மநாப சுவாமி கோயிலில் முடிவுற்ற 72 மணி நேரத் தொடர் இசை யக்ஞத்தின் நோக்கம் பகுதி அளவேனும் நிறைவேறுமானால், தெரியும்!




* டைரக்டர்?



* தலைவரா? ஊழியரா?

* நுண்ணிய நோக்கு...





* மனச்சாட்சி மட்டுமே...

* ரூ. 15 பரிசு பெறுபவர்:


மதுரை ஜோ,
5/197, தாசில்தார் நகர்,
மதுரை — 20.

கவர்னர் ஜெனரல் மனம் — கல்லுக்குள் ஈரம்

5

கவர்னர் ஜெனரல் ஒரு முறை சென்னைக்கு விஜயம் செய்திருந்த போது ஆளுனர் மாளிகை வாசலில் ஆயுதமேந்திய ஒரு காவலன் அவர் ஏறி வந்த காரை நிறுத்தி விட்டான். அதுமட்டுமல்ல, டார்ச் அடித்து உள்ளே இருப்பது யார் என்றும் பார்த்தான்!

இந்த அசம்பாவிதம் எப்படி நடந்தது? தமது நண்பர்களையும் உறவினர்களையும் பார்க்கச் சென்ற கவர்னர் ஜெனரல், அரசாங்க மாளிகையின் காரைப் பயன்படுத்தாமல் ஒரு நண்பரின் காரில் சென்றதால்தான்! தமது நண்பர்கள், உறவினர்களின் எளிய வீடுகளின் வாசலில், அரசு மாளிகையைச் சேர்ந்த பிரும்மாண்டமான ஹம்பர் கார், கவர்னர் ஜெனரலின் ஆட்சிச்



● ஜி. டி. பிர்லா

சின்னங்களைத் தாங்கி நின்றால் அவர்களுக்குத் தர்மசங்கடமாக இருக்கும் என்று ஸி. ஆர். நினைத்தார். பார்க்கப் போனால் அரசு மாளிகையைச் சேர்ந்த கார் வந்து தங்கள் வீட்டு வாசலில் நின்றிருந்தால் ஸி. ஆரின் நண்பர்களுக்குப் பெருமையாகவே இருந்திருக்கும்! உண்மை என்னவென்றால் அவர்களுடைய எளிய வீடுகளுக்கு அரசின் பிரும்மாண்டமான காரில் வந்து இறங்குவது ஸி. ஆருக்குச் சங்கடத்தை அளித்தது என்பதுதான்!

ஒருமுறை நாகபுரியிலிருந்து தில்லிக்குப் பறந்து கொண்டிருந்தார் கவர்னர் ஜெனரல். அப்போது திடீரென்று விமானத்தின் கதவு திறந்து கொண்டு விட்டது! காற்று வேகமாக உட்புகுந்து விமானத்தைச் சாய்த்தது.



விமானக்குழு பரபரப்புடன் இயங்கி, திறந்து கொண்ட கதவை மூட முனைந்தது. "எதற்கு இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணுகிறீர்கள்?" என்று தமது ஆசனத்தில் நிம்மதியாகச் சாய்ந்திருந்தவாறே கேட்டார் கவர்னர் ஜெனரல். "வெள்ளத்தில் சிக்கிய மக்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போடும் விமானங்களும் பாராசூட் அணிந்து குதிக்கும் வீரர்களைத் தாங்கிச் செல்லும் விமானங்களும் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தானே பறக்கின்றன? என்ன ஆகிவிடும்?"

1948 முடிவுறும் தருவாயில் ஸி. ஆர். தமது அன்புக்குரிய ஆசிரியர் டெய்ட்டின் மனைவிக்கு எழுதினார்: "நான் உங்கள் கணவருக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்காமல் 1948 ஆம் ஆண்டிடமிருந்து விடைபெற எனக்கு மனம் வரவில்லை!"

ஜனவரியில் ஸி. ஆரின் இளமைக் காலத் தோழர், நவரத்ன ராமராவ் விருந்தினராகச் சில நாட்கள் வந்து தங்கினார். பெங்களூர் சிக்பெட்டில் ஒரு சின்னஞ்சிறு உணவு விடுதியில் தாங்கள் ஒருவரை ஒருவர் முதன்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV

ராஜ்மோகன் காந்தி


முதலாகச் சந்தித்துக் கொண்ட நிகழ்ச்சியை அவர்கள் அப்போது நினைவு கூர்ந்திருக்க வேண்டும். திருமதி மவுண்ட் பேட்டனும் அவர்களது குமாரி பமேலாவும் வந்து சில காலம் தங்கினர். எல்லோரையும் கவனித்து, உபசரிக்கும் பொறுப்பை ஸி. ஆரின் மகள் நாமகிரி நன்கு நிர்வகித்தார். நாமகிரிக்கு விஷய ஞானமும், சுற்றிலும் நடப்பவற்றைக் கூர்ந்து கவனிக்கும் திறனும் இருந்ததை விருந்தினர் உணர்ந்தார்கள். ஆனால் சில அயல் தேசத்தவரின் வித்தியாசமான பண்பாடுகள் நாமகிரியைச் சங்கடத்தில் ஆழ்த்தின. உதாரணமாக கவர்னர் ஜெனரலால் விருந்துக்கு அழைக்கப்பட்ட சில அயல்நாட்டு ராஜதந்திரிகள் நாமகிரியின் கரத்தைப் பற்றி முத்தமிட்டு மரியாதை தெரிவித்தனர்! அவர்கள் தலை மறையும் வரை காத்திருந்து நாமகிரி அவசரம் அவசரமாக, சோப்புப் போட்டுக் கைகளைக் கழுவிக் கொள்வார்!

ஒரு சமயம் கவர்னர் ஜெனரலிடம் ஓர் அகதி ஒரு விண்ணப்பத்தை நேரில் அளித்தார். அகதிகள் புனர் வாழ்வு அமைச்சருக்கு எழுதப்பட்ட கடிதம் அது. ஸி. ஆர். சொன்னார்: ''பிரிட்டனுக்குப் போக வேண்டுமானால் ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டா போவது? சூயஸ் கால்வாய் திறந்துதானே இருக்கிறது? தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன்?'' நாத் தழுதழுக்க அகதி பதிலளித்தார்: ''நாங்கள் நரகத்தைக் கடந்து வந்திருக்கிறோம்! நெருப்பில் புகுந்து வெளியேறியிருக்கிறோம்! யார் எங்களுக்கு நிவாரணம் அளிக்க முடியும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை!''

இந்த உருக்கமான பேச்சைக் கேட்டதும் ஸி. ஆர். உதவியாளரை அழைத்து அந்த உறையைத் தந்து நேரடியாகச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சேர்ப்பித்து விட்டு வருமாறு பணித்தார்.

ஸி. ஆர். எழுதுவதற்கும் அவகாசம் ஏற்படுத்திக் கொண்டார்! தமிழில் சில கட்டுரைகள் எழுதினார். ஹிந்துஸ்தான் டைம்ஸில் பெர்னார்ட் ஷாவின் ஒரு நூலுக்கு ஆங்கில விமர்சனம் எழுதினார்!

பழைய நண்பர்கள் சிலரேனும் அவரது இந்தப் புதிய பதவியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார்களோ? சிலர் முயன்று தோற்றார்கள்! சிலர் ஸி. ஆரை நன்கு அறிந்திருந்ததால் அத்தகைய முயற்சியிலேயே இறங்கவில்லை! 'சிலருக்கு மட்டும் ராஜாஜியிடம் செல்வாக்கு அதிகம்' என்று யாரும் பேசுவதற்கு இடமளிக்காத வகையில் ஸி. ஆர். நடந்து கொண்டார். இதன் விளைவு என்னவென்றால், தமது நெருங்கிய தோழர்களாக இருந்த சிலரின் — முக்கியமாக அவர்கள் பணக்காரர்களாக இருந்தால் — அழைப்பை ஏற்பதும் அவர்களுக்கு அழைப்புத் தருவதும் ஒரு பிரச்னையாயிற்று. இதில் மிகுந்த முன்னெச்சரிக்கை காட்ட வேண்டியதாயிற்று.



பெர்முடா (Bermuda) தீவில், டெலிபோன் டைரக்டரியில், பெயர், விலாசம், டெலிபோன் நம்பர்களைத் தவிர கூடுதலாகக் காணப்படும் ஓர் ஐயிட்டம்: டெலிபோன் சொந்தக்காரர்களின் செல்லப் பெயர்கள்! கிருஷ்ணமூர்த்தியை வீட்டிலும் நண்பர்கள் வட்டத்திலும் கூப்பிடும் 'கிச்சாமி' என்ற பெயரும் டைரக்டரியில் இருக்கும்!

நன்றி: எக்ஸ்பிரஸ்: எஸ். ராமன்

இதனால் மனம் புண்பட்டுப் போனவர்களில் ஜி. டி. பிர்லா ஒருவர். தமக்குத் தெரிந்த, தம்மை நன்கு அறிந்த ராஜாஜி, கவர்னர் ஜெனரலான பின் இப்படியொன்று தம்மை ஒதுக்குவதாக அவர் கருதினார். இது ஸி. ஆருக்குத் தெரிய வந்தபோது தமது சொந்த நட்புணர்ச்சி மாறவேயில்லை என்பதை உணர்த்தும் முகமாக ஜி. டி. பிர்லாவையும் அவரது மூத்த சகோதரரையும் கவர்னர் ஜெனரல் மாளிகையில் விருந்துக்கு வருமாறு அழைத்தார். ஆனால் இதற்குள் மனம் கசந்து போயிருந்த பிர்லா, இந்த அழைப்பை ஏற்காமல் மறுத்து விட்டார்!

இப்போது கவர்னர் ஜெனரலின் மனம் புண்பட்டுப் போயிற்று. அவர் என்ன நினைத்தார் என்பதை அவரே பிறிதொரு சமயம் பிர்லாவிடமே கூறினார். ''இதே அழைப்பு ஓர் ஆங்கிலேய கவர்னர் ஜெனரலிடமிருந்து வந்திருந்தால் பிர்லா இப்படி நடந்து கொண்டிருக்க மாட்டார்!'' இதற்கு மறுபுறமாக பிர்லா தமது நண்பர்களிடம் இவ்வாறு கூறினார்: ''ஆண்டாண்டு காலமாக நெருங்கிய நண்பனாக இருந்த ஒருவனை அவன் தொழில் வர்த்தகத் துறையைச் சேர்ந்தவன் என்ற ஒரே காரணத்துக்காகக் கவர்னர் ஜெனரல் ஒதுக்க வேண்டுமா என்ன?''

ராஜாஜி — பிர்லா மனத்தாங்கல் 1950 இன் பிற்பாதியில் கூட நீடித்தது! கவர்னர் ஜெனரல் பதவியை ஸி. ஆர். துறந்து எட்டு மாதங்களுக்குப் பிறகு மனம் விட்டு இருவரும் கடிதப் பரிமாற்றம் செய்து கொண்டதற்கப்பால்தான் கசப்புணர்வு நீங்கியது. இருவருமே அந்தச் சம்பவத்தைத் தங்கள் தங்கள் கோணத்திலிருந்து பார்த்துக் கடிதம் எழுதினார்கள். கடைசியில் ஸி. ஆர். எழுதினார்: ''தவறே செய்யாதவன் என்று யாருமே இருக்க முடியாது. இப்போது தவறு யாருடையது என்ற ஆராய்ச்சி வேண்டாம். தவறு யாருடையதாக இருந்தாலும் சரி, அதை மறந்து விடுவோம். என்னால் மறக்க முடியும் என்று நினைக்கிறேன்!''

கவர்னர் ஜெனரல் ராஜாஜி, தமது தென்னாட்டுப் பயணம் ஒன்றின் போது ஈ. வெ. ராவைச் சந்தித்தது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது!

(தொடரும்)



கிருஷ்ணன் வந்தான்



ஓர் ஏணியை எடுங்கள்; பரண் மீது ஏறுங்கள்! தூசியைத் தட்டி... அச்சு... அச்சு... பணமா பாசமா இத்யாதி பழைய படங்களைக் கண்டுபிடியுங்கள். அப்படித் தட்டி, இப்படி வெட்டி, கொஞ்சம் சேர்த்து, கொஞ்சம் குறைத்து... கிருஷ்ணன் வந்தானுக்குத் திரைக்கதை ரெடி!

எவர்க்ரீன் நம்பியார் மோசக்காரன். தன்னை நம்பிப் பொறுப்பைக் கொடுத்த பணக்கார நண்பனைப் பேராசை பிடித்து, ஏமாற்றி, அவனை ஒட்டாண்டியாக்கி நடுத் தெருவில் நிறுத்த, அவருடைய சொந்தப் பிள்ளை 'அலேக்' ஸ்டைலில் ஓர் ஏழையைப் பணக்காரனாக அறிமுகம் செய்து வைத்து, அப்பாவின் அநியாய சொத்தைக் காலி செய்வதுதான் கி. வந்தான்!

தேங்காயை இரண்டாகப் பட்டென்று உடைத்தால் முன்பாதி, பின்பாதி.

முன் பாதியில்: சிவாஜி கணேசன் ரப்பர் மாதிரி வசனங்களை இழுத்து இழுத்துப் பேசி (நீங்களா சிவாஜி, இப்படி?) கண்ணீர் சிந்தி, மலை மேடுகளில் ஸோலோ பாட்டுப் பாடி சோகத்தைச் சோதனையாக்குகிறார். அதுவும் அந்த 'அடேடே' வசனம் உடம்பெல்லாம் அரிக்கிறது!

பின் பாதியில்: தியேட்டரில் பிளாக் டிக்கெட் விற்கும் தேங்காய் சீனிவாசன், பெரிய கோமகவரனாக பிளைமூத் காரில் படைசூழ வந்து இறங்கியதும், குற்றாலத்தில் கொண்டு நிறுத்தி விட்டது போல் ஜிலுஜிலு, கலகல. சினிமா நியதிகளுக்குப் பணிந்து போன, பழகிப் போன சம்பவங்களாக இருந்தாலும், தேங்காயின் ஸ்டைலான ஜப்பான் உச்சரிப்புகளில் ஓய்வில்லாத வயிற்றுக் குலுக்கல்கள்.

மோகன், ரேகா கொஞ்சம் அசடு வழிந்து காதலித்து, இளமைக்கு ஊறுகாய்.

இளையராஜா இப்போதெல்லாம் பாடல்களையும் தாமே எழுத ஆரம்பித்து விட்டார். ஆறு பாடல்களில் மூன்றை இயற்றியது இளையராஜா! அப்படி ஒன்றும் மோசமாயில்லை என்பதையும் சொல்ல வேண்டும்.

தேங்காயின் சொந்தப் படம் என்பதால் தங்கவேலு, மேஜர் சுந்தர்ராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா என்று அவருடைய தலைமுறை ஆட்கள் அதிகம்.

செந்தில்தான் லாயர் சட்டநாதன், எம்.பி. பி. எஸ்! வாயில் வந்ததை உளறிவிட்டு, அதை மூடி மூடிச் சமாளிக்கும் ஐந்து நிமிடக் காட்சியில் தூள் கிளப்புகிறார்.

மொத்தத்தில்? என்றுதானே கேட்கிறீர்கள்.

இன்டர்வெல்லுக்கு அப்புறம் ஜாலியோ ஜாலி!

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.


俳句
ஹைக்கூ
பாலியெஸ்டர் சேலைகளும்
மற்றும் துணிகளும்
பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879


ஆம்ப்ரோ மில்க் பேஸ்
ஸ்கூல் குழந்தைகளின் பிஸ்கெட்
ampro
Milk Base
ampro
Milk Base
பாலில் உள்ள எல்லா ஊட்டச்சத்துக்களும் அடங்கியது.
Sista's-EIPL-141/87 TAM.B